Registered as a News Paper in Sri Lanka


பக்கம் 20 ரூபா 13/50

දිනමුරසු වාරමලර් மார்ச் 18 - 24, 2001

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 400

## மலையக மண்ணில்
## வஞ்சிக்கப்பட்ட தொழிலாளரின் வெஞ்சினப் போராட்டம்




சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## தடையால் இடையூறில்லை!

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

பிரித்தானியா விதித்துள்ள புலிகளின் தடைக்கு மத்தியிலும் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க புலிகளும் அரசாங்கமும் முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயம்.

பிரித்தானியா புலிகளைத் தடை செய்யுமானால், பேச்சுவார்த்தைகள் முறியநேரிடுமென புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தடைக்கு முன்னைய பேட்டியொன்றில் தெரிவித்திருந்தார்.

இருந்தபோதிலும், தடை காரணமாகப் பேச்சுக்களை முறித்துக்கொள்ளும் முடிவைக் கைவிட்டு, தொடர்ந்து பேச்சுவார்த்தையில் இறங்குவதற்கு விடுதலைப் புலிகள் முன்வந்திருக்கின்ற அதேவேளை, இலங்கை அரசாங்கமும் பிரித்தானியத் தடையுடன் பேச்சுவார்த்தையை அலட்சியம் செய்யாமல், பேச்சுக்களை முன்னெடுக்கத் தயாராக இருக்கிறது.

பிரித்தானியத் தடை பேச்சுவார்த்தைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளியாகிவிடாமல் தடுத்து இருதரப்பையும் பேச்சுவார்த்தையை நோக்கி முன்தள்ளுவதற்கு நோர்வே நடுவர் சொல்ஹெய்ம் மேற்கொண்ட இடையறாத முயற்சிக்கு நாம் நன்றிசொல்ல வேண்டும்.

அத்தோடு இந்தப் பேச்சுவார்த்தை தொடர்பாக இருதரப்பும் கொண்டிருந்த நிபந்தனைகளையும் பக்குவமாகக் கையாண்டு பேச்சுவார்த்தைக்குத் தடையற்றவையாக்குவது மிகச் சிரமமான காரியமே.

புலிகள் யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தி வந்தார்கள்.

யுத்தம் புரிந்துகொண்டிருக்கும்போது பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது முடியாத காரியமென புலிகள் தெரிவித்து வந்தனர்.

[illegible] ஒருதலைப் பட்சமான யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டிருந்தவுடன் அதைப் பலதடவை நீடித்தும் வந்துள்ளார்கள். பிரித்தானியத் தடையின்பின் யுத்த நிறுத்தத்தைக் கைவிட்டு விடுவார்களென பலரும் எதிர்பார்த்ததுபோலன்றி அதனைத் தொடர்கிறார்கள்.

ஆனால் மறுபுறம் அரசாங்கமோ, யுத்தம் தொடர்ந்துகொண்டிருக்கும்போதே பேச்சுவார்த்தைகளையும் நடத்தவேண்டுமென வலியுறுத்தி வருகிறது.

புலிகளின் யுத்தநிறுத்தத்தை ஏற்க மறுத்துவருகிறது. பேச்சுவார்த்தைக்கு வந்தபின் அப் பேச்சுவார்த்தைகளின் போக்கைப் பொறுத்து நம்பிக்கை ஏற்படின் யுத்தநிறுத்தத்துக்குச் செல்லலாமென்று அரசாங்கம் கூறுகிறது.

இவ்விரு முரண்பட்ட நிலைகளையும் பொது இணக்கமொன்றுக்கு கொண்டுவந்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கச் செய்வதென்பதே பிரதானமான விடயமாக நடுவர்களுக்கு இருந்தது.

நடுவரின் முயற்சியால் பேச்சுவார்த்தைகள் மிகவிரைவில் ஆரம்பிக்கும் கட்டத்தை அடைந்துள்ளது.

அதற்கான நன்றியை நோர்வே அரசாங்கத்துக்குத் தெரிவித்துக்கொண்டு இப் பேச்சுவார்த்தைகளில் ஏற்படக்கூடிய முட்டுக்கட்டைகளை தனது ராஜதந்திரத்தால் முறியடித்து இதனை வெற்றிகரமாக ஒப்பேற்ற வேண்டுமென வேண்டிக்கொள்வோம்.

மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை — என்றென்றும் அன்புடன், ஆசிரியர்.

# ஆன்மீகம்

## இறை வணக்கத்தின்போது கோபம் வேண்டாம்

ஒருவன் சிவபெருமானை நேரில் பார்க்க விருப்பம் கொண்டு ஹோமம் செய்தான். பாதி ஹோமம் நடந்து கொண்டிருக்கும்போது, "ஐயா உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும்" என்று வேலைக்காரன் ஒருவன் வந்து சொன்னான். ஹோமம் செய்தவருக்குக் கோபம். "நேரம் காலம் கிடையாதா? ஹோமம் முடிந்த பிறகுதான் பேசுவேன்!" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார்.

அதன்பிறகு மூன்று, நான்கு மணி நேரம் ஹோமம் மிகவும் சிறப்பாக நடந்தது. எனினும் சிவபெருமான் நேரில் காட்சி தரவே இல்லை. சோர்ந்து போனார் எஜமானர். "என்னவோ பேசவேண்டும் என்றாயே. இப்போது சொல்!" என்று வேலைக்காரனிடம் கேட்டார். "ஐயா... உங்களைக் காண ஜடாமுடியும், கமண்டலமும், கையில் மானும், மழுவும், புலித்தோல் ஆடையுமாக ஒருவர் வந்து காத்திருந்தார்.

இவ்வளவு நேரம் காத்திருந்துவிட்டு இப்போதுதான் கிளம்பிப் போனார். அதைச் சொல்லத்தான் அப்போது வந்தேன்" என்றான் வேலைக்காரன்.

ரீ.குணவர்த்தன, களுவாஞ்சிக்குடி.

## இவ்வுலக வாழ்க்கை அற்பமானது!



* (மனிதர்களே!) நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்; நிச்சயமாக இவ்வுலக வாழ்க்கையெல்லாம் விளையாட்டும், வீணும், அலங்காரமும்,(அது) உங்களுக்கிடையில் பெருமையடித்துக் கொள்வதும், செல்வங்களிலும் பிள்ளைகளிலும் (ஒருவருக்கொருவர்) அதிகப்படுத்திக் கொள்வதும்தான்; (இந்நிலை) ஒரு மழையைப் போன்றதாகும்; (அதன் மூலம் முளைத்த) பயிர்கள் நன்கு வளர்ந்து விவசாயிகளை அதிசயத்தில் ஆழ்த்தியது; பின்னர், அது காய்ந்து விடுகிறது; (அப்போது) அது மஞ்சளாகிவிடுவதை நீர் காண்கிறீர்; பின்னர், அது சருகுகளாகிவிடுகின்றது. (இவ்வுலக வாழ்க்கையும் அவ்வாறே இருக்கின்றது) மறுமையிலோ, (அவர்களில் பலருக்குக்) கொடிய வேதனையும், (சிலருக்கு) அல்லாஹ்வின் மன்னிப்பும், பொருத்தமும் கிடைக்கின்றன. ஆகவே, இவ்வுலக வாழ்க்கை (மனிதனை) மயக்கும் (சொற்ப) இன்பமேயன்றி வேறில்லை. (அல்குர்-ஆன். 57:20)

* எவர் (மறுமையை மறந்துவிட்டு) இம்மையை நாடுகின்றவராக இருக்கின்றாரோ, அவருக்கு அதில் நாம் நாடியதை, நாம் நாடியவருக்குத் துரிதமாகக் கொடுத்து விடுகிறோம்; பின்னர், மறுமையில் அ(த்தகைய)வருக்காக நரகத்தை நாம் ஆக்குகின்றோம். அ(த்தகையவர்) நிந்திக்கப்பட்டவராக, (அல்லாஹ்வின் அருளிலிருந்து) தூரமாக்கப்பட்டவராக அதில் நுழைவார்.

ஏ.எச்.ஏ.ஹுஸைன்-ஏறாவூர்.

## விசுவாசத்தில் நிலைத்திருங்கள்

ஒரு சிலர் தங்கள் வாழ்க்கையில் சந்தோஷமான நிகழ்வுகள் நடைபெறும்போது கடவுளை வாயார வாழ்த்திப் போற்றுவதையும், அதே போன்று ஏதாவது துக்கமான சம்பவங்கள் நடந்து விட்டால், "கடவுள் ஒருவர் இருக்கின்றாரா? கடவுளுக்கு கண் இல்லையா?" என்றெல்லாம் தூற்றுவதையும் அடிக்கடி கேள்விபடுவதுண்டு.

ஆண்டவர் இரக்கமும் கனிவும் உடையவர். எளிதில் சினம் கொள்ளாதவர். பேரன்பு கொண்டவர் (சங் 145-8)

பார்த்தீர்களா! இவ்வளவு இரக்கம் நிறைந்த ஆண்டவரை நாம் தூற்றலாமா? தன் சொத்து சுகம் அனைத்தையும் இழந்தான் யோபு. கடவுளை தூதித்து ஒரு வார்த்தை கூட அவன் பேசவில்லை. கடவுள்மீது உண்மையான விசுவாசத்தில் நிலைத்திருந்தான். அதன் பலன் செல்வ சுகத்தை பன்மடங்காக அதிகரித்தது மட்டுமல்ல நீண்ட நாட்கள் வாழவும் வரமருளினார். இரக்கத்தின் தந்தை இயேசு.

அன்பார்ந்தவர்களே! நாம் ஒவ்வொருவரும் யோபுவைப் போன்று இன்பத்திலும் துன்பத்திலும் உண்மையான விசுவாசத்தோடு நம் உள்ளங்களில் அவரை முழுமையாக ஏற்று வாழ்வோமாக.

ஜோசப் அருள்சாமி-திகனை.

## கவிதைப் போட்டி இல.400




எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 24.03.2001

கவிதைப் போட்டி இல.400
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

## கவிதைப் போட்டி இல.397



### பரிசுக்குரிய கவிதை

### ப(வ)லிக்குமா?

பரந்த ஏரியில், பட்டமரம்
போல்
பம்பரமாய் நின்று பாரை
பிடிக்க
தூண்டில் போடும்
பாமரனே!
பலிக்குமா உன் பாடு?
தொலைதூர சமாதானம்
போல்?

எஸ்.ஞானராஜா-வாழைச்சேனை.

### வாழவிடு...

ஓ மனிதா....
சீர் கெட்ட பூமியிலே-நீதான்
நிம்மதியின்றி சிதைவுற்று,
மாய்கின்றாய் என்பதற்காக,
வாயில்லா ஜீவன்களையும்
ஏன் வதைக்கின்றாய்?
பாவம் அதுகளையாவது...
சுதந்திரமாக வாழவிடு!

டி.கமலசுந்தரி-பசறை

### ஏன்?

கோவணத்தோடு கடலுக்குப்
-போவென்றால்,
அதுவுமில்லாமல் போய்
நிற்கிறாயே!

வெலிமடை
எம்.ராமமூர்த்தி.

### தப்பிக்கும் வரை

நாம்!
யுத்த தூண்டிலில்
மாட்டிய மீன்கள்!
தப்பிக்கும் வரை
நாம் சாப்பிட மீன்கள்
காத்திருக்க வேண்டும்!

பாத்திமா ஷர்மதா-
பலாங்கொடை.

### மிதப்பின் மீது

நாளை இந்த பொழுதும் புலருமா?
நான் போட்ட தூண்டிலில்
மீன் சிக்குமா?
ஏழை எங்கள் வாழ்வுதான்
மலருமா?

எ.ராசேந்திரன்-கீளியன்குடியிருப்பு.

### விரைந்து வா

புலம் பெயர்ந்து போனதால்-கடல்
வளம் இழந்த நாங்கள்; சொந்தக்
கலம் சென்று தூண்டில் போடும்
காலமே நீ விரைந்து வா..!

த.தமயந்தி-சாம்பல்தீவு.

### விலைவாசி

தேடினேன் வயிற்றுக்கு உணவு
கிடைத்ததோ கையில் தூண்டில்,
போட்டேன் மீனுக்கு வலை
மீன்களோ கூச்சலிட்டன "விலைவாசி
-விலைவாசி" என்று
ஓ.. ஏக்கத்துடன் திரும்பினேன்
கடலிலும் விலைவாசி ஆட்சியோ!

என்.ஜெ.விஜயகுமார்-மூதூர்.

### தமிழர் கனவுகள் போல்...

ஒரு சிறு இலக்காயினும்
என்னிடம் அகப்பட்டால்
சிறு துளியாய்த் தொட்டு
வளம் கூடத் துணையாகும்..
அதனால் முயல்கின்றேன்;
தமிழர் கனவுகள் போல்
இதுவும் கனவாகுமோ?!

சி.சிறிதர்-திக்கம்.

### பரிதாபம்

உறுமீன் வரும் என்று
வாடி இருக்கின்றாய்
பையா!
படகேறி வலை வீசிவர
உனக்கு ஓர் அருகதையுமில்லை.

சி.நிரோஷன்-வவுனியா.

### மறுப்பு

அகதி எனக்கு அனுமதியில்லையோ?
ஆழ்கடலில் மீன் பிடிக்க!
இரையாக மீனும் மறுக்கின்றதோ?
ஈன்றவள் பசி தீர்க்க!

எம்.வை.முபீது-எருக்கலம்பிட்டி.

### சிக்குவது எது?

கடலில் செல்லத் தடை
உள்ளாடை மட்டும் அணிய
தடையில்லை!
வலை வீச தடை எம்
உயிரை மட்டும் எடுக்க
தடையில்லை!
தூண்டிலிட்டேன் சிக்குவது
மீனா இல்லை என்
உயிருமா?

வாசுகி ஆனந்தன்-மட்டக்களப்பு.

### புத்திமதி

மீன்களே!
தூர ஓடுங்கள்
பாசம் இல்லாத பாதகன் ஒருவன்
கையில் பாசக்கயிற்றுடன்
நிற்கிறான்!
உங்களை இரையாக்க

எஸ்.ஜுலியட் ஷிவானி-
கோட்டைக்கல்லாறு.

# வாசக[ர்] சாலை

## நானூறாகிறது

நேற்று நடந்ததுபோல் இருக்கிறது,

1993ம் ஆண்டு மேமாத இறுதியில் சூடு... சுவை... சுவாரசியமாக ஒரு வார சஞ்சிகை வெளிவருகிறது என்று கேள்விப்பட்டு, கடையில் போய் ஒரு இதழை வாங்கினேன் 'ஏதோ ஒரு புதுப்பத்திரிகை' என்று சொல்லும் அளவுக்கே இருந்தாலும், சில அம்சங்கள் புதுமையாக இருந்தன.

அடுத்த வாரம் சஞ்சிகை வாங்கக் கடைக்குப் போனேன் ஏமாற்றம். பத்திரிகை ஒன்றை சொந்தமாகப் பெற முடியவில்லை. இரவல் வாங்கித்தான் படித்தேன்.

தொடர்ந்து பல வாரங்கள் பத்திரிகை கிடைப்பதில் சங்கடம் இருந்தது. இதனால் விற்பனையாளரிடம் முற்பணம் கட்டி ஒவ்வொருவாரமும் பத்திரிகை கிடைக்க ஏற்பாடு செய்தமையினால் வாரா வாரம் கிடைக்கிறது.


ஒவ்வொரு வாரமும் சுவை அதிகரித்த வண்ணமே இருந்தது. இருந்தும் முன்னாள் ஆசிரியர் 'அற்புதன்' திடீரென மறைந்ததும் ஒருசில வாரங்கள், மட்டுமே சிறிதளவு தளப்பநிலை காணப்பட்டது. ஆனால் விறுவிறு என்று 'தினமுரசு' தனது தனித்தன்மையை வெளியிட்டவண்ணம் தொடர்வது பெருமை அளிக்கிறது.

காலத்துக்குக் காலம் வாசகர்களுடைய கருத்தைக் கண்டறிந்து புதுப்புது அம்சங்களைப் புகுத்தி பத்திரிகையின் தரம் குறையாமல் பாதுகாத்து வருவதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இன்று 400வது முரசை எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கிறோம். தொடர்ந்தும் சூடு, சுவை, சுவாரசியம் குன்றாமல் நீடூழிவாழ்ந்து வாசகர்களாகிய எங்களை மகிழ்விக்க வேண்டும் என்பதே எமது பேரவா.

வாழ்க நீடூழி!

யாழ். சண்முகன்-தெகிவலை.





தமிழனுக்காகவே பிறந்துள்ள என் இனிய முரசுக்கு என் பல கோடி வந்தனங்கள்.

உன் இதழில் சூடு, சுவை, சுவாரசியம் அனைத்தையுமே சுமந்து வரும் உன்னை வாரம் தேறும் பார்க்காமல், சுவைக்காமல் இருக்கவே முடியாது. என்று ஞாயிறு வரும் என்று வழியோரம் விழிவைத்து காத்திருப்பேன். எனக்கு முரசில் பிரசுரமாகும் தொடர்கதைகள், சிறுகதைகள், கவிதைகள், 'காதில பூ கந்தசாமி' போன்றவை மிகவும் பிடித்திருக்கின்றன. முரசை தொட்டதும் எதை முதலில் வாசிப்போம் என்ற பிரச்சனையை உருவாகுமளவுக்கு ஆக்கங்கள் அனைத்தும் தரமானவை. மென்மேலும் என் இனிய முரசின் சேவை வளர மனமார வாழ்த்துகிறேன்.

வாழ்க உன் சேவை
வளர்க உன் பெருமை

சு.சிவப்பிரியா-பதிங்கஸ்கொடுவ.

## பாரதியார் அறிமுகம்

'எஸ்.டி.எஸ். கண்ட பாரதி'யில் எழுத்துச் சிற்பி தரும் கருத்துக்கள் மிகச் சிறப்பாக வருகின்றன. பாரதியாரின் திறமையை இத்தனை திறமையாக இந்திய எழுத்தாளர்கள் தானும் எடுத்துக் கூறவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

பாரதியாரை அவர் பிறந்த மண்ணே கண்டுணர முடியாதிருந்த போது, எமது நாட்டவரான அருட்திரு விபுலாநந்த அடிகளார் பாரதியாரை தமிழ் நாட்டாருக்கே அறிமுகப்படுத்தினார் என்பதனை எஸ்.டி.எஸ். மூலம் அறிந்து உண்மையில் பெருமைப் படுகிறோம்.

செ.கந்தவேள்-திருமலை.

என் அன்பின் முரசே!

பல்சுவை அம்சங்களை அள்ளி வழங்கி இளைய உள்ளங்களைக் கொள்ளை கொண்ட ஒரே பத்திரிக்கை முரசு. ஆர்வத்துடன் பார்க்கவும் வாசிக்கவும் செய்கின்றது. வாழ்த்துக்கள்

ரா.ரஞ்சன் விஜயசிங்க-இராகலை.

## அந்த நாள் இனி வருமோ.....?

'பார்த்தேன்.... எழுதுகிறேன்...' தரும் 'குத்தியன்' நகைச்சுவை கலந்து காலத்துக்கேற்ற சங்கதிகளைத் தருகிறார். வாசிக்கச் சுவையாக இருக்கிறது. அவர் கையாளும் எளிய தமிழ்ப் பாணி அவர் எடுத்தாளும் சம்பவத்துக்குப் பொருத்தமாக அமைகிறது.

இருபது வருடங்களுக்குப் பின்னர் லண்டன் சென்று திரும்பிய அவருடைய நண்பருடன், இளமைக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருவரும் இணைந்து போட்ட கூத்துக்களை இரை மீட்டிப்பார்ப்பது ஒருபுறம் சிரிப்பையும் மறுபுறம் கவலையையும் தருகிறது.

கடந்துபோன இன்பமான காலங்களை இன்று கனவிலும் கண்டுகளிக்க முடியாதிருக்கிறது. 'அந்த நாள் இனி வருமோ...?' என்று ஏக்கப் பெருமூச்சு விடத்தான் முடிகிறது.

கா.பீதாம்பரம்-(அச்சுவேலி வடக்கு) வெள்ளவத்தை.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.


மடல்கள் மற்றும் ஆக்கங்கள்-
உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல்(Fax):- 074-513266

# இலங்கை இனப்பிரச்சனை அரசியல் தீர்வு

## ஐரோப்பிய நாடுகளின் ஆதரவைத் திரட்டுவதில் ஜனாதிபதி ஆர்வம்

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்க ஐரோப்பிய நாடுகளுக்கு மேற்கொண்டுள்ள விஜயம், இலங்கை இனப் பிரச்சனைக்கு அரசின் தீர்வைக் காண்பதற்காக மேற்கத்திய நாடுகளின் ஆதரவைத் திரட்டும் நோக்கத்திலேயே அமைந்துள்ளது என்று இராஜதந்திர வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய அரசாங்கம் தனது நாட்டில் பயங்கரவாத அமைப்புகளைத் தடை செய்வதற்கு தயாரித்த பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகளையும் சேர்த்துக் கொண்டுள்ளது. இருந்தபோதிலும் விடுதலைப் புலிகள் இலங்கை அரசாங்கத்துடன் அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு ஆதரவளிப்பதாகவே தெரிவித்து வருகிறது.

இந்நிலையில் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து இலங்கை இனப் பிரச்சனை தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டினை விளக்குவதையே தற்போதைய அவருடைய விஜயத்தின் பிரதான நோக்கமாக ஜனாதிபதி சந்திரிக்கா கொண்டுள்ளார் என்பது தெரியவருகிறது.

இதே வேளை தமிழீழ விடுதலைப் புலிகளுடனான ஆரம்பச் சுற்றுப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாகவும், அத்தகைய ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிய வருகின்றது.

அமைதிப் பேச்சை ஆரம்பிப்பதற்கான திகதியை நிர்ணயம் செய்வது புலிகளின் பொறுப்பிலேயே விடப்பட்டுள்ளதாக அமைச்சர் டி.எம்.ஜெயரட்ன அவர்கள் கடந்த திங்கட்கிழமையன்று பாராளு மன்றத்தில் தெரிவித்தார். "விடுதலைப் புலிகளுடனான அரசாங்கத்தின் கடந்த கால அனுபவங்களை வைத்தே இந்தப் பொறுப்பினை அந்த இயக்கத்திடமே விட்டிருக்கிறோம்" என்று அமைச்சர் மேலும் சொன்னார்.

நெதர்லாந்துக்கான இலங்கைத் தூதுவராக இருக்கும் முன்னாள் வட கிழக்கு மாகாண ஆளுநர் லயனல் பெர்னாண்டோ, உத்தேசிக்கப்பட்டுள்ள முதல் சுற்றுப் பேச்சுக்களில் இலங்கை அரசாங்கத்தின் சார்பாக பங்கேற்கலாம் என்றும் கருதப்படுகிறது.

இருந்த போதிலும், முக்கிய கட்டப் பேச்சுக்கள் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுக்கு மிடையே இடம்பெற வேண்டும் என்பதையே இலங்கை இனப்பிரச்சனையில் மத்தியஸ்தம் வகிக்கும் நோர்வே நாடு எதிர்பார்க்கிறது.

இனப் பிரச்சனை குறித்து அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக முக்கியத்துவம் வாய்ந்தவையாக அடுத்து வரும் மாதங்கள் அமையவிருக்கின்றன என்றே இராஜ தந்திரவட்டாரங்கள் கருதுகின்றன.

இதனை உறுதி செய்வதாகவே பொது ஜன முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் டி.எம் ஜெயரட்ன பாராளு மன்றத்தில் கூறிய கருத்துக்கள் விளங்குகின்றன.

# முதலாளிமாரின் பிடிவாதத்தால் மலையகத்தில்

## வேலைநிறுத்தம் ஒன்றுக்கான சாத்தியம் அதிகரிப்பு!

தோட்டத் தொழிலாளர்களுக்கு 400 ரூபா சம்பள அதிகரிப்பு கோரி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஹட்டன் நகரில் நடத்தி வரும் சத்தியாக்கிரக போராட்டத்துக்கு பொதுமக்கள் ஆதரவு பெருமளவு அதிகரித்துள்ள அதேவேளை, முதலாளிமார் சம்மேளனத்தின் பிடிவாதமான போக்கினால் மலையகத்தில் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வருகின்றது.

400 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கினால் இலங்கையின் தேயிலை பயிர்ச் செய்கை அழிவுக்குள்ளாகும் ஆபத்திருப்பதாக பத்திரிகைகள் வாயிலாக பிரசாரம் செய்து வரும் முதலாளிமார் சம்மேளனம் தற்போதைய நிலையில் எந்தவிதமான ஊதிய அதிகரிப்புக்கும் இடமில்லை என்று திட்டவட்டமாக மறுத்துள்ளது.

அத்துடன் இதுவிடயம் தொடர்பாக தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவும் நிபந்தனைகளை விதித்துள்ளது. முதலாளிமார் சம்மேளனத்தின் இந்த விடாப் பிடியான போக்கினால், மலையகத்தில் பரவலான வேலை நிறுத்தம் ஒன்றுக்கு வழியேற்பட்டுள்ளது.

இ.தொ.கா. பிரதிநிதிகளுக்கும் முதலாளிமார் சம்மேளனத்துக்கும் இடையில் செவ்வாய்க் கிழமை நடைபெறவிருந்த பேச்சு வார்த்தை கடைசி நேரத்தில் இடை நிறுத்தப்பட்டதையடுத்து, நாளை 16 ஆம் திகதி வரை சத்தியாக்கிரகத்தை தொடர்ந்து நடத்துவதாகவும் அதன் பின்னர் கடுமையான முடிவுகளை மேற்கொள்ளப் போவதாகவும் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சனையில் அரசு போதிய அக்கறை காட்டாது இருந்துவருவது குறித்து பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் பலவும் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

பெருந்தோட்டத்துறை அமைச்சரான பிரதமர் இரட்ணசிறி விக்கிரமநாயக்க தொழிலாளர்கள் விடயத்தில் போதிய கவனம் செலுத்தத் தவறிவிட்டதாக இ.தொ.கா. சிரேஷ்ட உறுப்பினர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது இவ்வாறிருக்க, ஹட்டனில் நடைபெறும் சத்தியாக்கிரகத்துக்கு ஆதரவு தெரிவித்து தென் இலங்கையிலும், கிழக்கு மாகாணத்திலும் பல அடையாள சத்தியாக்கிரக போராட்டங்கள் நடைபெற்றுள்ளன.

# பொருட்களின் கொள்வனவில் மோசடி!

## ஒரு கேர்ணல் நான்கு படையினர் கைது!

ஒரு கேர்ணலும் 4 படைவீரர்களும் சி.ஐ.டியினரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். மேலும் பல இராணுவ உத்தியோகத்தர்கள் கைது செய்யப் படலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

படையினருக்குப் பொருட்கள் இறக்குமதி செய்வதாகக் கூறி மோசடியான முறையில் 90 இலட்ச ரூபாவைக் கையாடியுள்ளதாலேயே இவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ் தலைமையகம் கூறுகிறது.

இந்த விதமோசடியான பொருள் இறக்குமதிக்காக கல்கிசையில் ஓரிடத்தின் விலாசம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த முகவரி அமைந்துள்ள இடம் ஒரு சிற்றூண்டிச் சாலையாகும். அதனை நடத்தி வந்த உரிமையாளரையும் நீதி மன்றத்தில் ஆஜராக்கப்போவதாக சி.ஐ.டியினர் தெரிவித்துள்ளனர்.

தொண்ணூறு இலட்ச ரூபா பெறுமதியான இந்த பொருட்கள் கொள்வனவு மோசடி சென்ற ஆண்டு நவம்பர் மாதம் இடம் பெற்றிருந்தது.

தொடரும் போரினால் கோடிக்கணக்கான ரூபா அரசாங்கத்திற்கு மேலதிகமாக தேவைப்படுகிறது. இதேகாலகட்டத்தில் படையினருடைய தேவைகளுக்காக பொருட்களை இறக்குமதி செய்வதாக போலிகள் செய்து வரும் இத்தகைய மோசடிகள் மென்மேலும் துண்டுவிழும் தொகையை அதிகரிக்கவே செய்யும்.

படையிலுள்ள உயரதிகாரிகளும் இத்தகைய மோசடிகளில் ஈடுபடுவது உடன் தடுக்கப்பட வேண்டும் என்பதே நலன் விரும்பிகளின் அவாவாகும்.

இத்தகைய சுயநல நோக்கமுள்ள அதிகாரிகளினால் தான் போர் நிறுத்தப்படுவதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய் விடுகிறது என்று பொதுவாக குற்றம்சாட்டப்படுகிறது.

# குடாநாட்டில் பணியாற்றும்

## பதில் அதிபர்கள் விசனம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் 200க்கும் மேற்பட்ட பதில் அதிபர்கள் தங்களை நிரந்தர அதிபர் சேவையில் சேர்த்துக் கொள்ளுமாறு விடுத்து வந்த கோரிக்கைகளை அரசு தொடர்ந்தும் புறக்கணித்து வருவதால் கடும் விசனமடைந்துள்ளனர்.

பல்வேறு பௌதீக வளப்பற்றாக்குறைகளுக்கும் மத்தியில் பாடசாலைகளை நிர்வகித்து வரும் இந்த பதில் அதிபர்களை நிரந்தர அதிபர் சேவையில் இணைத்துக் கொள்ளாது கல்வி அமைச்சு கவனயீனமாக இருப்பதாகவும் இதுதொடர்பாக பல முறைப்பாடுகள் செய்யப்பட்டபோதும், இது வரையில் எந்த வித பலனும் கிடைக்கவில்லை என்றும் இவர்கள் அதிருப்தி கொண்டுள்ளனர்.

தீவக கல்வி வலயத்தில் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் கடமையாற்றும் அதிபர்கள் விடயத்திலும் கல்வி அமைச்சு போதிய அக்கறை காட்டுவதில்லை என்ற குற்றச்சாட்டு நீண்ட நாட்களாகவே இருந்து வருகிறது.

# குர்ஆன் பிரதி எரிக்கப்பட்டதற்கு

## முஸ்லிம் அமைப்புக்கள் கண்டனம்

ஆப்கானிஸ்தானின் பாமியான் பள்ளத்தாக்கில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க புத்தர் சிலைகளை உடைத்தெறிவதற்கு தலிபான் ஆட்சியாளர்கள் மேற்கொண்டுள்ள தீர்மானத்துக்கு பழிவாங்கும் முகமாக இந்தியத் தலைநகரான புதுடில்லியில் அண்மையில் விஸ்வ ஹிந்து பரிஷத் அமைப்பினரால் புனித திருக்குர்ஆன் பிரதி எரிக்கப்பட்ட சம்பவம் இலங்கை முஸ்லிம்கள் மத்தியிலும் கடும் விசனத்தை தோற்றுவித்துள்ளது.

இந்த சம்பவத்தை கண்டித்து உலக முஸ்லிம்கள் அனைவரும் 16ம் திகதி வெள்ளிக்கிழமை பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டும் என இஸ்லாமிய அமைப்புகள் பல வேண்டுகோள் விடுத்துள்ளன.

இந்தியாவில் பாபர் மசூதி உடைக்கப்பட்டதில் விஸ்வ ஹிந்து பரிஷத் அமைப்புக்கு முக்கிய பங்குண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

# புனர்வாழ்வு முகாம் படுகொலைகளை விசாரிக்க

## தனிநபர் ஆணைக்குழு

கடந்த வருடம் அக்டோபர் மாதம் 25ம் திகதி பண்டாரவளை பிந்துனுவெவ இளைஞர் புனர்வாழ்வு முகாமில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக ஆராய்வதற்கு தனிநபர் ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் பி.கே.எச்.குலதிலக இந்த ஆணைக்குழுவின் தலைவராவார்.

இது தொடர்பாக விசாரணை அறிக்கையை மூன்று மாதகாலத்துக்குள் சமர்ப்பிக்க இவர் பணிக்கப்பட்டுள்ளார்.

புனர்வாழ்வு முகாம் படுகொலை குறித்து சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட சிலர் ஏற்கனவே பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தெஹிவளை வீடொன்றிலிருந்து

## தற்கொலை அங்கிகள் மீட்பு; 4 பேர் கைது

தெஹிவளை வைத்தியா வீதியில் உள்ள மறைவிடம் ஒன்றிலிருந்து தற்கொலைத் தாக்குதலுக்கு பயன்படும் அங்கிகளுடன் நான்கு சந்தேக நபர்களை கடந்த திங்கட் கிழமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் வீடொன்றை சோதனையிட்டபோது, அங்கிருந்து தற்கொலை அங்கிகளும், சிறிய ரக ஆயுதங்கள் சிலவும், வெடிமருந்துகளும் மீட்கப்பட்டதாக தெஹிவளை பொலிஸார் தெரிவித்தனர். வீட்டில் இருந்த 4 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

இவர்கள் நால்வரும் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் மேலும் பலரை கைது செய்யப் போதுமான பல தகவல்கள் இவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கலாநிதி நீலன் திருச்செல்வம், அமைச்சர் சி.வி.குணரட்ண ஆகியோர்மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலுக்கான ஏற்பாடுகள் இங்கிருந்தே செய்யப் பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்களில் இரண்டு பேர் புலிகள் இயக்க முக்கியஸ்தர்கள் என்றும் விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால் மேலதிக விவரங்களை வெளியிட முடியாமல் இருப்பதாகவும் தெஹிவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# அமைச்சர் பேரியல் அஷ்ரப்

## மட்டக்களப்பு விஜயம்

இலங்கையின் முதலாவது முஸ்லிம் பெண் அமைச்சரும், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவியுமான ஜனாபா பேரியல் அஷ்ரப் அவர்கள் கடந்த வாரம் காத்தான்குடி, மட்டக்களப்பு, ஏறாவூர், ஓட்டமாவடிப் பகுதிகளுக்கு விஜயம் செய்தார்.

முன்னாள் பிரதியமைச்சரான எம்.எல். ஏ.எம்ஹிஸ்புல்லாஹ், மற்றும் ஸ்ரீ.ல.மு.காவின் அரசியல் அதி உயர் பீட உறுப்பினரும் சர்வதேச விவகாரப் பணிப்பாளரும், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பிரதித் தலைவருமான அல் ஹாபிஸ் நஷீர் அஹமட் ஆகியோர் அமைச்சரின் வருகையை ஏற்பாடு செய்திருந்தனர். அப்பகுதிகளில் எதிர்நோக்கப்படும் பல்வேறு பிரச்சனைகள் பற்றிய கோரிக்கைகள் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப் பட்டன.

அமைச்சருக்குப் பல இடங்களிலும் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்ட போதிலும் ஏறாவூரில் சிறு சலசலப்பு ஏற்பட்டது.

# தமிழ் இளைஞர்கள் வவுனியாவில் கைது

வவுனியா நகரில் துப்பாக்கி கைக்குண்டுகள் சகிதம் இரண்டு தமிழ் இளைஞர்கள் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து ரி.56 ரக துப்பாக்கி ஒன்றும் கைக்குண்டுகள் ஆறும் கைப்பற்றப் பட்டுள்ளன.

வவுனியா பூந்தோட்டத்தில் வைத்து கைது செய்யப்பட்ட இவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் வவுனியா நகருக்குள் இடம்பெற்ற பல்வேறு அசம்பாவிதங்களுடன் இவர்களுக்கு தொடர்பிருக்கலாம் என்றும் சந்தேகிப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# காணாமல் போனோர் தேசிய தினம்!

நாட்டில் ஏற்பட்டுள்ள போர் மற்றும் வன்முறைச் சம்பவங்களில் அகப்பட்டுக் காணாமல் போனோருக்காக, காணாமல் போனோர் தேசிய நினைவு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப் பட்டிருப்பதாக காணாமல் போனோர் சங்கத்தின் செயலாளர் சாந்தினி பத்திரண தெரிவித்தார்.

இதுவரை 16 ஆயிரத்து எண்ணூறு பேர் காணாமல் போயுள்ளதாக அவர்களது உறவினர்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். காணாமல் போவோரின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமே உள்ளது.

காணாமல் போனோரை நினைவு கூரும் தேசிய தினத்தில், அவர்களது குழந்தைகளின் கல்வி மற்றும் குடும்பங்களின் நலன்களுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

வடக்கு கிழக்கிலும் அதிக எண்ணிக்கையானோர் படையினரதும், புலிகளதும், மற்றும் ஆயுதக் குழுக்களினதும் நடவடிக்கையால் காணாமல் போயுள்ளார்கள்.

இவர்களில் அதிகம் பேருக்கு இன்னமும் இழப்பீடுகள் எதுவும் வழங்கப்படாத நிலை காணப்படுகிறது.

# திருமலை தீர்த்தக்கரைக்காணி

## மீளப்பெறப்பட வேண்டும்!

"நாட்டின் சூழ்நிலையைப் பயன்படுத்தித் தீர்த்தக் கடற்கரையில் அடாத்தாகக் குடியேறியவர்கள் நிரந்தரமாக அங்கிருக்க அனுமதிக்கப்படலாகாது. அவர்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லலாம். உயர்ந்தபாடு மீனவர் திடலாகவும் தீர்த்தக் கடற்கரையாகவுமுள்ள அப்பகுதியை மீளப் பெற்றுத்தர நகராட்சி மன்றம் ஆவன செய்ய வேண்டும். இதற்கிசைவாக வரி மதிப்பீட்டுத் திணைக்களம் அப்பகுதியில் வரி மதிப்பீடு செய்வதையோ இலக்கங்கள் வழங்குவதையோ நகரசபை அவர்களிடம் வரி அறவிட்டு சட்டப்படியான உறுதிப்பாடு செய்வதையோ எமது சங்கம் கடுமையாக ஆட்சேபிக்கிறது" இவ்வாறு மார்ச் மாதம் 6ம் திகதி இடம்பெற்ற மதிப்பீட்டுத் திணைக்கள அதிகாரி, நகரசபைச் செயலாளர் உட்பட நகராட்சி மன்ற அதிகாரிகள் கலந்து கொண்ட கலந்துரையாடலில் வரியிறுப்பாளர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை நகராட்சி மன்ற வரியிறுப்பாளர் சங்கத் தலைவர் கே.சிறிஸ்கந்தராசா, செயலர் இ.சோமசுந்தரம், பெருளாலர் கா.சுப்பிரமணியம் உட்பட முக்கிய பிரதிநிதிகள் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர். திணைக்களத்தின் சார்பில் எஸ்.ஜெகநாதன், நகராட்சி மன்றத்தின் சார்பில் செயலாளர் ஏ.சோதிலிங்கம், வருமானப் பரிசோதகர்கள் செ.நவசோதிராசா சின்னத்தம்பி, எழுதுநர் திருமதி எம்.சந்திரமோகன் ஆகியோரும் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

கடந்த தடவை மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையிலேயே இம் முறை மதிப்பீடு செய்யப்பட வேண்டும் எனவும் தற் காலிகமான புறநிலைப்பாடுகளை வைத்து. மதிப்பீட்டின் பெறுமதியை அதிகரித்து விடலாகாது என்றும் சங்கம் மதிப்பீட்டுத் திணைக்கள அதிகாரியைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

கடந்த வருட அபிவிருத்தி வேலைக்கென 60 இலட்சம் செலவிட்டமைக்கும் இக் களத்தின் தன்மையால் 14 இலட்சம் மீதப் படுத்தியதற்கும் செயலாளருக்கு நன்றி தெரிவித்த வரியிறுப்பாளர் சங்கம், புதிய மதிப்பீட்டின் பிரகாரம் வரி அறவீடு 12 சதவீதத்துக்கு மட்டுப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறது.

# வவுனியா மாவட்டத்தில்

## தற்கொலைகள் அதிகரிப்பு

யுத்த சூழ்நிலைகள் காரணமாக உளவியல் பாதிப்புக்கு உள்ளாகி தற்கொலை செய்து கொள்பவர்களின் எண்ணிக்கை வவுனியா மாவட்டத்தில் அதிகரித்துள்ளதாக ஆய்வொன்றிலிருந்து அறியப்பட்டுள்ளது.

பொருளாதார இழப்புகள், தொடர்ச்சியான இடப்பெயர்வுகள், பாதுகாப்பு கெடுபிடிகள், வதிவிடப்பிரச்சனை, நீண்ட காலம் உறவினர்களை பிரிந்து வாழ்வதால் ஏற்பட்ட மனத்தாக்கம் உள்ளிட்ட காரணங்களினால் வவுனியாவிலும், அதனை அண்மித்த பகுதிகளிலும் தற்கொலை, தற்கொலை முயற்சிகள் என்பன வேகமாக அதிகரித்துள்ளதென்று வைத்தியசாலை புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

வவுனியாவில் கடந்த வருடம் தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட 691 பேரில், 62 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களுள் 376 பேர் ஆண்கள். ஏனையவர்கள் பெண்களாவர். தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்களில் பெரும்பாலானவர்கள் 21 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனவும் அந்த ஆய்வு தெரிவிக்கின்றது.

மொனராகலை மாவட்டத்தின் தனமல்வில என்ற இடமே இலங்கையில் அதிகரித்த சதவீதத்தில் தற்கொலைகள் இடம் பெறும் பிரதேசமாகும். வவுனியாவில் இந்நிலைமை தொடரும் பட்சத்தில் அது முதலாம் இடத்தை அடையக் கூடிய துரதிஷ்டம் காணப்படுகின்றது.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் டறிஸன் 2001.03.14

றொபின்சன் -சறோஜினி தம்பதியினரின் செல்வ புதல்வன் டறிஸன் தனது முதலாவது பிறந்த தினத்தை 2001.03.14 அன்று வெள்ளவத்தையில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா-அம்மா, அண்ணன் ஜறிஸன், அப்பப்பா-அப்பம்மா, அம்மம்மா, பாட்டா, சித்தப்பாமார் அப்பன், செல்லா, றகு, அத்தைமார் சின்னப்பிள்ளை ரேகா, சந்தியா, பூவம்மா, தொட்டப்பா, தொட்டம்மா, மாமன்மார், மற்றும் உறவினர், நண்பர்கள் கொச்சிக்கடை அந்தோனியார் அருளால் பல்கலையும் கற்று நோய் நொடியின்றி பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறோம்.

---

உலகப் புகழ்பெற்ற

## எக்ஸ் ஒயில்

TRADE MARK

- காய்ச்சல்
- தலைச்சுற்று
- ஜலதோஷம்
- மூக்கடைப்பு
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை
- தலைவலி
- தலைப்பாரம்
- இருமல்
- பல்வலி




**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி**

எக்ஸ் ஒயிலைப் பெற வசதியில்லாத பகுதிகளில் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்

**SINGHA HOLDINGS (PVT) LTD**

14,Ground Floor - Welikada Plaza - Rajagiriya.

T.P : 888214 Fax : 682984

---

## மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு. மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**

50, THEATRE ROAD, NINTHAVUR-21, SRI LANKA.

067-50349

---

## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் மார்ச் 18 முதல் 25 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492

New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11.

T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

**கல்முனையில் மார்ச் 31, ஏப்பிரல் 01 திகதிகள்.**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் ஏப்பிரல் 07, 08 திகதிகள்.**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21405, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019

DR.P.ARUMUGAM

NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

---

## சுண்ணாகம் சந்தை

## சூரிச்

23.03.2001 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு

புதிய முகவரியில்

## கோலாகல திறப்பு விழா

இடம்: Josefstr. 198005 Zuerich


(Zurich Haupt Bahnhof 18ம் இலக்க Gleisலிருந்து 2 நிமிட நடை)

தொடர்புகட்கு: **மகாராஜா மகாவேந்தன்**

Tel 01/2710511 Fax 01/2710512 Natel 079/6349709

E-mail M Maharajah@bluewin.ch


தாராள வாகன தரிப்பிட வசதியுண்டு.




---

## மலையாள மாந்திரீகம்





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன்-எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா, திருமணமே நடக் காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளி நாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெற வேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெற வேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளி நாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**

Tel-466620, 466820 **தேவைகளுக்கு:-**

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி

Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika
Uchchada Peedam.

கொழும்பில்
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

நுவரெலியாவில்
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ. பேசி

TEL : 00941 431137

FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்

01-466271, 466571

E-mail:drpksamy@sltnet.lk

www.imexpolanka. com/drpksami.

---

## 90ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு

25.03.1968

❖❖❖

உதிர்வு

17.12.2000

யாழ். வடமராட்சி புலோலி மேற்கைச் சேர்ந்த

அமரர் சதாசிவம் முரளீதரன்



மலர்வு

08.05.1981

❖❖❖

உதிர்வு

15.12.2000

அமரர்


சத்தியா முரளீதரன்

எம் அன்புத் தெய்வங்களே! கொடிய காலனவன் அக்கினி ரூபத்தில் வந்து நம் அன்புள்ளங்கள் இருவரையும் கவர்ந்தெடுத்தானோ. ஐயகோ!!! நாம் ஆறாய்ச் சொரியும் கண்ணீரால் எம்மிதயத் தெய்வங்கள் இருவருக்கும் அஞ்சலி செலுத்துகின்றோம். உங்கள் ஆத்ம சாந்திக்காய் இறைவனை வேண்டி நிற்கும் அன்பு அம்மா, அப்பா, மகள் சுவீகா, சகோதரங்கள் சத்தியா, சாந்தி, சத்திய சீலன், மைத்துனர்மார், மருமக்கள், துஷோத், நிஷோத், கிஷோத்

தகவல்: க.சதாசிவம் 127. மில் வீதி. உக்குளாங்குளம்,வவுனியா.

---

## மரண அறிவித்தலும் 31ம் நாள் நினைவஞ்சலியும்



அமரர் சின்னத்தம்பி கதிரித்தம்பி

(Rtd. Accountant-Volankas Ltd.)

தோற்றம்

23.04.1913

மறைவு

18.02.2001

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சின்னத்தம்பி கதிரித்தம்பி அவர்கள் 18.02.2001 அன்று கொழும்பில் காலமானார். அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், விக்கினேஸ்வரன் (ஜேர்மனி), சர்வேஸ்வரி (ஜேர்மனி), ஸ்ரீகுமாரி, குகநேசன் (ஜேர்மனி), திருவருட்செல்வன், பவானிதிசி கதிர்காமலிங்கம் (ஜேர்மனி), அமரர் தில்லைநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சறோ, உமா, ஜெயதேவி கதிர்காமலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், கோபிநாத், ஆரபி, ரிஷிகேசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஆத்மா சாந்திக் கிரியைகள் 20.03.2001 அன்று அவரது இல்லத்தில் இடம்பெறவுள்ள தென்பதை உற்றார், உறவினர், நண்பர்கட்கு அறியத் தருகின்றோம்.

**தகவல்: மகன்மார்.**

க.விக்கினேஸ்வரன் (Neuss-2131-549731) க.குகநேசன் (Neuss-2131-130755)

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# மலையக மண்ணில் வஞ்சிக்கப்பட்ட தொழிலாளரின் வெஞ்சினப் போராட்டம்

"தனியொருவனுக்கு உணவில்லையேல் ஜெகத்தினை அழித்திடுவோம்!" என்றான் பாரதி. இங்கு தனியொருவனல்ல, ஒரு சமுதாயமே உணவின்றித் தவிக்கிறது.

ஒரு நாள் இருநாளல்ல, சில நூற்றாண்டுகளாகப் பட்டினி கிடக்கிறது.

ஜெகத்தினை அழிக்க அவர்கள் ஒரு போதும் எண்ணியதில்லை.

மாறாக, ஜெகத்தினைத் திருத்தி, காடு, கரம்பைகளை வெட்டி ஒதுக்கி, தெருக்கள் சமைத்து, பாலங்களமைத்து, இப் பாறை நிலத்தில் பயிரிட்டு கோப்பிவளர்த்து, பின் தேயிலைப் போர்வையால் இம் மலைகளை மூடி அலங்கரித்தவர்கள்.

இத்தனைக்குமாக அவர்கள் தம் வியர்வையை மட்டுமல்ல இரத்தத்தையே சிந்தியவர்கள்.

பெருந்தொகையான தம் முன்னைய சந்ததியினரை, குளிருக்கும், நோய்க்கும் பலி கொடுத்தவர்கள்.

தங்கள் கடும் உழைப்பால் இந் நாட்டின் பிரதான ஏற்றுமதி வருவாய்க்கு வழிசமைத்து, இந் நாட்டு மக்களின் வாழ்வைச் செழிக்க வைத்தவர்கள்.

இவ்வளவுக்கும், இச் சமுதாயத்தின் நூற்றாண்டுகால உழைப்புக்கு மிச்சமாகக் கிடைத்திருக்கும் வெகுமதி வறுமையே!

பரந்து விரிந்த மலையகப் பரப்பின் பொருளாதார வனப்புக்கு அடிநாதமாக அமைந்த இம் மக்களுக்கென ஒரு துண்டு நிலம் கூடச் சொந்தமில்லை.

தம் உழைப்பை மட்டுமல்ல இறப்பையும் கூட தேயிலைச் செடிக்கே உரமாக்கித் தருகின்ற இம் மக்களின் முதுகின்மீது விழுந்த அடிகள் கொஞ்சநஞ்சமல்ல.

அடிமைச் சமுதாயத்தைப்போன்ற வெறும் உழைப்புச் சுரண்டல் மாத்திரமல்ல, அரசியல் ஒடுக்கு முறைகள், வன்முறைகள், அடக்கு முறைகள், அன்னியப்படுத்தல்கள், சமூக வஞ்சனைகள் எனப் பலவிதப் பழுக்களும் இவர்கள்மீது சுமத்தப்பட்டன.

ஆயினும் இம் மக்கள் யாவற்றையும் தாங்கும் பூமித் தாயின் விசாலமான சகிப்புத் தன்மையுடன் தமக்கான நியாயத்துக்காகக் காத்திருக்கிறார்கள்.

அந்த வஞ்சிக்கப்பட்ட மக்கள் வேறுயாருமல்ல, அதைச் சொல்லாமலே எவரும் புரிந்து கொண்டிருப்பர்- ஆம், எங்கள் மலையகத் தமிழர்களே!

இந் நாட்டை ஆண்ட பிரித்தானியரால் சுமார் மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் கோப்பிச் செய்கைக்காக இந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்டவர்கள் இம்மக்கள்.

இலங்கையில் இத் தொழிலில் ஈடுபடுத்தக்கூடிய கடும் உழைப்பாளர்களைத் தேடிக் கண்டுபிடிக்க முடியாத பிரிட்டிஷ்காரர்கள் தென்னிந்தியாவிலிருந்து இவர்களை இங்கு ஒரு சுபீட்சமான வாழ்க்கை கிடைக்குமென ஆசைகாட்டி ஏமாற்றி அழைத்து வந்தனர்.

மன்னார் வழியாக கப்பலில் அழைத்து வரப்பட்ட இம்மக்கள், மலையகம்வரை காட்டுப் பாதையால் நடத்தியே கூட்டிவரப்பட்டனர்.

இந்தப் பயங்கரமான நெடும் பயணத்தில் பாதிப்பேர் பாதியிலேயே நோய்கண்டு மரித்தனர்.

கோப்பிப் பயிர்ச்செய்கையில் தொற்று நோய் பரவியதால், அதைவிடுத்து தேயிலைப் பயிற்செய்கைக்கு மாறியதுடன் இம் மக்களை இங்கு பெருந்தொகையாக நிரந்தரமாகக் குடியேற்றும் முயற்சியில் இறங்கினர்.

காலநிலைப் பயிரான கோப்பிபோலன்றி தேயிலை எக்காலத்திலும் விளைச்சல் தரும் பயிராக இருந்ததால், அதற்கு ஒரு நிரந்தர தொழிலாளர் படை தேவைப்பட்டது.

அதனால் இம் மக்களை இங்கு நிரந்தரமாகக் குடியேற்றி அவர்களைக் கொண்டே காடடர்ந்திருந்த இம் மலையகத்தைச் செதுக்கிப் புனரமைத்தனர்.

மலையகத்தைப் புனரமைத்துத் தேயிலைத் தோட்டங்களை உருவாக்கி செல்வத்தைச் சம்பாதித்தவர்களுக்கு, அம் மக்களின் வாழ்க்கையைப் புனரமைக்கும் அக்கறை இருக்கவில்லை.

புறாக்கூடுகள் போன்ற எட்டுச் சதுர அடிப்பெட்டிக் காம்பறாக்களாக அமைந்த லயன்களுக்குள்ளேயே தம் வாழ்க்கையை முடக்கிக் கொள்ள அவர்கள் பணிக்கப்பட்டனர்.

பனிக் குளிராலும் தொற்று நோயாலும் வாடி வதங்கி வகைதொகையாக இறந்தபோதிலும் இவர்கள்மீது இரக்கம் காட்ட இந்த இரும்பு மனம்படைத்த அதிகார வர்க்கத்தால் முடியவில்லை.

ஆண் பெண் இருபாலாரிடமிருந்தும் உழைப்பை உறிஞ்சியெடுத்த தோட்ட நிர்வாகம், இம் மக்களுக்கு இந்நாட்டின் ஏனையோருக்கிருந்த அடிப்படை வசதிகளை மட்டுமன்றி சுதந்திரங்களையும் வழங்க மறுத்து ஓர் அடிமை முகாம்போன்றே இவர்களை நடத்தி வந்தது.

1948ல் இலங்கை பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்றபோது, இந்தச் சுதந்திரம் கூட இவர்களுக்கு எந்தவிதத்திலும் சுதந்திரமாக அமையவில்லை.

உண்மையில் இந்தச் சுதந்திரம் இம் மலையகத் தமிழ் மக்களை அன்னியர்களாக ஒதுக்கும் ஓர் அரசியல் ஓரவஞ்சனையையே இவர்கள் மீது விதித்தது.

ஆம், சுதந்திரம் பெற்றகையோடு ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் முதலாவதாகச் செய்த அரசியல் கைங்கரியம் பிரஜா உரிமைச் சட்டத்தின் மூலம் இம் மலையகத் தமிழ் மக்களின் பிரஜா உரிமையையும் வாக்குரிமையையும் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கியதுதான்.

இந்த வரலாற்றுக் கொடுமைக்குத் துணைபோன துரோகத்தை அன்றைய எமது யாழ்ப்பாணத்தலைமையும் சேர்ந்தே செய்தது.

அன்று இலங்கைத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்த இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலமே இந்த ஒடுக்குமுறைச் சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களித்து மாறாக் கறையொன்றை தமிழ் மக்களின் அரசியலில் ஏற்படுத்தியவராவார்.

இந்தத் தவறே மலையகத் தமிழருக்கும் யாழ்ப்பாணத் தமிழருக்குமான ஒரு பாரிய அரசியல் விரிசலுக்கான காரணமாக அமைந்தது.

ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் மகனான குமார் பொன்னம்பலம்கூட, அவரது கடைசிக் காலத்தில் தமிழ் மக்களுக்காக குரலெழுப்பியவர் என்ற பெயர் பெற்று புலிகளால்கூட மாமனிதனெனப் பட்டம் சூட்டப்பட்ட போதிலும் தனது தந்தை செய்த துரோகத்தை, தவறென ஒப்புக் கொள்ளாத பிடிவாதத்துடன்தான் தான் இறக்கும்வரை நின்றிருந்தார்.

ஒரு சமுதாயத்தின் சகிப்புத் தன்மைக்கு முன்னே எம் அரசியல் தலைமைகளின் துரோகங்களும், பிடிவாதங்களும் இறுமாப்புகளும் எவ்வளவு கேவலமான தலைகுனிவாக ஆகி நிற்கின்றன என்பதை நாம் இத் தருணத்தில் கண்டுகொள்ள வேண்டும்.

இதேவேளை, இலங்கை அரசின் குடியேற்றத் திட்டத்தால் தமிழ் பிரதேசங்கள் அபகரிக்கப்படுவதைத் தவிர்க்குமுகமாக அன்றைய வடக்குக் கிழக்குத் தலைமைகள் தமது பிரதேச எல்லையோரங்களில் மலையகத் தமிழர்களைக் குடியேற்றும் முயற்சியை மேற்கொண்டனர்.

வடக்கு கிழக்கின் செழிப்பான பகுதிகளில் வாழ்ந்த தமிழர்கள் தமது பிரதேசங்களைக் காப்பதற்கு இத்தகைய கஷ்டப் பிரதேசங்களில் எல்லையோரச் சிங்களப்பகுதிகளின் பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்தவாறு குடியேறத் தயாரில்லாத நிலையில் மலையகத் தமிழர்களையே தமக்கான ஒரு தற்காப்பு அரணாகப் பாவிக்க அவ்வரசியல் தலைமைகள் விளைந்தனர்.

அது பெருமளவு சாத்தியப்படாவிட்டாலும் இதிலிருந்த நோக்கம் தவறானதாகவே இருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சி பிரஜா உரிமையைப் பறித்ததென்றால், அடுத்தடுத்து வந்த அரசியல் மாற்றங்களால் ஆட்சிக்கு வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தன் பங்குக்கு மற்றொரு சாட்டையை இம் மக்களின் முதுகில் பதித்தது.

அதுதான் 1964ல் சிறீமாவோ பண்டாரநாயக்காவால் இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட சிறீமா-சாஸ்திரி ஒப்பந்தம்.

தமது நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டவர்களின் சந்ததிகள் என்ற கரிசனையிலாவது அவர்களுக்கு இலங்கையில் சம கௌரவம் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தத் தவறிய இந்தியா, அவர்களுக்கு நிகழ்ந்த அரசியல் அநீதியைக் கண்டும் காணாது நின்றதோடு மட்டுமன்றி இலங்கையின் விருப்பத்துக்கு துணைபோய் அவர்கள் நாடுகடத்தப்படுவதை ஏற்றுக் கொண்டது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் நாடற்றவர்களாகக் காணப்பட்ட மலையகத் தமிழர்கள் பலவந்தமாக இந்தியாவுக்கு நாடுகடத்தப்பட்டனர்.

இந்தப் பரிதாபம் அன்றைய நாட்களில் தினந்தோறும் மலையகத்து றெயில் நிலையங்களில் பிரிவுக் கதறல்களாய் ஒலித்தன.

இரத்தமும் சதையுமாக வாழ்ந்த இச் சமுதாயத்தில் தாயும் பிள்ளையும் சகோதரர்களும் கதறக் கதறப் பிரிக்கப்பட்டு நாடுகடத்தப்பட்ட வேதனையின் துடிப்பை வேடிக்கை பார்த்தனரேயன்றி யாருமே இச் சமூகக் கொடுமையைத் தடுத்து நிறுத்தப் போர்க்கொடி தூக்கவில்லை.

இவர்களை இலங்கையில் ஏனையோர் 'இந்தியத் தமிழர்' என்ற அன்னியத்தனமாக அழைத்தனர்.

இன்னும் குரூரமாக 'வடக்கத்தயார்' என ஒரு தாழ்ந்த அர்த்தத்தில் வர்ணித்தனர்.

ஆனால் இந்தியாவுக்குத் திருப்பியனுப்பப் பட்டவர்களை அங்கு 'சிலோன் காரர்' என்றே கூறுகின்றனர்.

இவ்வாறு இங்கும் அங்கும் அன்னியத் தனத்துடன் நோக்கப்படும் ஒரு திரிசங்கு சொர்க்கத்தில் மலையகத் தமிழ் மக்கள் தொங்கவேண்டியவர்களானார்கள்.

இதேவேளை கடந்த காலங்களில் வடக்கு கிழக்கிலிருந்து இப் பகுதிக்குத் தொழில் புரிய வந்தவர்களும் இம் மக்களை பாகுபாடாக நடத்தியமையும் மலையகத் தமிழர்களுக்கு ஒரு சந்தேகக் கண்ணோட்டத்தை அவர்கள் மீது ஏற்படுத்தியிருந்தது.

ஆயினும் இங்கு நிலவும் நீண்ட கால இனப்பிரச்சனையின் அனுபவங்களால் புடம் போடப்பட்ட புதிய தலைமுறைகளில் இக்குறுகிய மனப்பான்மைகள் நீங்கி பரந்த மனப்பான்மையும் புரிந்துணர்வும் சேவை நோக்கமும் மேலோங்கி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

திம்புப் பேச்சுவார்த்தைகளின்போது தமிழ்ப் போராளிகள் முன்வைத்த நான்கு அடிப்படை விதிகளில் ஒன்றாக மலையகத் தமிழர்களின் பிரஜா உரிமையை அங்கீகரிக்க வேண்டுமென்பதை முன்வைத்திருந்தமை இத்தகைய சிந்தனை மாற்றத்துக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அத்தோடு ஈழ விடுதலைக்காகப் போராடிய சில தமிழ் விடுதலை இயக்கங்களின் கொள்கையில் மலையகத் தமிழர்களுக்கான விடுதலையும் சிந்திக்கப்பட்டு, அவர்களின் ஈழ வரைபடத்தில் மலையகமும் உள்ளடக்கப் பட்டிருந்தது.

இது சாத்தியமில்லாதபோதும், மலையகத் தமிழ் மக்கள் அதற்குத் தயாராக இல்லாத போதும் இந்தச் சிந்தனை மலையகத் தமிழ் மக்கள் தொடர்பாகவும் விசாலித்திருந்ததும் நோக்கத்தக்க ஒன்றே.

அவர்களின் சிந்தனை அவ்வாறாக இருந்தாலும் நடைமுறையில் மலையக இளைஞர்கள் மலையக மக்களின் பிரச்சனைக்காகவன்றி வடக்கு கிழக்கு யுத்தத்துக்காகப் பயன்படுத்தப் படுபவர்களாகவே ஆக்கப்பட்டார்கள்.

இதனால் பிரிவினை நோக்கமற்ற மலையகத் தமிழ் மக்களுக்கு மேலும் இப் போராட்டத்துக்கு எதிரான பாதுகாப்புக் கெடுபிடிகள் சுமத்தப்பட்டன.

எனவே வரலாற்றுத் தவறுகளை மீளப் பார்க்கும்போது எமது கடந்த கால நடத்தைகளை விமர்சனபூர்வமாகச் சுட்டிக்காட்ட வேண்டியது தவிர்க்க முடியாததாகிறது.

மலையகத் தமிழர்கள் இவ்வாறு அன்னியமாக நோக்கப்பட்டாலும், இங்கு விளைந்த இனவாதத்தின் முன்னால் அவர்கள் வடக்குக் கிழக்குத் தமிழருடன் ஒன்றாகவே நோக்கப்பட்டு இனக் கலவரங்களில் சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்டனர்.

இழப்பதற்கென்று உழைப்பைத் தவிர எதுவுமேயற்ற பாட்டாளி வர்க்கமாக இனங் காணக்கூடியவர்களாக இன்று இலங்கையில் வாழ்பவர்கள் தோட்டத் தொழிலாளர்களாக விளங்குகின்ற மலையகத் தமிழர்களே.

ஆனால், தொழிலாளர் வர்க்கத்துக்காக குரல் கொடுப்பதாகக் கூறிக்கொள்ளும் இடதுசாரிகளாலும் இவர்கள் வஞ்சிக்கப் பட்டார்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியோடு கூட்டுச் சேர்ந்து இடதுசாரிகள் ஆட்சியமைத்த போதும் அவர்களே தோட்டத் தொழிலாளர்களின் மாதச் சம்பளக் கோரிக்கையை நிராகரித்தார்கள்.

தோட்டத் தொழிற்துறை ஒரு விவசாயத் துறையென்றும் விவசாயிகளுக்கு எங்கும் மாதச்சம்பளம் கொடுப்பதில்லையென்றும் இந்த இடதுசாரிகளே தம் வாயால் காரணம் கூறி இம் மக்களின் வயிற்றிலடித்தார்கள்.

ஆனால் அதே தோட்டங்களின் அலுவலக அதிகாரிகளும் பணியாளர்களும் வண்டிச் சாரதிகளும் மாதச் சம்பளமே பெறுவது எவ்வாறு என்று அவர்களுக்கு சிந்திக்கத் தோன்றவில்லை. ஏனெனில் அவர்கள் அதிகார வர்க்கத்தின் சார்பில் நின்று இத் தொழிலாளர் கோரிக்கையை முறியடிக்கும் கோடரிக் காம்பாகவே செயற்பட்டதால்.

இதேபோல் பாட்டாளிவர்க்கப் புரட்சி என்ற பெயரில் இங்கு ஓர் இடதுசாரிக் கிளர்ச்சியை நடத்தப் புறப்பட்ட ஜே.வி.பி. எனும் மக்கள் விடுதலை முன்னணியினரும் மலையகத் தமிழர்களுக்கு வஞ்சனையாகவே செயற்பட்டார்கள்.

அவர்கள் நடத்திய அரசியல் வகுப்புகளின் 5 ஆவது வகுப்பில் 'இந்திய விஸ்தரிப்பு வாதம்' என்ற தலைப்பில் இந்தியா இலங்கைக்குள் விஸ்தரிக்கும் திட்டத்துக்கு மலையகத் தமிழரே ஒரு வழிகோலாக அமைவதாக அபாண்டமான பழியைச் சுமத்தினர்.

இவ்வாறு வெள்ளையரால் வஞ்சிக்கப் பட்டு, இந்நாட்டின் சுதந்திரத்தைச் சுவீகரித்துக்கொண்ட ஆட்சியாளர்களால் வஞ்சிக்கப் பட்டு, சகோதர மக்களான இலங்கைத் தமிழர்களின் தலைமையாலும் வஞ்சிக்கப்பட்டு, இந்தியாவால் கைவிடப்பட்டு, இடதுசாரிகளாலும் காட்டிக்கொடுக்கப்பட்டு, கிளர்ச்சியாளர்களாலும் எதிரிகளாகப் பார்க்கப்பட்ட நிலையில் அந்த மக்கள் ஆதாரக் கைகொடுக்க யாருமற்ற அனாதைகளானார்கள்.

இதனால் தமது பிரத்தியேகமான பிரச்சனைகளுக்குத் தாம் மட்டுமே போராட வேண்டியவர்களாகியுள்ள அவர்கள் மூன்று வகையான பிரச்சனைகளை எதிர்நோக்குகிறார்கள்.

அன்றாட வாழ்வுக்கான பொருளாதாரப் பிரச்சனைகள்.

சமூக வாழ்க்கை மற்றும் சமூக முன்னேற்றம் தொடர்பான பிரச்சனைகள்.

அரசியல் உரிமைகள் தொடர்பான பிரச்சனைகள்.

இவற்றில் அன்றாட வாழ்வுக்கான பிரச்சனையே எப்போதும் அவர்களுக்கு உடனடியாக எதிர்கொள்ளப்பட வேண்டியதாக அமைந்து விடுவதால், அரசியல் பிரச்சனைகள் இரண்டாம் பட்சமாக ஆகிச் செல்வது கவலைக்குரியதாகவுள்ளது.

**நரன்**

இலங்கையில், யுத்தச் செலவீனங்களாலும், பணவீக்கத்தாலும், நாணய மதிப்பிறக்கத்தாலும் அசுர வேகத்தில் அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவை ஈடுகட்ட முடியாது தவிக்கும் அம்மக்களுக்கு ஏனையவர்களுக்கு கிடைக்கும் சம்பள அதிகரிப்புகள் கிடைப்பதில்லை.

அதற்காக அவர்கள் ஒவ்வொரு தடவையும் போராட்டம் நடத்தித்தான் பெறவேண்டியுள்ளது.

இதேவேளை கடந்த ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கத்தின்போது தோட்ட நிர்வாகங்கள் கம்பனிகளிடம் வழங்கப்பட்டன.

இதன்போது செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமானது தொழிலாளர்களின் வேலை நிறுத்தப்போராட்டங்களை சட்டவிரோதமாக ஆக்குகிறது.

இத்தகைய ஒப்பந்தத்துக்கு அப்போதைய ஐ.தே.க. அரசாங்கத்தில் அங்கம் வகித்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமானும் இதைத் தடுக்க முடியாதவராகிவிட்டார்.

தற்போது அவரது பேரன் ஆறுமுகம் தொண்டமான் நடத்தும் 400 ரூபா சம்பள உயர்வுப் போராட்டத்திற்கு எதிராக அந்த ஒப்பந்தத்தின் இந்த அம்சம் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

வரலாற்றில் முதன் முறையாக வேலை நிறுத்தம் செய்யக்கூடாதென கம்பனிகள் நீதிமன்றத்தில் தடையுத்தரவு வாங்கியுள்ளன.

அதனால் ஆறுமுகம் தொண்டமான் மாற்றுத் தந்திரோபாயத்தில் இறங்க நேரிட்டது.

வேலை நிறுத்தத்தை விடுத்து சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இறங்கியுள்ளார்.

இந்த ஒப்பந்தம் தொழிலாளர்களைக் கட்டுப்படுத்துமேயன்றி அரசியல் வாதிகளைக் கட்டுப்படுத்தப் போவதில்லை.

இதனால் இதைத் தடுக்க தோட்டக் கம்பனிகளுக்கு வழி தெரியவில்லை.

25 நாட்கள் எட்டித்தாண்டும் இப் போராட்டத்துக்கு வரவர ஆதரவு அதிகரித்து வருகிறது.

மலையகப் பகுதியெங்கும் பாரிய ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்தபடியுள்ளன.

அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் இதற்கு ஆதரவு அளித்துள்ளன.

அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் நிலையிலும் ஈ.பி.டி.பி. இதற்கு ஆதரவளித்து, அதன் செயலாளர் நாயகம்அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே நேரில் சென்று சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டிருந்தார்.

இதேவேளை இந்த கம்பனி ஒப்பந்தத்தின் காரணகர்த்தாவான ஐக்கிய தேசியக் கட்சியும் இப் போராட்டத்துக்கு இப்போது ஆதரவளித்து வருகிறது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் போட்டிக் கட்சியும் ஐ.தே.க.வின் தற்போதய கூட்டுக் கட்சியுமான மலையக மக்கள் முன்னணியும் இதற்கு ஆதரவளிக்கிறது.

எனினும் திரண்டுவரும் இப் போராட்ட அலையையிட்டு கம்பனிகள் இன்னும் மௌனம் சாதிக்கின்றன.

டொலர் பெறுமதி அதிகரிப்பினால் தேயிலை ஏற்றுமதியால் அதிக லாபம் ஈட்டக் கூடியதாகவுள்ள உண்மை நிலையை மறைக்கின்ற கம்பனிகள் சம்பளத்தை ஏன் அதிகரிக்க முடியாதென்பதற்கு காரணம் காட்ட முடியாதவையாக இருக்கின்றன.

இதேவேளை கம்பனிகளுடனான பேச்சுவார்த்தையில் அரசாங்கம் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்கிறது.

அது இத்தகைய சம்பள உயர்வு வழங்கப்பட்டால் ஏனைய துறைகளிலும் சம்பள உயர்வு கோரிக்கைகள் தூண்டப்படுமென்ற அச்சத்தின் காரணமாக இதில் சம்பந்தமுறாதவர்களாக இருந்துகொள்ள முனைகிறது.

இதுகுறித்து இறுதித் தீர்வுக்கு வழி வகுக்க வேண்டிய கடப்பாடு அரசாங்கத்துக்கே உள்ளது.

இப் பிரச்சனையில் அரசாங்கத்தின் தலைவர்களிடம் வெவ்வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

தீர்க்கமான பங்காற்றவேண்டிய ஜனாதிபதி தற்போது 3 வார விஜயமொன்றை மேற்கொண்டு வெளிநாடு சென்றுவிட்டார்.

இதேவேளை கடந்த திங்கட்கிழமை தொழிற்சங்கங்களோடு கம்பனிகள் நடத்தவிருந்த பேச்சுவார்த்தை இதுகுறித்த முடிவெதற்கும் வர முடியாதமையால் ஒத்திப் போடப்பட்டு விட்டது.

இ.தொ.க., கம்பனிகள், அரசாங்கம் ஆகிய முத்தரப்புக்கும் இக்கட்டைத் தோற்றுவித்திருக்கும் இப் போராட்டத்துக்கு திருப்திகரமான தீர்வு கிடைக்காவிட்டால் அது தொழிற்சங்கப் பிரச்சனையென்பதிலிருந்து அரசியல் பிரச்சனையாக மாறக்கூடிய நிலைமை உள்ளது.

அதனால் இதில் பல்வேறு தரப்பினர்களுக்கும் அவரவர்க்குரிய அரசியல் நோக்கங்களும் இருக்கவே செய்கிறது.

எவ்வாறாக இருந்தாலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு விலையேற்றத்தை ஈடுகட்டக்கூடிய சம்பள உயர்வு மிக அத்தியாவசியமான வாழ்க்கைத் தேவையாக உள்ளதை யாரும் மறுக்க முடியாது.

இப் பிரச்சனையில் அரசியல் லாபம் தேடுவதைவிடுத்து சகல தரப்பினரும் மனிதாபிமானக் கண்ணோட்டத்தோடு இதற்கு ஒரு தீர்வு கிட்ட ஒத்துழைப்பதே அவசியம்.

கம்பனிகள் இறங்கி வருவதுதான் இதன் முதற்கட்டம்.

இறங்குவார்களா?

## செய்திச் சிதறல்

✦ ஆப்கானிஸ்தான் நாட்டை ஆண்டு வரும் இஸ்லாமிய அடிப்படைவாதிகளான தலிபான் ஆட்சியாளர்கள் அந்நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முன்னதாக உருவாக்கப் பட்டிருந்த மிக உயரமான புத்தர் சிலைகளை பீரங்கிக் குண்டுகளாலும் மோட்டார் குண்டுகளாலும் தகர்த்து விட்டனர். புராதன காலத்தில் உருவாக்கப்பட்ட பெறுமதிவாய்ந்த அந்த உருவச்சிலைகள் இஸ்லாம் மார்க்கத்துக்கு முற்றிலும் மாறுபட்டவை என்பதனால், அவற்றை தகர்த்து எறியப் போவதாக, தலிபான் அமைப்பினர் கூறிவந்த போதிலும் அதை நடைமுறைப்படுத்தவில்லை. ஆனால் இப்போது உலகநாடுகள் அனைத்தும் எதிர்த்தும் கூட அதைப் பொருட்படுத்தாமல் சிலைகளை தகர்த்து விட்டனர். இலங்கை அரசும் சிலை தகர்ப்பை எதிர்த்து குரலெழுப்பியது. இங்கு சத்தியாக்கிரகங்களும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் பிரார்த்தனைகளும் நடந்துகொண்டுதான் உள்ளன. தலிபான் ஆட்சியை பாகிஸ்தான் அங்கீகரித்தது. எனவே இலங்கையின் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் பிரதமர் இரட்ணசிறி விக்கிரமநாயக்காவும் பாகிஸ்தான் சென்று அந்நாட்டின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆனால் ஏற்கனவே தலிபான் கூறியபடி சிலைகள் யாவும் உடைத்தெறியப் பட்டுவிட்டன.

✦ ஆப்கானிஸ்தான்-தலிபான் என்ன... இங்கும் பௌத்த மதத்துடன் தொடர்பில்லாத இந்துமதக் கோயில்களும் கிறிஸ்தவ தேவாலங்களும் யுத்தம் என்ற போர்வையில் அடித்து உடைத்து நொருக்கப்பட்டுள்ளன. பாடல் பெற்ற சேத்திரமான திருக்கேதீஸ்வர ஆலயம் இன்று உள்ள நிலைபற்றி ஆட்சியிலிருப்பவர்கள் சிறிதளவேனும் சிந்தித்துப் பார்த்ததாக தெரியவில்லை. அங்கு படையினர் குடிகொண்டுள்ளனர். ஆலயத்தின் கர்ப்பக்கிரகம் வரை பூட்ஸ்கால்களுடன் திரிந்துவருகின்றனர். மச்சம், மாமிசம் மற்றும் உண்டான சைவத்துக்குப் பொருந்தாத உணவுப் பண்டங்கள் ஆலயத்தினுள்ளே சமைத்து உண்ணப்படுகின்றன. தலிபானின் நடவடிக்கைக்காக அழுது புலம்பும் ஆட்சியாளர்கள், சீரழிந்து போகும் சைவக்கோயில்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் ஆகியவற்றைப் பற்றியும் எண்ணிப்பார்க்க வேண்டும்!

✦ ஊவா மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தில் புலி உறுப்பினர் ஒருவர் சரணடைந்துள்ளார். அர்ஜுன் தவராஜா எனும் 16 வயதுடைய இந்நபர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் என்றும் 6 மாதகால ஆயுதப் பயிற்சி பெற்ற புலி உறுப்பினர் என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும் பொலன்னறுவை-திம்புலாகலயைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவர் அக்கரைப்பற்று விஷேட அதிரடிப்படையினரிடம் சரணடைந்துள்ளார். இவர் கஞ்சி குடிச்ச ஆறு பகுதியிலுள்ள புலிகளின் முகாமில் இருந்து தப்பி வந்தவர் என்றும் ஒரு வருடம் புலி உறுப்பினராகச் செயற்பட்டதாகவும் தெரிவித்துள்ளாராம். அக்கரைப்பற்றில் சமீப சில நாட்களுக்குள் சரணடைந்துள்ள 5வது புலி உறுப்பினர் இவராகும் என்றும் படையினர் கூறுகின்றனர்.

# அண்டை மண்டலத்தில்....

## கங்குலி–நக்மா

# காதல் கிரிக்கெட்

“அண்ணன் அசாருதீன் காட்டிய வழியம்மா” என்று இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் திருவாளர் சவுரவ் கங்குலி முழு வீச்சில் இறங்கிவிட்டார் நடிகையுடன், சுற்றுவதில்!

கங்குலி-நக்மா இருவரும் சேர்ந்தே சுற்றுகிறார்கள் என்ற செய்தி நம்மை திடுக்கிட வைத்திருக்கிறது.!

ஆடுகளத்தில் பந்துவீச்சு வேகமாக இருக்கிறதோ இல்லையோ, அந்தரங்கத்தில் அணங்குகளிடம் வீரர்கள் காட்டும் வீச்சு பல விக்கெட்டுகளை வீழ்த்திவிடும் போலிருக்கிறது!

இதற்கு பூஜைபோட்டு தொடக்கி வைத்தவர் அசார்!

உலக அரங்கில் இந்திய கிரிக்கெட்



அணிக்கு இருந்த மதிப்பும் மரியாதையும் அசாருதீன் தலைமைக்குப் பிறகு மளமள வென சரியத் தொடங்கியது!

இந்த சரிவுக்கு முக்கிய காரணம் நடிகை சங்கீதா பிஜ்லானிதான்!

சார்ஜாவுக்கு இந்திய அணி கிரிக்கெட் ஆடப் போகும்போதெல்லாம் இந்தி திரைப்பட நடிகைகளும் அங்கு செல்வார்கள். வேடிக்கை பார்க்கத்தான் செல்கிறார்கள் என்று தொடக்கத்தில் எல்லோருமே நினைத்தார்கள்.

ஆனால் போகப் போகத்தான் தெரிந்தது, இவர்கள் விளையாட்டை வேடிக்கை பார்க்கப்போகவில்லை, இந்திய வீரர்களுக்கு வேடிக்கைப் பொருளாகப் போகிறார்கள் என்பது!

ஆடுகளத்தில் இறங்க வேண்டியவர்களை போக களத்தில் இறக்கிவிட்டு அவர்களுக்கு விளையாடும் பொம்மைகளாக நடிகைகளை அனுப்பிய தாவூத் இப்ராகிமின் சேவை மீண்டும் தொடர்கிறதோ என்ற அச்சம் இப்போது வந்திருக்கிறது!

இந்தி திரைப்பட உலகத்தை தன் கைப்பிடிக்குள் வைத்திருந்த சர்வதேச கடத்தல் மன்னன் தாவூத் இப்ராகிம் இட்ட பணியை சிரமேற்கொண்ட நடிகைகளின் அணிக்கு தலைமை வகித்தவர் நடிகை மந்தாகினி. ‘ராம்தேரி கங்கா மைலி’ என்றபடத்தில் இவரை அறிமுகப்படுத்தியவர் இயக்குநர் ராஜ்கபூர். முதல் படத்திலேயே சொட்டச் சொட்ட நனைந்து கிறங்கடித்தவர் இந்த, மந்தாகினி!

இவரின் அருளாசியுடன்தான் நடிகை சங்கீதா பிஜ்லானி சார்ஜாவுக்கு சென்று அசாருதீனுக்கு சொக்குப்பொடி போட்டு சோர்வடையச் செய்தார்.

கவுரவமான குடும்பப் பெண்ணை மணந்து கொண்டு பெருமையுடன் வாழ்ந்து வந்த வீரர் அசார், நடிகை சங்கீதா பிஜ்லானியை தொட்டதற்கு பிறகுதான் சோதனைகளை அனுபவிக்கத் தொடங்கினார்.

இன்று சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு ‘.’.பிக்சிங்’ மோசடி வழக்கில் மாட்டிக்கொண்டு நீதி மன்றத்தின் நெடிய படிக்கட்டுகளையும் எண்ணிக் கொண்டிருக்கிறார்.

அசாருதீனை அடுத்து இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைமைப் பதவியை ஏற்றவர் சச்சின் டெண்டுல்கர். இவருக்கு அடுத்து இப்போது பொறுப்பேற்றிருப்பவர் சவுரவ் கங்குலி! மணமானவர்!

இவர் காதலித்து கரம் பிடித்த பெண்ணின் பெயர் டோனா.

சவுரவ் கங்குலி சாதாரண குடும்பத்தில் வந்தவரல்ல; மேற்கு வங்கத்தைச் சேர்ந்த அரச பரம்பரையைச் சேர்ந்தவர்.

“எல்லாம் கடவுள் செயல்” என்று இறைவனை முழு மனதுடன் நம்புகிற கங்குலி இன்று “எல்லாம் நக்மா வசமே” என்று கீழிறங்கி வந்திருக்கிறார்!

‘குட்டி மகாராஜா’ என்று இவரைச் செல்லமாக அழைப்பார்கள்.

இன்று அது வேறு அர்த்தத்தின் விளைநிலமாகி விட்டது!

கங்குலி-டோனா.

இவ்விருவரின் காதல் கதையையே படமாக்கிவிடலாம். அவ்வளவு சுவையானது!

கங்குலியின் கரம்பற்றுவதற்காக காத்திருந்த அந்த ‘காதல் காலம்’ இன்றும் டோனாவுக்கு வசந்த காலமே!

“பக்கத்து பக்கத்து வீடுகளில்தான் வாழ்ந்து வந்தோம். பார்த்தோம், பழகினோம். எப்போது காதலிக்க ஆரம்பித்தோம் என்பது தெரியாது. எங்கள் காதலுக்கு இரு வீட்டிலுமே எதிர்ப்பு! என்னை வீட்டை விட்டு வெளியே அனுப்புவதற்குக் கூட தடை! ரோமியோ-ஜூலியட் கதை மாதிரி தான்!

நடன வகுப்புக்கு ஞாயிற்றுக்கிழமை செல்ல மட்டும் அனுமதி! இரண்டு தெருக்கள் தள்ளி உள்ள சிற்றுண்டிச் சாலையில் இரகசிய சந்திப்பு நிகழும்,” என்று கடந்த காலத்தை நினைவில் வைத்திருக்கும் டோனா நிகழ்கால கங்குலி-நக்மா காதலைப் பற்றி என்ன நினைத்திருக்கிறாரோ தெரியவில்லை!

தன் மனைவி “டோனாவுக்கு கிரிக்கெட் பற்றி எதுவும் தெரியாது. ஆகவே அவளுடன் கிரிக்கெட் பற்றி ஒருநாளும் விவாதித்தது கிடையாது” என்று சொல்லும் கங்குலி விக்கெட்டுகளை வீழ்த்துவது பற்றி விரிவாக விவாதம் செய்யத் தெரிந்தவர் நக்மா என்று நினைத்து இருக்கிறாரோ என்னவோ தெரியவில்லை!

நடிகை நக்மாவைப் பற்றி தெரியாதவர்கள் யாருமில்லை!

இந்திப் படஉலகில் காலடி வைத்ததுமே முதன் முதலாக இருவருடன் இணைத்துப் பேசப்பட்டவர் பிரபலமிக்க ராஜ்கபூரின் குடும்பத்துப்பிள்ளை சிம்புகபூர்!

அடுத்தது-

பிரபல படத்தயாரிப்பாளர் சுஜித் நாடியத்வாலா!

பிறகு கோவிந்தா,

ஆந்திரத்து நாகார்ஜுனா..

இப்படியாக படிப்படியாக கிசுகிசுக்களில் வளர்ந்த நக்மா தமிழகத்தில் ஜெயலலிதா முதல்வராக இருந்த காலத்தில் தேசம் முழுக்க கிசுகிசுக்கப்பட்ட தேசிய கீதமாகி இருந்தார்.

இந்தியாவின் பிரதமர் பீடத்தில் நரசிம்மராவ் அமர்ந்திருந்தபோது சில மாநிலங்களுக்கு ‘ஆக’ வேண்டிய காரியங்கள் அவரின் புதல்வர்கள் வழியாக ‘ஆகி’ கொண்டிருந்தன.

‘ஆடிக் கறக்க வேண்டிய மாட்டிடம் ஆடிக்கற!’

‘பாடிக் கறக்க வேண்டிய மாட்டிடம் பாடிக் கற!’

தமிழ்நாட்டின் இந்தப் பழமொழிக்கேற்ற இணைப்பு பாலமாக இருந்தவர் நக்மா என்று அன்றே பத்திரிகைகளில் பரபரப்பு செய்திகளாக பேசப்பட்டவர் நக்மா!

நரசிம்மராவின் மகன் பிரபாகர்ராவுக்கு பிடித்த நடிகை நக்மா என்ற சிறப்பும் உண்டு! இவர் நடித்த படங்களை பிரபாகர்ராவ் விரும்பி பார்ப்பார் என்ற பெருமையை ஒரு காலத்தில் பெற்றிருந்த நக்மா இன்று கங்குலியின் காதலியாக மாறி இருக்கிறார்!

தமிழ்ப்பட உலகில் பிரபல நடிகர்களுக்கு ‘ஜோடி’யாக படங்களில் இருந்து ரசிகர்களுக்கு கவர்ச்சி விருந்து படைத்தவர் நக்மா! இப்போது இவரின் தங்கை ஜோதிகா நம்பர் ஒன்ரேஞ்சுக்கு எல்லையை விரிவுபடுத்திக்கொண்டிருக்கிறார்.

இந்திய கிரிக்கெட் அணி கேப்டனாக இருக்கும் கங்குலியை நக்மா எப்படி சந்தித்தார்... எங்கே சந்தித்தார்?

கடந்த ஆண்டுதான் இவர்களின் காதல் சேதி முதன் முதலாக கசிந்தது. சார்ஜாவில் நடந்த கிரிக்கெட் போட்டியை பார்த்த இந்திய வி.ஐ.பி. களுடன் நக்மா இருந்ததை தொலைக் காட்சியிலும் பார்க்க நேர்ந்தது.

இங்கிலாந்து நாட்டுடன் கிரிக்கெட் மோதலுக்காக லண்டன் சென்றிருந்த கங்குலி, ‘அழகிய தேம்ஸ் நதிக்கரையில் நக்மாவின் தோளோடு தோள் புதைந்து நடந்து சென்றார்’ என்ற செய்தியை ஆங்கில ஏடுகள் பரபரப்புடன் வெளியிட்டிருந்தன.



அழகிய நதி அருகே அழகியின் அணைப்பில் மெய்மறந்து இருந்திருக்கிறார். கடைகளுக்கும் சென்றிருக்கிறார்.

இந்த ‘நதிக்கரை உலா’ பற்றி நக்மாவிடம் கேட்டபோது என்ன சொன்னார் தெரியுமா?

“நான் லண்டன் போனது உண்மைதான்! ஆனால் கங்கூலியுடன் சுற்றியது நான் இல்லை! என்னைப் போல உருவம் உள்ள வேறு பெண்ணாக இருந்திருக்கலாம்!” என்று அழுத்தம் திருத்தமாக அன்று சொன்னவர் காளஹஸ்தி பூஜை பற்றி நாளை இப்படியும் சொல்லக்கூடும்!

“நான் காளஹஸ்தி போனது உண்மைதான்! ஆனால் கங்குலியுடன் சிவலிங்க பூஜை நடத்தியது நானில்லை! என்னைப் போல உருவம் உள்ள வேறு பெண்ணாக இருந்திருக்கும்” என்று நக்மா சொன்னால் நாம் என்ன பேச முடியும்?

கிரிக்கெட் சூதாட்ட வழக்கில் முன்னாள் கேப்டன் அசார் சிக்குவதற்கு காரணமாக இருந்த தாவூத் இப்ராகிமுடன் ஒரு மும்பை நடிகைக்கு தொடர்பு உண்டு. அவர் அண்மையில் துபாய் சென்று தாவூத் மாளிகையில் இரகசியமாக தங்கி இருந்தார் என்று கடந்த சில மாதங்களுக்கு முன்பு பேசப்பட்டது!

அந்த நடிகை யார் என்பதை பத்திரிகைகள் குறிப்பிடவில்லை! ஒருவேளை நக்மாவாக இருந்திருந்தால், அது கவலைக்குரியது! கங்குலியின் கவுரவம் சம்பந்தப்பட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக இந்தியத் துணைக் கண்டத்தின் மரியாதை தொடர்பானது!

கண்ணுக்கழகாக காதல் மனைவியும் குழந்தைகளும் இருக்கும் போது கங்குலிக்கு ஏன் ‘எக்ஸ்டிரா பிட்டிங்’ தேவைப்படுகிறது என்பது புரியவில்லை!

கங்குலி- நக்மா ஜோடியினர் காளகஸ்தி சிவன் கோவிலுக்கு வந்து அர்ச்சனை செய்து நாகதோஷ நிவர்த்தி வேண்டி சிறப்பு வழிபாடு நடத்தியிருக்கிறார்கள்! போட்டோகிராபர்கள் முண்டி அடித்துக் கொண்டு புகைப்படம் எடுக்க முயன்றபோது தடுத்து நிறுத்தி விட்டு காரில் ஏறிப் பறந்திருக்கிறார்கள்!

காளகஸ்தியில் உள்ள ஞான பிரசூனம்பா தேவி சன்னிதியில் வழி பட்டால் கிரக தோஷங்கள் நிவர்த்தியாகும் என்பது ஐதீகம்!

கிரக தோஷம் பிடித்திருப்பது இந்திய கிரிக்கெட் அணிக்கா?

அல்லது நக்மாவுக்கா?

கங்குலிக்கா?

விடையை எதிர்நோக்கி தேசமே காத்திருக்கிறது.

**நன்றி: தேவிமணி**

# பார்த்தேன்...! எழுதுகிறேன்...!

அடாது மழை பெய்தாலும் விடாது கொழுந்து பறிக்க வேண்டிய தேயிலைத் தோட்ட தொழிலாளர் போராட்டத்தைப் பார்த்தேன்.

இந்நாட்டின் தேசிய வருமானத்தில் கணிசமான பங்களிப்பைச் செய்யும் தேயிலை உற்பத்திக்காக பரம்பரை பரம்பரையாக, கொழுத்தும் வெயிலிலும், கொட்டும் மழையிலும் கடும்பனிக் குளிரிலும் தம் உழைப்பை தந்து, இறுதியில் அந்த மலைநாட்டு மண்ணணுக்கே உரமாகிப் போகும் அவர்களின் நியாயமான சம்பள உயர்வு கோரிக்கைகூட போராட்ட வடிவமாகியும் உதாசீனப் படுத்தப்படுவதென்பது வழமையான நடவடிக்கைதான்.

இந்த நாட்டை 150 வருடங்கள் ஆண்ட வெள்ளையர்கள் விட்டுச் சென்றது சிறுபான்மையினரின் பிரச்சனையை மட்டுமல்ல; மலைகளை எல்லாம் தேயிலை, ரப்பர் விளையும் நிலங்களாக வளமாக்க, தம் வாழ்வை இழந்த, வாழ்விடத்தை இழந்த இந்திய வம்சாவளி மக்களையும் தான்.

தமிழர்கள் என்ற வட்டத்துள் இலங்கையில் வாழும் அனைத்து தமிழர்களும் ஒரு குடையின் கீழ்தான் வருவார்கள். இருந்தபோதும் மலையத்தில் வாழும் தமிழரை தனித்துவமாக காட்ட விளைவது அவர்கள் வடக்கு, கிழக்கு தமிழர்கள் போல இந்த நாட்டின் பூர்வீக குடிகளாக அல்லாமல், வெள்ளையரின் தேனீர் விருப்பத்திற்காகவும், தேயிலை ஏற்றுமதியால் பெரும்பொருள் ஈட்டவும் பெருந்தோட்டக் கம்பனிகளால் குடியேற்றப்பட்டமைதான்.

இந்தியாவின் தென் மாநிலங்களில் இருந்து கங்காணிகளின் காசுபண்ணும் குறுகிய நோக்கில், “சொர்க்கத்தை காட்டுகிறோம் வாருங்கள் என்று அவர்களின் கதைகளால் கனவுகண்டு நாட்கணக்கில், மாதக்கணக்கில் நடையாகவே, கால்நடைகள் போல கூட்டிவரப்பட்டு, அடிமைகள் போல விற்கப்பட்டு, இதுதன் எம் தலைவிதி என நரகவாழ்வை வாழ, வேறுவழியின்றி முடிவெடுத்து மிருகங்களும் அடர்ந்த மரங்களுமாய் இருந்த மலைக்காட்டை ரப்பரும் தேயிலையும் வளரும் தோட்டக்காடாக்கி கம்பனிகளை வளமாக்கி தம் வாழ்வை துயரத்தில் தோய்த்துக் கொண்ட அந்த அப்பாவித் தோட்டத் தொழிலாளர்களின் 400 ரூபா சம்பள உயர்வு போராட்டத்தைத்தான் குறிப்பிடுகின்றேன்.

இந்த நாட்டின் உழைக்கும் வர்க்கம் அரசதுறை, தனியார் துறை, தோட்டத் துறை என துறை சார்ந்ததாக உள்ளது. இதில் தனியார் துறையில் உயர் லாபநோக்கில் ஊக்குவிப்புகள் கூடியதாகவும் அரச துறை காலத்திற்கு காலம் தேர்தலை அண்டிவாக்குகளை அள்ள சம்பள உயர்வை ஏற்படுத்துவதாகவும் இருக்க, இவ்விரண்டு துறையும் கலந்த தோட்டத் துறை மட்டும் நாய்க்கு எலும்பை எறிவதுபோல், தூக்கி எறிவதை மட்டும் கவ்வ வேண்டிய கேவல நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதுதான் வேதனைக்குரியதாகும்.

அண்மையில் கூட அரசின் 1000 ரூபாய் உயர்வை அரச துறை ஊழியர் அனுபவிக்க அதன் வழி வந்த 400 ரூபா உயர்வை தனியார் துறை ஊழியரும் பெற்றனர்.

**~குத்தியன்~**

பாவம் அந்த தோட்டத் தொழிலாளர். அவர்களிற்கு எதுவும் இல்லை. வெயிலிலும் மழையிலும் இருந்து தம் உடலைக்காக்க குடையோ அன்றி றெயின் கோட்டோ இல்லாமல் வெறும் சாக்கையும், பொலித்தின் பைகளையும் மட்டுமே தலையில் கட்டி, தம் முதுகில் கூடையை சுமந்தபடி, அளவுத்தடியின் படி இரண்டு இலைகளையும் ஒரு குருத்தையும், காலை முதல் மாலை வரை இயந்திரமாக தம் கைவிரல்களை இயக்கி, கொழுந்து பறித்து பாரப்படுத்தும் அவர்களின் வேதனை யாருக்குப் புரியும். இரவின் நிசப்தத்தில் அவர்கள் விடும் ஏக்கப் பெருமூச்சின் எதிரொலிகள் பட்டுத் தெறிக்கும் மலைகளிற்குத் தான் தெரியும் அவர்கள் மனிதர்களாக அல்ல மாக்களாக நடாத்தப்படுவது.

அவர்களின் இளமையை, இரத்தத்தை, உழைப்பை குறைந்த கூலிக்கு பறித்தெடுக்கும் தோட்ட முகாமைத்துவத்திற்கு எங்கே தெரியப்போகிறது அந்தக் கடுங்குளிரிலும் அவர்களின் மூச்சுக் காற்றின் சூடு.

அவர்களின் கடும் உழைப்பில் லாப மீட்டுபவர்களுக்குத்தான் ஓடுவதற்கு வாகனமும், உடுப்பதற்கு வெள்ளையர் விட்டுச் சென்ற உடையலங்காரமும், வாழ்வதற்கு வசதியான பங்களாக்களும், கூடிக்குடிப்பதற்கும், கூத்தடிப்பதற்கும் கொம்பனி கிளப்புகளும் இருக்கின்றதே.

பாவம் அந்த கொழுந்து பறிப்பவர்கள். தகரக்கூரையால் வரும் பனிக்குளிரில் கட்டாந் தரையில் படுத்து, சுட்டரொட்டிகூட குளிரில் சுருண்டுபோக, அட்டை கடித்த இடத்தில் புகையிலை சுருட்டு சாம்பலால் மருந்திட்டு, மறுநாள் வேலைக்காக கோழித் தூக்கமிட்டு, தம்பிள்ளைகளின் படிப்பிற்காக பட்ட கடனைக் கட்டவழியில்லாமல் கம்பனிகளிடம் மண்டியிட்டு, தம் எதிர்கால கனவுகளை தேயிலை கொழுந்து பறிப்பதிலேயே பறி கொடுத்து, இன்று அதிகரித்துவிட்ட வாழ்க்கை செலவை முகங்கொடுக்க தமக்கு படி உயர்விற்காக போராட வேண்டிய நிலை எத்தனை பரிதாபம்.

விடியலை நோக்கும் இவர்களின் கவலைகளிற்கு ஓரளவு வடிகாலாக அமையக்கூடிய இந்தப் போராட்டம் நிச்சயம் வெற்றிபெற வேண்டும் என்பதுதான் ஒடுக்கப்படும் மக்களிற்காக குரல் கொடுக்கும் அனைவரதும் பிரார்த்தனை.

அதனால் தான் இந்தப் பிரார்த்தனைப் போராட்டத்தை நோக்கி அனைத்து தொழிற் சங்கங்களும், அரசின் சில அமைச்சர்களும் மட்டும் அல்ல வடக்கு, கிழக்கு, மலையக அரசியல் கட்சிகளும் ஆதரவு தர முன் வந்துள்ளன.

## அலசுவது - இராஜதந்திரி

# யாழ்ப்பாணத்தில் 'ஆழமறியாது காலைவிட்ட' ஆஷ்லி வில்ஸ்!

அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸ் யாழ்ப்பாணத்தில் இலங்கை இனப்பிரச்சனை குறித்து தமது கண்ணோட்டத்தை ஒரு நீண்ட விரிவுரையாக கடந்த வாரம் வெளியிட்டிருந்தார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக திரு. ஆஷ்லி வில்ஸ் ஒரு சில மாதங்களுக்கு முன்னரே பதவியேற்றிருந்தார். அதன் பின்னர் அவர் முதல் தடவையாக யாழ்ப்பாணத்துக்கு கடந்தவாரம் விஜயஞ் செய்திருந்தார்.

இலங்கை இனப்பிரச்சனை காரணமாகத் தோன்றியுள்ள பாதிப்புக்களை அவதானிப்போர், அரசியல் ரீதியாகவே அப்பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டுமென்பதை வலியுறுத்தி வருகின்றனர்.

அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸ், யாழ்ப்பாணத்தில் நிகழ்த்திய நீண்ட உரையில் கூட இலங்கை இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வே ஒரு பரிகாரமாகும் என்பதைக் குறிப்பிட்டிருந்தார்.

இருந்த போதிலும் தூதுவர் வில்ஸ் அரசியல் தீர்வு தொடர்பாக வெளியிட்ட கருத்துக்கள், அமெரிக்க ஏகாதிபத்தியப் போக்கின் சாயல் அவரிடம் நிறையவே குடிகொண்டிருப்பதையே வெளிப்படுத்தியிருந்தன.

உலகில் இன்று அமெரிக்கா ஒரு முன்னணி வல்லரசாக இருக்கின்றது. இதன் காரணமாக சர்வதேச அரங்கில் பலதரப்பட்ட பிரச்சனைகளிலும் அமெரிக்காவின் தலையீடு இருந்துவருகின்றது.

இலங்கையுடன், குறிப்பாக யாழ்ப்பாணக்குடா நாட்டுடன் அமெரிக்காவுக்கு இருக்கும் தொடர்பு சுமார் 100 வருடங்களையும் தாண்டியதாகவே காணப்படுகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருக்கும் முன்னணிக் கல்விக்கூடங்கள் பலவும் அமெரிக்க மிஷனரிமார்களினால் உருவாக்கப்பட்டவையாகும்.

யாழ்குடாநாட்டில் அமெரிக்க மிஷனரிமார்களினால் ஏற்படுத்தப்பட்ட கல்விக் கூடங்களே அறிவு பூர்வமான மாணவ சமூகத்தை அப்பிரதேசத்தில் உருவாக்குவதில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை வழங்கியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இருந்தபோதிலும் யாழ்ப்பாணக்குடாநாட்டை சிரசாகக் கொண்டிருக்கும் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரதேசம் கடந்த நூற்றாண்டுகளில் பெற்றிருந்த சிறப்புக்களிலிருந்து தற்போது பெரிதும் விலகிச் சென்றுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

இனப் பிரச்சனையின் தாக்கம் வடக்கு-கிழக்கைத் தாயகமாகக் கொண்ட இலங்கையின் தமிழ் மக்களை அரசியல், சமூக, பொருளாதார ரீதியாக வெகுவாகவே பாதித்திருப்பதுடன், அம் மக்களின் உயிர்வாழும் உரிமையையும் கேள்விக் குறியாக்கி விட்டுள்ளது.

தமது தனித்துவத்தை நிலை நாட்டி அனைத்து உரிமைகளுடனும் கௌரவமாக இந்நாட்டில் வாழவேண்டுமென்பதற்காகவே கடந்த 50 வருடங்களுக்கும் மேலாக வடக்கு-கிழக்கு மக்கள் போராடி வருகின்றனர்.

இலங்கையின் இனப்பிரச்சனை தற்போது சர்வதேச அரங்கையும் எட்டியுள்ள நிலையில், இலங்கையின் பெரும்பான்மை இன ஆட்சியாளர்கள் தமக்குத்தர மறுத்தவற்றை, சர்வதேச சமூகம் பெற்றுத் தர வேண்டுமென்பதையே வடக்கு-கிழக்கு மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அரசியல் உரிமைகளைப் பெறுவது தொடர்பாக இலங்கையின் வடக்கு-கிழக்கு மக்கள் ஏராளமான ஏமாற்றங்களைச் சந்தித்தோராகவே இருக்கின்றனர்.

இந்நிலையில் பிரித்தானிய அரசாங்கம் தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத அமைப்பாக அறிவித்ததையடுத்து, யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்த அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸ், அங்கு நிகழ்த்திய உரை, சர்வதேச சமூகத்திடமிருந்தும் வடக்கு-கிழக்கு மக்கள் ஏமாற்றத்தை எதிர்நோக்க வேண்டியிருக்குமோ என்ற எண்ணத்தையே உருவாக்குவதாக இருக்கின்றது.

திரு. ஆஷ்லி வில்ஸ் யாழ்ப்பாணத்தில் நிகழ்த்திய உரையில் இலங்கையின் பல்லினத்தன்மை, மற்றும் அரசியல் தீர்வு, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு என்பவைபற்றி அலசி ஆராய்ந்திருந்தார்.

ஆயினும் திரு.வில்ஸின் கண்ணோட்டம் அழுத்தம், திருத்தமாக இலங்கையின் வடக்கு-கிழக்கு மக்களுக்கு எத்தகையதொரு அரசியல் தீர்வுத் திட்டம் ஏற்புடையதாகும் என்பதைக் கூறத் தவறியதாக இருந்ததையே அவதானிக்க முடிந்தது.

ஜனநாயக அரசியலைப் பொறுத்தவரை அமெரிக்கா ஒரு பெரு விருட்சமாகவே இருக்கின்றது. அமெரிக்க அரசியலமைப்பு தனிமனித சுதந்திரம், அடிப்படை மனித உரிமைகள் என்பவற்றைப் பெரிதும் உறுதி செய்ததாகவே இருக்கின்றது.

பலம்பொருந்திய அமெரிக்க ஆட்சி முறைக்குச் சிறப்புச் சேர்ப்பதாக அந்நாட்டின் மாநிலவாரியான அதிகாரப்பரவலாக்கம் காணப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்காவில் ஐம்பது மாநிலங்கள் இருக்கின்றன. இந்த மாநிலங்கள் ஒவ்வொன்றும் சமஷ்டி அடிப்படையில் நிர்வாக முறையைக் கொண்டவையாகவே இருக்கின்றன.

எனவே அமெரிக்காவின் காத்திரமான ஜனநாயக அரசியலின் சிறப்பம்சமாக அந்நாட்டில் நிலவுகின்ற மாநிலவாரியான அதிகாரப் பகிர்வே காணப்படுகின்றது.

இலங்கையில்கூட இன மற்றும் பிரதேச வாரியாகத் தனித்துவமான அம்சங்களைக் கொண்டுள்ள வடக்கு-கிழக்குத் தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் சமஷ்டி அடிப்படையிலேயே ஓர் அரசியல் தீர்வை வலியுறுத்தி வருபவர்களாக இருக்கின்றனர்.

திரு. ஆஷ்லி வில்ஸ் யாழ்ப்பாணத்தில் பலதரப்பட்ட துறைகளையும் சேர்ந்த பிரமுகர்கள் மத்தியில் தமது உரையை நிகழ்த்தியிருந்தார். அப்போது இரு செய்திகளைத் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தாம் தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

"விடுதலைப் புலிகள் தமிழீழத்துக்காகவே இன்னமும் போராடுகிறார்களேயானால் அந்த இலக்கு ஏற்றுக் கொள்ள முடியாதென்பதை தயவு செய்து அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்."

இதுவே திரு. ஆஷ்லி வில்ஸ் விடுத்த முதலாவது செய்தியாகும்.

"தமிழ் மக்களைப் பற்றியும், அவர்களது உரிமைகளை உத்தரவாதப்படுத்துவது பற்றியும் உண்மையில் புலிகள் அக்கறை கொண்டவர்களாயின் வன்முறையைக் கைவிட்டு அவர்கள் பேச்சு வார்த்தையிலீடுபடவேண்டும்"

இதுவே அமெரிக்கத் தூதுவர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கிய இரண்டாவது செய்தியாகும்.

கருத்துச் சுதந்திரத்தை வெகுவாகவே



ஆஸ்லி வில்ஸ்

மதிக்கும் ஒரு நாட்டைச் சேர்ந்தவரே திரு. ஆஷ்லி வில்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே அவர் தமது அறிவுக் கெட்டியபடி கருத்துக்களை வெளியிடப் பூரண உரிமை கொண்டவராக இருக்கின்றார்.

இருந்தபோதிலும் அவர் கொண்டுள்ள கருத்துக் கண்ணோட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவையாயின், அவற்றை நிராகரிக்கும் உரிமையும் ஜனநாயக உரிமைகள் சார்ந்ததாகவே இருக்கின்றது.

'தமிழீழம் ஓர் அடையப்படமுடியாத இலக்கு' என்று புலிகளுக்கான தனது முதலாவது செய்தியில் திரு. ஆஷ்லி வில்ஸ் கூறியிருந்தார்.

ஆனால் தமிழீழம் என்ற ஓர் இலக்கை தமிழ் மக்கள் ஏன் முன்வைத்தார்கள்? இன்று அந்த இலக்கையே குறிவைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் ஏன் உறுதியாக இருக்கின்றார்கள்? என்பதை இலங்கைக்குப் புதியவரான திரு. ஆஷ்லி வில்ஸ் எவ்வளவு தூரம் தெரிந்து வைத்துள்ளார் என்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது.

சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்னரே அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் மாநிலத்தில் தமிழீழக் கொடி ஏற்றப்பட்டிருந்ததென்பதை திரு. ஆஷ்லி வில்ஸ் அறிந்து கொள்ள வேண்டியவராகின்றார்.

தனிநாட்டுக் கோரிக்கையை ஆரம்பத்தில் முன்வைத்த அரசியல் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரான திரு. முருகேசு சிவசிதம்பரம் அவர்களே அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் மாநிலத்தில் தமிழீழக் கொடியை ஏற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்றைய மசாசூசெட்ஸ் மாநில அரசு இலங்கைத் தமிழர்களின் அரசியல் போராட்டத்துக்கு அமெரிக்காவில் வதியும் இலங்கைத் தமிழர்கள் வாயிலாக ஆதரவு தெரிவித்திருந்தது.

அந்த ஆதரவை வெளிப்படுத்தும் விதத்திலேயே தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரத்துக்கு மசாசூசெட்ஸில் அன்று தமிழீழக் கொடியை ஏற்றி வைக்கவும் அம்மாநில அரசு அனுமதித்திருந்தது.

இந்நிலையில் தமிழீழக்கோரிக்கையை தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமே உறுதியாகப் பற்றி நிற்கிறார்கள் என்று அமெரிக்க தூதுவர் திரு. ஆஷ்லி வில்ஸ் கருதுவாரேயானால், அது அவரது அறியாமை என்றே குறிப்பிட முடியும்.

வடக்கு-கிழக்கு மக்களின் அரசியல் உரிமைப்போராட்டத்தில் அவர்களது ஆதார சுருதியாக இருப்பது தமிழீழக் கோரிக்கை என்பதையே திரு. ஆஷ்லி வில்ஸ் ஏற்றுக் கொள்ள வேண்டியவராகின்றார்.

தமிழீழக் கோரிக்கையை ஒரு சமஷ்டி வடிவில், தயாரித்து வடக்கு-கிழக்குப் பிரதேசத்தைப் பூர்வீகத் தாயகமாகக் கொண்ட தமிழ் மக்களுக்கு வழங்குவதா? அல்லது வடக்கு-கிழக்கு மக்கள் தமிழீழம் என்ற தனி நாட்டைப் போராடிப் பெறுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்குவதா? என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்களாகவே இலங்கையின் பெரும்பான்மைச் சிங்கள இன ஆட்சியாளர்கள் காணப்படுகின்றனர்.

எனவே வடக்கு-கிழக்கு மக்களுக்கு அவர்களது தன்னாட்சி உரிமையை ஐக்கியப்பட்ட இலங்கையில் சமஷ்டி அடிப்படையில்-அமெரிக்காவில் போன்று நிர்ணயஞ் செய்வதா? அல்லது வடக்கு-கிழக்கு மக்களைப் பிரிந்து செல்ல அனுமதிப்பதா? என்பதை வரையறை செய்வதாகவே இலங்கை இனப்பிரச்சனை குறித்து சர்வதேச மட்டத்திலும் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதையும் திரு. ஆஷ்லி வில்ஸ் அறிய வேண்டியவராகின்றார்.

அமெரிக்கத் தூதுவர் திரு. ஆஷ்லி வில்ஸ் தமிழீழ விடுதலைப் புலிகள் வன்முறைகளைக் கைவிடுவதன் மூலமே அரசியல் ரீதியாக, வடக்கு-கிழக்கு மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியுமென்பதை புலிகளுக்கான தமது இரண்டாவது செய்தியாக வெளியிட்டிருந்தார்.

இனப்பிரச்சனை குறித்த வன்முறைகளின் ஆரம்பத்தை திரு. ஆஷ்லி வில்ஸ் சரிவரப்புரிந்து கொள்ளாதிருப்பதையே அவரது இந்த இரண்டாவது செய்தி எடுத்தியம்புவதாக இருக்கின்றது.

மூத்த தமிழ் அரசியல் தலைவர்கள் இலங்கையின் வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்காக ஜனநாயக ரீதியில் அஹிம்சை வழிநின்றே கோரிக்கைகளை முன்வைத்தனர். அப்போதெல்லாம் அவர்களுக்கு வன்முறைகள் மூலமாகவே பெரும்பான்மை இன ஆட்சியாளர்களிடமிருந்து பதில் கிடைத்து வந்தது.

அரசியல் ரீதியாக ஆரோக்கியமான தீர்வுத் திட்டங்களை தமிழ் அரசியலாளர்கள் ஏற்க முன்வந்தபோதுகூட பேரினவாத வன்முறையாளர்கள் அவற்றை நாசஞ் செய்திருந்தனர்.

காலப்போக்கில் பேரினவாத இனவெறியர்களின் வன்முறைகள், அப்பாவித் தமிழ் மக்கள்மீதும் திரும்பியிருந்ததோடு அவர்களது உயிர், உடமைகள் என்பவற்றையும் சுட்டுப் பொசுக்கி விட்டிருந்ததை திரு. ஆஷ்லி வில்ஸ் அறியவேண்டியவராகின்றார்.

இந்நிலையில் வடக்கு-கிழக்கில் வெடித்த ஆயுதப் போராட்டமென்பது வன்முறைகள், மற்றும் அடாவடித்தனங்கள், ஏமாற்றுவித்தைகள் என்பவற்றைச்சகிக்க முடியாத கட்டத்திலேயே தமிழ் மக்கள் மத்தியில் தோற்றம் பெற்றிருந்ததென்பதை திரு. ஆஷ்லி வில்ஸ் உணர வேண்டியவராகின்றார்.

யாழ்ப்பாணத்தில் தமது உரையை தற்போது தற்காலிகமாக இயங்கிவரும் யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தின் கேட்போர் கூடத்திலேயே அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸ் நிகழ்த்தியிருந்தார்.


ஆனால் யாழ்ப்பாணத்தின் உண்மையான பொதுசன நூலகம் அதுவல்ல, கம்பீரத் தோற்றத்துடன் அமெரிக்க மிஷனரிமார்களின் சேகரிப்புக்களாக இருந்த நூல்கள் பலவற்றை கொண்டிருந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்கூட தென்னிலங்கையின் பேரினவாத சிங்கள வன்முறையாளர்களால் தீக்கிரையாக்கப்பட்டதையும் திரு. ஆஷ்லி வில்ஸ் நிச்சயம் அறிந்திருக்க வேண்டியவராகின்றார்.

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு அரசியல் ரீதியாகவே தீர்வுகள் எட்டப்படுவதை அமெரிக்கா விரும்புவதாகவும், அத்தகைய ஒரு தீர்வுக்கு ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகவும் திரு. ஆஷ்லி வில்ஸ் குறிப்பிட்டிருந்தார்.

அமெரிக்கா மட்டுமல்ல, சர்வதேச சமூகம் அனைத்துமே அரசியல் ரீதியாக ஒரு கௌரவமான தீர்வுத் திட்டத்தைப் பெற்றுத் தரவேண்டுமென்றே இலங்கையின் வடக்கு-கிழக்கு மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அதேசமயம் இலங்கைப் பிரச்சனையின் ஆழமறியாது தூதுவர் திரு. ஆஷ்லி வில்ஸ் வெளியிட்டது போன்ற கருத்துக் கண்ணோட்டங்களால் உயர்வான குறிக்கோளைக் கொண்ட தமது அரசியல் போராட்டத்துக்கு களங்கம் ஏற்படலாகாது என்பதிலும் வடக்கு-கிழக்கு மக்கள் உறுதியாக இருக்கின்றனர்.

## அதிரடி அய்யாத்துரை



**குளிருக்கு உதறல்** எடுத்து நடுங்கின மலையகத்தில் காட்டுத் தீயாக போராட்டம் பரவி வருகிறதாம். பிரின்சஸ் சந்தியில் குந்தியிருந்து கொண்டு கொழும்பைக் கலக்குறாராம் கிங் மேக்கரின் பேரன். உண்ணாவிரதம் இருந்தால் கொழுப்புக் கரையும் என்று கூறி உதாசீனம் பண்ணியவையின் எதிரொலிதான் மலை முகடுகளை உசுப்பியிருக்கிறதாம்.

**சமாதானம் எட்டுவது எப்படி** என்று போதனை நடத்தத் தூது போகும் நாடு ஆளும் மற்றும் எதிர்க்கட்சி பிரதிநிதிகளை அழைத்திருந்தது. நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழிபோறப் புல்லுக்கும் ஆங்கே பொசிவது போல், கூத்தணியின் துணைத்தலைவர் சொந்த வேலையையும் கவனிச்சுக் கொண்டு கடைசிநேரத்திலதான் விடயத்துக்கு வந்து சேர்ந்தாராம். இப்படியே போனால் நோ...வே தானாம்.

**குட்டுப் போட்டாலும் அது** மோதிரக் கை வல்லரசு நாட்டின் தூதுவர் குடாநாட்டு மண்ணில் நிண்டு சொன்ன விடயங்கள் கசப்பான மருந்துகள். மோதிரக் கையால போட்ட குட்டுக்கள் மானம், ரோஷம் பேசுறவையள் இனிமேல் எண்டாலும் படியேறித் திரியுறதைக் கைவிட்டால் நல்லதாயிருக்கலாம்.

**வெள்ளைக்காரன் ஏமாத்திப்** போட்டான் என்று பிரளயம் ஒரு பக்கம். நியாயங்களை எடுத்துரைத்த விண்ணன் என்ற பாராட்டுக்கள் மறுபக்கம். கெட்டித்தனமாய்க் கதைக்கிறன் எண்ட நினைப்பில கதிர்காமத்தார் சொல்லுற வார்த்தைகளைப் பார்த்தா "இந்தப் பாவத்தில எனக்குப் பங்கில்ல," எண்டு கை கழுவுற மாதிரியெல்லோ கிடக்கு என்றார் விஷயம் புரிந்த ஒருவர்.

**நெடுந் தொலைவில் இருக்கிற** தீவுக்குப் போன தூதுவர் கடலில் குளித்து ஆனந்தம் கொண்டாடினாராம். அடிமைகள் என்று எவரையும் காணவில்லையே என்றாராம். தலைநகரில் தம்மை சந்திக்கும் பிரமுகர்கள் கூறும் பொய் உரைகளின் கோப வெளிப்பாடுதானாம், நூல் நிலைய சொற்பெருக்கு என்றும் கூறப்படுகிறது.

**திருக்கேதீஸ்வர பெருமானுக்கும்** தடுப்புக் காவல், சித்திரவதை பாலாவியில் துர்நாற்றம். ஆலயச் சூழலில் அடர் காடு- இப்படியெல்லாம் கூறுகிறார்கள் சென்று திரும்பியவர்கள். அதுசரி, ஆனால் யாரது முயற்சியினால், எப்படி பயணம் சாத்தியமானது என்பது பற்றி எவரும் மூச்சுவிடவும் காணோம். 'செத்தார் எறும்பு அணிவான் திருக்கேதீஸ்வரத்தானே' என்பது உண்மையாகி இருக்கிறது என்றார் ஒருவர். இல்லை, இல்லை. அது 'செத்தார் எனினும் பணியார் திருக்கேதீஸ்வரத்தாரே' என்று தானிருக்க வேண்டும் என்கிறார் இன்னுமொருவர். எது சரியாக இருக்கலாம்?

**பயங்கரவாதத்துக்கு யுத்தம் மூலம்** தீர்வு இனப் பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு. அதிகாரத் தரப்பு தெட்டத் தெளிவாக சொல்லியிருக்கிறது. வன்முறைச் சம்பவங்கள் பயங்கரவாதம் அல்ல என்று உரத்த குரலில் பேச வேண்டிய தமிழ்க் கட்சிகள் மௌனித்து நிற்பது ஏன்? என்கிறார் ஸ்ரீமான் பொதுசனம்.

## திகில் தொடர்



'அங்கே அவன் படுத்து தூங்கிக் கொண்டிருப்பானோ' என்று நினைத்த யோகேஷ் ஒரு கையில் வீச்சரிவாளுடனும், இன்னொரு கையில் டார்ச் லைட்டுடனும் போனான்.

காவல் மாடக்கதவு லேசாக திறந்தபடியே தெரிந்தது. மறுபடியும் கூப்பிட்டான். ஏமாற்றம். பதிலே இல்லை.

இந்நேரம் அவன் வெளியே எங்கும் போயிருக்க மாட்டானே! குழப்பம் பரவ கதவைத் தள்ளினான். கதவு எதன் மீதோ மோதி லேசான கிரீச் சப்தத்துடன் மறுபடியும் மூடிக் கொண்டது.

யோகேஷ் துணுக்குற்றான்.

உள்ளே யாராவது இருந்து கதவைச் சாத்தினார்களா?

லேசான அதிர்வுடன் நின்றான். கழுத்தோரம் வியர்வை சுரப்பது போல் இருந்தது. இதயம் படபடத்தது.

திரும்பவும் "யாரது உள்ளே?" என்று குரல் கொடுத்தான்.

பதில் இல்லை.

வருவது வரட்டும் என்று துணிந்து டார்ச் லைட்டை பிடித்தபடி கதவைப் பலமாக தள்ளினான். திறந்து கொண்டதும் பார்வை உள்ளே ஓட, நரம்பு மண்டலம் பூராவும் வெடித்து விட்டது போல் திடுக்கிட்டு, உறைந்து போனான்.

வாட்ச்மேன் சம்பூர்ண் மேலே உத்திரத்தில், கழுத்தில் சுருக்கிட்டு தொங்கிக் கொண்டிருந்தான்.

கால்களுக்குக் கீழே பழைய ஸ்டூல் நாற்காலி ஒன்று உருண்டு கிடந்தது.

பதட்டமடைந்த யோகேஷ் அங்கேயிருந்த மின் விளக்கை எரிய விட்டுப் பார்த்தான்.

வாட்ச்மேனிடம் சுவாசிப்பதற்கான அறிகுறி எதுவும் இல்லை. கால்களை பிடித்துப் பார்த்தான். கால்களின் சதை இறுகி குளிர்ந்து ஜில்லிட்டுப் போயிருந்தது.

வாட்ச்மேன் சம்பூர்ண் உடம்பில் உயிர் இல்லை என்பது உறுதியானதும், யோகேஷ் வெலவெலத்துப் போனான். திடகாத்திர உடம்பை கொண்ட வாட்ச்மேன் சம்பூர்ண் எப்படி செத்தான்? தற்கொலைதானா?

தற்கொலை என்பதை உறுதிப்படுத்தும் விதத்திலேயே உடல் தொங்கிய விதம் சாட்சியமளித்தது.

வாட்ச்மேன் கண்கள் இரண்டும் புடைத்துக் கொண்டு பயங்கரமாக தெரிந்தன. முகம் மரண பயங்கரத்தை நேருக்கு நேர் சந்தித்தது போல் கோரமாக, விகாரமாக தெரிந்தது.

நாக்கு நீண்டு வெளியே தொங்கிக் கொண்டிருந்தது. உதட்டு சரிவில் ரத்தம் கசிந்து தரையிலும் சில ரத்தத் துளிகள் தெரிந்தன.

அவன் தற்கொலை தான் செய்து கொண்டிருக்கிறான்.

ஆனால், அவன் ஏன் அப்படி செய்தான்? வாழ்க்கையில் விரக்தியடையும் அளவுக்கு அப்படி என்ன திடீர் சம்பவம் நடந்தது?

குழம்பிப் போய் வியர்வையில் குளித்த போதிலும், சிந்திக்கும் சக்தியை இழந்து விடவில்லை.

'ஏன் தற்கொலை செய்து கொள்ள வேண்டும்?'

வாழ வேண்டும் என்ற ஆசை கிழ வாட்ச்மேனாகிய சம்பூர்ணுக்கு ஏராளமாக இருந்தது.

குறி சொல்லும் ஒரு கறுத்த இளம் அழகியிடம் மனதை பறிகொடுத்திருந்தான். புளங்காகிதத்துடன் அவனே இதை சொன்னான்.

வாழ்க்கையில் இப்படியொரு பிடிப்பு ஏற்பட்டிருக்கும் போது, அவன் ஏன் தற்கொலை செய்து கொள்ள வேண்டும்?

அப்போது மாளிகையினுள் 'டங் டங்' என்ற சப்தம் பலமாகக் கேட்டது.

யோகேஷ் மருண்டு மிரண்ட கண்களுடன் காவல் மாடத்தினுள் நின்றபடியே மறுபடியும் தூக்கில் தொங்கும் வாட்ச்மேன் உடலை பார்த்தான்.

உடலை தூக்கிலிருந்து இறக்கி வைக்கக் கூடாது. அது சட்டப்படி தப்பு. காவல் துறையினர் வந்து தான் அடுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கீழேயுள்ள தரைப் பகுதியை ஆராய்ந்தான். ஓரிடத்தில் உடைந்த கண்ணாடி வளையல் துண்டுகள் இருந்தன. எடுத்துப் பார்த்தான். குறிகாரியான கருப்பியின் கை வளையல் துண்டுகள்தான் அவை என்பது தெரிந்தது.

கிழ வாட்ச்மேனாகிய சம்பூர்ண் அவள் கையை பிடித்து இழுத்து விளையாடியிருக்க வேண்டும்.

வாட்ச்மேன் மரணத்தில், குறிகாரிக்கும் தொடர்பு இருக்கக் கூடுமோ என்று நினைத்த போது, மீண்டும் 'டங் டங்' என்ற சப்தம் பலமாக கேட்டது.

'இது என்ன... இரவில் இப்படி திடீர் சப்தம்?'

மங்களவிலாஸ் மாளிகையினுள் இருந்து தான் அந்த சப்தம் வந்தது.

காவல் மாடத்தைவிட்டு வெளியே வந்து, மங்களவிலாஸ் மாளிகையின் பிரமாண்டமான முன் கதவை பார்த்தான்.

கனத்த பூட்டு ஒன்று தொங்கியது. வெளியே சுற்றி வந்து மாளிகையின் பின்னால் கொல்லைப்புற வாசல் இருக்கிறதா என்று தேடினான்.

எதிர்பார்த்தது போலவே ஒரு கதவு லேசாக திறந்தபடியே தெரிந்தது.

இந்தப் பக்கம் வெளியே யாரும் இருப்பதாக தெரியவில்லை. ஓசை வராதபடி மெதுவாக கதவைத் தள்ளி உள்ளே பார்வையை செலுத்தினான். அடர்த்தி கும்மிருட்டாக இருந்தது.

பேய்வாசம் இருப்பதாக வாட்ச்மேன் சொன்ன எச்சரிக்கை நினைவுக்கு வந்தது.

துணிச்சல் இருந்தபோதிலும், கிலியடிப்பது போல ஏகப்பட்ட மன உளைச்சல்.

மேலும் சிறிது தூரத்தை இருட்டிலேயே கடந்தபோது பிரமாண்டமான முன் பக்கத்து பெரிய ஹாலினுள் நுழையும் வாசல் மங்கலாக தெரிந்தது.

அங்கே தான் கண்களை உருட்டி விழிக்கும் பழைய ஜமீன்தாரின் ஆள் உயர வண்ண கொண்டல் ராஜா ஓவியம் இருந்தது.

சுவரை ஒட்டிப் பிடித்து, மேலும் நகர்ந்து வரவே குவியலாக வெளிச்சம் நடு ஹாலில் தெரிந்தது. அது பெட்ரோல்மாக்ஸ் லைட்டின் வெளிச்சப் பிரகாசம்.

மின்சார வெளிச்சம் பேய் பிசாசு ஆகியவற்றின் நிரந்தர பகை என்பது அவனுக்குத் தெரியும். துஷ்ட ஆவிகள் செயல்பட முடியாது என்பதையும் அனுபவ ரீதியாகவே அறிவான்.

நடுக் கூடத்திலுள்ள சிவப்பு நிற ரத்தின கம்பளம் சுருட்டி ஓரிடத்தில் வைக்கப்பட்டு அங்கே என்னமோ நடந்து கொண்டிருந்தது.

சிலர் அங்கே ஏதோ செய்து கொண்டிருந்தது மங்கலாகத் தெரிந்தது. அவர்கள் கடப்பாறையால் தரையை குத்திப் பெயர்த்துக் கொண்டிருந்தனர். கரு நிறத்தை கொண்ட ஒரு பீப்பாய் உடம்பு தடியன், மடித்து கட்டிய வேண்டியுடன் மண்வெட்டியால் மண்ணை தோண்டி வெளியே எடுத்து குவியலாக போட்டுக் கொண்டிருந்தான்.

குழி தோண்டும் இந்த வேளையில் நான்கு அழுக்கு உடம்புத் தடியர்கள் தீவிரமான மும்முரத்தில் தெரிந்தனர். வியர்வை ஊற்றெடுத்து வழிந்தோடி கொண்டிருந்தது.

'மங்களவிலாஸ் மாளிகையின் நடு ஹாலில் இவர்கள் ஏன் குழி தோண்டிக் கொண்டிருக்கின்றனர்?'

இப்படி அவன் நினைத்தபோது அந்த நான்கு பேர்களில் ஒருவன் பார்த்து விட்டான்.

"யேய்... அவிட நோக்கு சத்ரு."

நான்கு பேர்களின் பார்வையும் ஒரே நேரத்தில் அவனை தொட்டதும் பரபரப்பானார்கள்.

ஒருவன் ஆத்திரத்தோடு, "கொன்னு களை. ஆயாள் ஜீவிக்கான் பாடில்லா," என்று கத்தினான்.



இப்போதும் 'டங் டங்' சப்தம் உள்ளேயிருந்து கேட்ட வண்ணம் இருந்தது.

விபரீதம் ஏதோ நிச்சயமாக நடக்கப் போகிறது என்று அவனது உள்மனது சொல்லியது.

யோகேஷ் ஒரு முடிவுக்கு வந்து கால்களை, மெதுவாக உள்ளே வைத்து ஜாக்கிரதையுடன் அடி எடுத்து வைத்தபோது மக்கலான வாசனை வந்தது. அறைகளை பராமரிக்காமல் தூசடைய விட்டதால் ஏற்பட்ட நெடி.

சுவர் ஓரமாக பிடித்தபடி அறையினுள் நகர்ந்து சென்றபோது, பக்கத்து அறையினுள்ளேயிருந்து மல்லிகைப்பூ வாசனை வந்து சுவாசிக்க வைத்தது. கூடவே மருக்கொழுந்தின் மணமும் ஈர்த்தது.

இது எப்படி இங்கே..?

அறையினுள் யாரோ ஒரு பெண். இவற்றை கூந்தலில் அணிந்து கொண்டிருந்தாள்.

எதுவும் புரியாத நிலை.

ஒருவேளை மாந்திரீக ஏவல் காரணமாக மோகினி பிசாசோ, அல்லது வேறு எதுவோ?

## திகில் கதை மன்னன்
## பி.டி.சாமி

குழப்பமான அந்த நிலையிலும் பத்ரகாளியின் காக்கும் கவச மந்திரங்களை ஓசைப்படாமல் உருஜெபித்து கொண்டே நகர்ந்து வந்து திறந்து கிடந்த இன்னொரு கதவை தாண்டிய போது 'டங் டங்' சப்தம் வெகு அருகில் கேட்டது.

கூடவே சிலர் சப்தம் எழுப்பாமல் பேசும் குரல்களும் கேட்டன. ஆனால், எதுவுமே தனித் தமிழ் குரலாக தென்படவில்லை. மலையாள வாசனை வீசியது.

யோகேஷ், உள்ளே எட்டிப் பார்த்தபோது தன்னையும் அறியாமல் திகில். சருமங்களில் பரவி உரோம கால்கள் நிமிர்ந்தன.

அபாயம்... அபாயம் என்று கூவி இதயத் துடிப்புகளை அதிகரித்தது.

எதிர்பாராதவிதமாக தன் உயிருக்குக் கூட ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்று மிரண்டான்.

வெளியே காவல் மாடத்துமேல் உத்திரத்தில் தொங்கும் வாட்ச்மேனின் சம்பூர்ண் பிரேதம். உள்ளே பூ வாசனை, பேச்சுக்குரல் மற்றும் 'டங் டங்' சப்தம். அதேசமயம் இங்கே

எல்லாரும் மூர்க்கமான குணத்தோடு ஓடி வந்து அவனை சுற்றி வளைத்துக் கொண்டு வீச்சரிவாள். கடப்பாறை, மண்வெட்டி ஆகிய ஆயுதங்களால் தாக்கினர்.

யோகேஷ் அப்படியும், இப்படியும் போக்கு காட்டி தப்பித்து கொண்டான்.

சிறிது நேர பின்னடைவு.... பிறகு, குபீரென்று பாய்ந்து ஒருவன் கையில் இருந்த மண்வெட்டியை பறித்து கொண்டான் யோகேஷ். நீளமான தடித்த தண்டுடன் கூடிய சாய்வான மண்வெட்டி அது.

இரண்டு கைகளாலும் அதன் கைப்பிடியை பலமாக பிடித்தான். சிலம்பம் சுழற்றுவது போல் வேகமாக சுழற்றி தன் மீது ஆயுதங்களுடன் பாய்ந்தவர்கள் எல்லாரையும் தாக்கினான்.

"என்றே அம்மே.... என்றே எச்சா... மரிச்சு," என்று பலமாகக் கூவி, ஒவ்வொருவரும் அடி பொறுக்க முடியாமல் தரையில் சாய்ந்தனர்.

யோகேஷ் சற்றும் தாமதிக்காமல் பாக்கெட் டார்ச் லைட்டை எடுத்துச் சென்று அதன் வெளிச்ச உதவியினால் ஒரு கயிற்றை தேடி எடுத்து வந்தான்.

ஒவ்வொருவனுடைய கைகளையும், கால்களையும் இணைத்து கட்டிப் போட்டுவிட்டு அந்த ஹாலை பார்த்தான்.

ஹால் வெறிச்சோடி கிடக்க, சுவரில் அந்த பிரமாண்டமான கொண்டல் ராஜா வண்ண ஓவியம் அமைதியாக பார்த்தபடியே தெரிந்தது.

உயிர் உள்ள ஓர் ஓவியம் போலவே அது இருந்தது.

அடுத்து, அடிவாங்கலுடன் கட்டிப் போட்டவர்களை பார்த்தான். முனகலுடன் நெளிந்து கொண்டிருந்தனர். இனி அவர்களால் இங்கிருந்து தப்பித்து ஓட முடியாது. மின் சுவிட்சை தட்டினான். எரியவில்லை. மின்சார தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்தது.

தோண்டப்பட்ட குழி அருகில் வந்து உள்ளே பார்த்ததும், நடு நெஞ்சில் உலக்கை அடி விழுந்தது போல் திடுக்கிட்டான்.

உள்ளே, சதை பூராவும் சிதைந்து அழுகி மண்ணோடு மக்கிப்போன நிலையில் ஓர் எலும்புக்கூடு இருந்தது! ஆனால், அந்த எலும்புக் கூட்டுக்கு தலை இல்லை!

**(அடுத்த இதழில் திகில் விலகும்)**

# அணி திரளும் நட்சத்திரங்கள்



வாக்காளப் பெருமக்களைக் கவர, பிரபல நடிக நடிகைகளைக் கட்சியில் இணைத்துப் பிரசாரம் செய்ய வைப்பது இந்தியாவில் நடந்து வரும் அரதப் பழசான விஷயம்.

வருகின்ற ஏப்ரல் மாதம் தமிழ்நாட்டில் நடக்கும் சட்டமன்றத் தேர்தலுக்கு தமிழகத்தின் இருபெரும் கட்சிகளான கலைஞர் மு.கருணாநிதி தலைமையிலான தி.மு.க.ஜெயலலிதா தலைமையிலா அ.தி.மு.க. ஆகியவை தயாராகி விட்டன.

இத் தேர்தல் பிரசாரத்திற்காக நடிக, நடிகைகளை தம்பக்கம் இழுத்து வருகின்றன இவை.

தி.மு.க அணிக்காக சரத்குமார், டி.ராஜேந்தர், சந்திரசேகர், நெப்போலியன், பாண்டியன், தியாகு, குமரிமுத்து, ராதிகா, ஜெயப்பிரதா போன்றவர்கள் இருக்கிறார்கள்.

அ.தி.மு.க.வில் ராமராஜன், ராதாரவி, எஸ்.எஸ்.சந்திரன், மன்சூரலிகான், சி.ஆர்.சரஸ்வதி, வாசுகி போன்றவர்கள் இருக்கிறார்கள்.

இது போதாதென்று ஜெயலலிதாவால் நளினி, குஷ்பு, அம்பிகா, ராதா ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. அண்மையில் தனது குழந்தையை எடுத்துச் செல்லும் சாக்கில் ஜெயலலிதாவைச் சந்தித்தார் குஷ்பு.

இதையடுத்து அம்பிகா ராதா ஆகியோர் ஆளுக்குத் தலா அரைக்கோடி (இந்திய ரூபா)யைப் பெற்றுக் கொண்டு, ஜெயலலிதா வசிக்கும் போயஸ் தோட்டத்திற்குச் சென்று,



"அக்கா. தங்கையான எங்கள் இருவருக்கும் அ.தி.மு.க. அணியின் இலட்சியம் (இலட்சம் என்று சொல்லியிருக்க வேண்டும்) பிடிக்கும். அதனால் அணியில் இணைந்து கொண்டோம்!" என்று கட்சியில் சேர்ந்து கொண்டனர்.

தமிழகத்தில் நடக்கும் தேர்தல் பிரசாரத்தின்போது நட்சத்திர அலைகளுக்குக் குறைவிருக்காது என நம்பலாம்.

# விழாவில் விநியோகிக்கப்பட்டவை

பிரேஸில் நாட்டில் 'சின்னச் சட்டை' என்று அழைக்கப்படுவது எது என்று யூகிக்க முடிகிறதா? ஆணுறைகளைத்தான் அங்கு செல்லமாக சின்னச் சட்டை என்று அழைக்கிறார்கள்.

கடந்த பெப்ரவரி மாதம் 23ம் திகதி முதல் 28ம் திகதி வரை 'ரியோ கார்னிவல்' என்ற உலகமகா இளமைத்திருவிழா நடைபெற்றது.


ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம், மது, மாது என்று அனைத்து அம்சங்களும் அடங்கிய கோலாகலத் திருவிழா. சுமார் இரண்டு கோடிப்பேருக்கு மேல் கலந்து கொண்ட இந்த விழாவில் முழு, முக்கால் நிர்வாணக் கோலங்களும் முத்தச் சத்தங்களும்தான்.

பிரேஸில் நாட்டு மக்கள் உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் கூத்தடிக்கும் இந்த விழாவில் இதற்கென்று தயாரிக்கப்பட்டு 40 கோடிக்கு மேல் 'சின்னச் சட்டைகள்' தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

இந்த விநியோகத்தை பிரேஸில் அரசே மேற்கொண்டது. காரணம் பிரேஸில் நாட்டில் சுமார் 2 இலட்சம் பேர் எய்ட்ஸ் நோய்க்கு ஆளாகியிருக்கின்றனர்.

# இளவரசரைக் கடத்தத் திட்டம்?

இங்கிலாந்து அரச குடும்பத்தைச் சார்ந்தவர்கள் பற்றிய செய்திகளுக்கு என்றுமே குறைவிருப்பதில்லை. அதிலும் கிளுகிளுப்புச் செய்திகள் கொஞ்சம் அதிகமாக வெளி வருவதுண்டு. அண்மையில் வெளியாகியிருக்கும் செய்தியொன்று கொஞ்சம் திகிலூட்டுவதாக இருக்கிறது.



சார்ள்ஸ்-டயானா தம்பதியின் புதல்வர் இளவரசர் வில்லியம்ஸ் பிரிட்டிஷ் தீவுகளில் ஒன்றான ஸ்கொட்லாண்டில் இருக்கும் சேர்.அன்ட்ரூஸ் பல்கலைக் கழகத்தில் படிக்கிறார்.

அங்கு அவர் தங்கிப் படிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்த அறையைச் சுத்தப் படுத்தும் போது, ஒரு மின்னியக்கக் கண்காணிப்புக் கருவி ஒன்று கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.

இக் கருவி, வில்லியம்ஸிற்கு வரும் எல்லா தொலைபேசிகள் மற்றும் மின்னஞ்சல்கள் மூலம் வெளியாகும் தகவல்களை மோப்பம் பிடித்துவிடும். இதன் மூலம் வில்லியம்ஸின் நாளாந்தப் பழக்க வழக்கங்கள் பற்றி அறிய முடியும். இந்தத் தகவல்களை வைத்து இளவரசரைக் கடத்தத் திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தக் கடத்தல் திட்டத்தை ஐரிஷ் தீவிரவாத அமைப்பு மேற்கொண்டிருப்பதாக, பிரிட்டிஷ் உளவுத் துறையான 'எம் 15' கூறியிருக்கிறது.

# 'சேர்ந்திருக்க நேரமில்லை'
# நட்சத்திர ஜோடி விவாகரத்து



'காதல், திருமணம் பின் விவாகரத்து, அதன்பின் மறுமணம்' இது ஹொலிவூட் படவுலக கலாசாரங்களில் ஒன்று.

ஹொலிவூட் திரையுலகில் இவ்வருடம் பரபரப்பூட்டிய விவாகரத்து பிரபல நட்சத்திர ஜோடியான டொம் குருஸ்-நிக்கோல் கிட்மன் பிரிவு தான்.

அவுஸ்திரேலியாவில் பிறந்து ஹொலிவூட்டில் பிரபலமான அழகி நிக்கோல் கிட்மன். அழகி என்றால் ஒன்றும் சாதாரண அழகி அல்ல, 5 அடி 10 அங்குலம் உயரமான ஆஜானுபாகுவான அழகி.

'ஹொலிவூட் அரவிந்தசாமி' என அழைக்கப்படும் டொம் குரூஸ்மீது 10 வருடங்களுக்குமுன் இவருக்குக் காதல் மலர்ந்து திருமணமானது. கடைசியாக வெளியான 'எம்.ஐ.2' என்ற படத்தில் நாயகனாக நடித்த டொம் ஹொலிவூட் திரையுலகின் முன்னணி நடிகர்களுள் ஒருவர்.

டொம்-நிக்கோல் இருவரும் திருமணத்திற்குப் பின் தனித்தனியாகவும் இணைந்தும் படங்களில் நடித்திருந்தனர். இடைவிடாத படப்பிடிப்புக்களால் குழந்தை பெற நேரம் ஒதுக்க முடியாமல், இரண்டு குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்த்தனர்.

திடீரென இவர்கள் இருவரும் விவாகரத்துச் செய்து விட்டனர். இவர்களின் விவாகரத்துக்குக் காரணம் இவர்கள் இருவரும் இணைந்து நடித்த படம் என்று கூறப்படுகிறது.


நீண்ட நேர முத்தக்காட்சிகள் மற்றும் உடலுறவுக் காட்சிகள் கொண்ட இப்படத்தில் நடித்தபோது தான் இருவருக்குமிடையே மோதல் வெடித்ததாகக் கூறப்படுகிறது.

ஆனால், "இருவரும் இடைவிடாத படப்பிடிப்புக்களால் சேர்ந்து வசிப்பது அபூர்வமாகி விட்டது. இதனால் பிரிகிறோம்" என்று அறிவித்திருக்கின்றனர்.

எது எப்படியோ, இருவரும் பிரிந்ததனால், தத்தெடுத்த இரண்டு குழந்தைகளின் கதி தான் பரிதாபம்.

# சட்ட நடவடிக்கை

# தகவல் பெட்டி



➚ **க**டலில் ஜாலியாக நீச்சலடித்து விட்டு, ஹாயாகப் பொழுதுபோகக் கடற்கரைக்கு வந்திருக்கும் இந்தக் கடற்பிராணிகளின் பெயர் 'கடல் நாய்கள்' ஆகும்.

அருகி வரும் கடற்பிராணி வகைகளில் இவையும் ஒன்று. இவற்றின் அழகிய தோலுக்கும் இறைச்சிக்கும் இவை அதிகளவில் கொல்லப்படுகின்றன.

கொரியாவில் இவை சுமார் 500 வரை இருப்பதாக அறியப்பட்டுள்ளது. இந்த அரிய கடற்பிராணிகளைக் காப்பாற்றுவதற்காக, கடும் சட்டங்கள் போட்டுள்ளது கொரிய அரசு.

(பட உதவி: அஹமட் நியாஸ்-கொரியா)

## மகிழ்ச்சிப் பந்தயம்

⬇ **ச**மீபத்தில் இந்தியாவின் மும்பையில் உள்ள 'பிரியதர்ஷினி பூங்கா' மைதானத்தில் ஓட்டப்பந்தயம் ஒன்று நடைபெறவிருந்தது. பார்வையாளர்கள் மத்தியில் என்றுமில்லாத ஆனந்தம்.

மைதானத்தில் மகிழ்ச்சி அலைகளை வெளிப்படுத்தி நிறுத்தப்படாத கரவொலிகள். இதற்குக் காரணம் ஓட்டப்பந்தயத்தில் பங்குபெற இருந்தவர்கள் அனைவரும் 70 வயதுக்கு மேற்பட்ட இளைஞிகள்.

100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் வில்லில் இருந்து புறப்பட்ட அம்பு போல் வேகமாக ஓடி வந்து முதலாவது இடத்தைப் பிடித்தார் மேரி ரொட்ரிக்ஸ். இவருக்கு வயது 72.

வயதானவர்களின் மகிழ்ச்சிக்காகவும் அவர்களது மனதில் புழுங்கும் தாழ்வுணர்ச்சியைப் போக்கடிப்பதற்காகவும் இந்தப் போட்டிகளை நடத்தியதாக 'ஹெல்பேஜ் இந்தியா' என்ற சேவை அமைப்பைச் சேர்ந்த அனிதா என்பவர் கூறியுள்ளார்.





## இரட்டைக் குதியல்

⬆ மலேசியத் தலைநகர் கோலாலம்பூர் நகர் உருவாக்கப்பட்ட தினம் சமீபத்தில் அங்கு கொண்டாடப்பட்டது. இக்கொண்டாட்டங்களின் போது பல்வேறு வகையான நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

அதில் ஒன்றுதான் இந்த 'இரட்டைக்குதியல்', அவுஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்த ரோலண்ட் சிம்ஸன் என்ற இளைஞன், இன்னொரு அவுஸ்திரேலிய இளைஞனான டிவான் வெஸ்டனின் தோள்மீது அமர்ந்திருந்தவாறு, இருவரும் கே.எல்.என்ற கோபுரத்தின் மேலே ஏறிநின்று கீழே குதித்தனர்.

இந்தக் கோபுரத்தின் உயரம் சுமார் 1400 அடி ஆகும். இந்த உயரத்தில் இருந்து குதித்துச் சாதனை படைத்த இளைஞர்களை மலேசிய அரசு பாராட்டிக் கௌரவித்தது.

## கலாட்டா கல்யாணம்

➡ '**கா**தலினால் எல்லாம் ஆகும்' என்று இயம்பிய கவிஞன் பாரதியின் வார்த்தைகளுக்கமைய 'காதல்' வயப்படுவோருக்காகக் 'காதலர் தினம்' கொண்டாடப்பட்டு வருகிறது.

காத்திருந்து தமது காதலை வெளிப்படுத்தும் காதலர்களைப்போல், தாம் காதலித்தவர்களைக் காதலர் தினத்தன்று கைப்பிடித்தும் கொள்கிறார்கள் சிலர்.

கடந்த காதலர் தினத்தன்று உலகில் சில காதல் ஜோடிகள் கல்யாணம் செய்து கொண்டார்கள். இவர்களில் சில ஜோடிகள் 'பிறந்த நாள்' உடைகளில் திருமணம் செய்து திணறடித்தும் இருந்தார்கள்.

காதலர் தினம் என்றால் மனிதர்கள் மட்டும்தான் காதலை வெளிப்படுத்தவும் கல்யாணம் செய்து கொள்ளவும் வேண்டுமா? இல்லை என்ற வகையில் காதலர் தினத்தன்று தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் இரண்டு ஜோடி யானைகளுக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டது.

இவைகளுக்குக் கல்யாணம் முடித்து வைத்த கையோடு, முதலிரவு கொண்டாட வைத்து ஒரு கலாட்டாவே செய்துவிட்டார்கள் போங்கள்.



# சேரன் இயக்கும் 'பாண்டவர் பூமி'

'பாரதி', 'நிலக்காலம்', 'விட்டில்ஜான்' ஆகிய படங்களைத் தயாரித்த மீடியா ட்ரீம்ஸ் பட நிறுவனம் இப்போது தயாரிக்கும் படங்களில் ஒன்றை சேரன் இயக்கவுள்ளார். இப்படத்திற்கு 'பாண்டவர் பூமி' என்று பெயரிடப்பட்டுள்ளது.

ராஜ்கிரண்-அருண்குமார் இணைந்து நடிக்கும் இப்படத்தில் இவர்களுடன் சந்திரசேகர், ரஞ்சித், வினுச்சக்கரவர்த்தி, சார்லி, விவேக் உட்பட பலர் நடிக்கின்றனர்.

படத்தின் நாயகியாக புதுமுகம் ஒருவர் அறிமுகமாகிறார்.

தாயைத் தெய்வமாக மதிக்கும் ஒருவனுக்கும் பூமியைத் தெய்வமாக மதிக்கும் ஒருவனுக்கும் இடையே நடக்கும் உணர்ச்சிப் போராட்டம்தான் இப்படத்தின் கரு.

வைரமுத்து பாடல்கள் எழுத, பரத்வாஜ் இசை யமைக்கிறார். தங்கர் பச்சான் ஒளிப்பதிவு செய்ய, கதை-திரைக்கதை-வசனம எழுதி இயக்குகிறார் 'பாரதி கண்ணம்மா' வில் இருந்த 'வெற்றிக் கொடி கட்டு' வரையான வெற்றிப்படங்களை இயக்கிய சேரன்.



ரிச்சர்ட்-ஸ்ரீதேவி
படம்: காதல் வைரஸ்

பாண்டியராஜன்-லிவிங்ஸ்டன் நடிக்கும்

## 'பொறந்தாலும் பொம்பளையா பொறக்கக்கூடாது'

சில வருடங்களுக்கு முன் பாண்டியராஜன் நடித்த 'பொறந்தாலும் ஆம்பளையா பொறக்கக்கூடாது' படம் வெற்றி பெற்றதைக் கருத்திற் கொண்டு இவர் நடிக்கும் புதிய படத்திற்கு 'பொறந்தாலும் பொம்பளையா பொறக்கக்கூடாது' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

இப்படத்தில் பாக்யராஜின் சிஷ்யர்களான பாண்டியராஜன், லிவிங்ஸ்டன் இருவரும் இணைந்து நடிக்கிறார்கள். இவர்களுடன் ராதிகா சௌத்ரி, ரவளி, மணிவண்ணன் உட்பட பலர் நடிக்கின்றனர்.

கவுதமன் என்ற புதியவர் இப்படத்தை இயக்குகிறார்.

## மீனா நடிக்கும் கிராம தேவதை

தமிழில் படவாய்ப்புக்களின்றி இருக்கும் மீனா இரசிகர்களுக்கு ஓர் இனிப்பான செய்தி.

மீனா நடித்த கன்னடப் படமொன்று 'கிராம தேவதை' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வருகிறது.

இதில் மீனா-ரம்யா கிருஷ்ணன், பிரேமா ஆகியோர் கதாநாயகிகளாக நடித்துள்ளனர். இவர்களுடன் ஆடு மற்றும் பாம்பு ஆகியவையும் நடித்துள்ளன.

கதை-திரைக்கதை அமைத்து சாய்பிரகாஷ் இயக்கிய இப்படத்தின் வசனத்தை தமிழில் எழுதுகிறார் ஆரூர்தாஸ்.

## மணி படத்தில் கமல்

கமல் இரசிகர்களுக்கு இந்தவருடம் ஒரு பொன் வருடம்தான். பெரும் எதிர்பார்ப்புகளுடன் வரும் சுரேஷ் கிருஷ்ணாவின் 'ஆளவந்தான்' படத்தை அடுத்து 'ஷோமேன்' ஷங்கர் இயக்கத்தில் 'ரோபோ' படத்தில் நடிக்கிறார் கமல்.

'அலைபாயுதே' வெற்றிப் படத்தை அடுத்து மாதவன் நடிக்கும் தமிழ்ப் படத்தையா அல்லது அஜய் தேவ்கன் (கஜோலின் கணவர்) நடிக்கும் இந்திப் படத்தையா முதலில் இயக்குவது என்று தீர்மானிக்காமல் இருந்தார் மணிரத்னம்.

இப்போது இந்த இரு படங்களையும் ஒத்தி வைத்து விட்டு கமலை வைத்து ஒரு படத்தை இயக்கத்திட்டமிடுகிறார் மணி.

'நாயகன்' என்ற பெரிய வெற்றிப்படத்தைத் தந்த மணிரத்னம்-கமல் கூட்டணி, தரும் புதிய படமும் தமிழ்த்திரையுலகில் ஒரு 'மெகா' படமாக இருக்கும்.

## பாவம் உமா

கதாநாயகியாக வலம் வர வேண்டும் என சினிமாவில் நுழைந்த சுமித்ராவின் மகள் உமா நாயகியாக நடித்த முதல் படமான 'வீரநடை' தோல்வியைத் தழுவியதால், தங்கை வேடங்கள்தான் அவருக்குக் கிடைக்கின்றன. 'வானவில்' படத்தில் அபிராமியின் தங்கையாக நடித்தார். அடுத்து 'கடல் பூக்கள்' படத்தில் மனோஜின் தங்கை. இப்போது 'கலகலப்பு' படத்தில் உதயாவின் தங்கை.

## சத்தமில்லாத தம்பி

'சின்னத்தம்பி' படத்தைத் தயாரித்த கே.பாலு தயாரிப்பில் சரத்குமார்-அருண்குமார் இணைந்து நடிக்க 'தம்பியுடையான்' என்ற பெயரில் புதிய படமொன்று வளர்ந்து வருகிறது.

'மறுமலர்ச்சி', 'கள்ளழகர்' ஆகிய படங்களை இயக்கிய பாரதி இயக்கும் இப்படத்தில் சரத்குமார் ஜோடியாக தேவயானி நடிக்கிறார்.

## வெற்றிக் கூட்டணி

'காதல் மன்னன்', 'அமர்க்களம்' ஆகிய படங்களை வழங்கிய வெங்கடேஸ்வராலயா நிறுவனம்-சரண் வெற்றிக் கூட்டணிமறுபடி இணைகிறது.

இந்த வெற்றிக்கூட்டணி இணையும் படத்தில் நாயகனாக நடிப்பவர் ஆர்யா.

## ராஜகுமாரனின் தேவதை

'நீ வருவாய் என' படத்தைத் தொடர்ந்து 'விண்ணுக்கும் மண்ணுக்கும்' படத்தை இயக்கி முடித்திருக்கும் ராஜகுமாரன், அடுத்து ஒரு படத்தை சொந்தமாகத் தயாரித்து இயக்கவுள்ளார்.

'பிரின்ஸ் பிக்சர்ஸ்' என்ற பெயரில் இவர் தயாரித்து இயக்கும் படத்திற்கு 'தேவதை வந்து விட்டாள்' என்று பெயர் சூட்டியுள்ளார்.

படத்தின் தேவதை யார் என்கிறீர்களா? முதலிரு படங்களின் நாயகியும், ராஜகுமாரனின் மனங்கவர்ந்தவருமான தேவயானி தான்.



சரத்குமார்-அபிராமி
படம்: தோஸ்த்

## கஸ்தூரி ராஜாவின் 'காதல் சாதி'

பல வெற்றிப்படங்களைத் தயாரித்து இயக்கிய கஸ்தூரி ராஜா, தற்போது முரளி நடிக்கும் 'பாட்டுச் சத்தம் கேக்குதம்மா' என்ற படத்தை தயாரித்து இயக்கி வருகிறார்.

இதையடுத்து இவர் பிரகாஷ்ராஜ்-உதயா இணைந்து நடிக்கும் 'காதல் சாதி' என்ற படத்தை தயாரித்து இயக்கவுள்ளார்.

பல வருடங்களுக்கு முன்பு நடந்த உண்மைச் சம்பவத்தை அடிப்படையாக கொண்டு உருவாகும் இப்படத்தில் ஜெனிஃபர், பிரியா ஆகிய புதிய நாயகிகள் அறிமுகமாகிறார்கள்.

மற்றும் ரமேஷ்கண்ணா, செந்தில், அலெக்ஸ், பெரியார்தாசன் நடிக்கும் இப்படத்திற்கு இசையமைக்கிறார் இளையராஜா.

## சபாஷ்! சரியான போட்டி!

ஆயிரம் படங்களுக்குமேல் நடன இயக்குநராகப் பணிபுரிந்திருப்பவர் ரகுராம் மாஸ்டர். இவர் 'விஸ்வநாதன் வேலை வேண்டும்' (தமிழ்), 'ஜெய்கரா' (கன்னடம்), 'பாக்ய தேவ்தா' (ரஜினி நடித்த பெங்காலிப்படம்) ஆகிய படங்களை இயக்கியுள்ளார்.

இவரது மகள் சுஜா 'மில்லேனியம் ஸ்டார்ஸ்' என்ற மலையாளப்படத்தில் ஜெயராமிற்கு ஜோடியாக நடித்தவர். 'ஹேராம்', 'விட்டில் ...ஜான்' ஆகிய படங்களில் இடம்பெற்ற தலா ஒவ்வொரு பாடல்களுக்கு நடனம் அமைத்திருக்கும் சுஜா, இப்போது 'கிருஷ்ணதாசி' என்ற தொலைக்காட்சித் தொடரில் நடித்து வருகிறார்.

இதை அடுத்து தொலைக்காட்சித் தொடர்களில் நடிப்பதை நிறுத்தி விட்டு, பெரிய திரையில் நடிக்கப்போகிறார் சுஜா. இவரது தந்தை இயக்கும் 'போட்டி' என்ற தமிழ்படத்தில் இவர் கதாநாயகியாக நடிக்கவுள்ளார்.

நடனத்தோடு சம்பந்தப்பட்ட இப்படத்தில் சுஜாவுக்கு ஜோடியாக நடிப்பவரும் ஒரு நடன இயக்குநர் தான். அவர் வேறு யாருமல்ல பிரபுதேவா.

## உயர ஒத்துழைப்பு

'மிஸ்டர் நாரதர்' படத்தை அடுத் மேலும் இரு புதிய படங்களில் சத் ராஜுடன் இணைந்து நடிக்கிறா திவ்யா உன்னி.

"சத்யராஜ் உயரத்திற்கு, நான் தான் சரியான ஜோடி. அதனா தான் புதியபடங்களிலும் அவ என்னைச் சிபார்சு செய்கிறா என்று கூறியுள்ளார் திவ்யா.





இஷா கோபிகர்



## நக்மா வலையில் அஜித்

எடுத்த எடுப்பிலேயே ஷங்கரின் 'காதலன்' படத்தில் அறிமுகமாகி ரஜினியுடன் 'பாட்ஷா' படத்தில் நடித்து உச்சத்தில் இருந்த நக்மா பின் அதலபாதாளத்தில் விழுந்தார்.

மறுபடி விட்ட இடத்தைப் பிடித்தே தீருவது என்று சபதம் எடுக்காத குறையாக தங்கை ஜோதிகாவுக்குத் துணையாகப் படப்பிடிப்புக்கு வரும்போது பலரிடம் வாய்ப்புக் கேட்டு வலை விரித்து வந்தார்.

ஜோதிகா மூலம் அஜித் துடன் ஏற்பட்ட நட்பால், அவரது பலவீனத்தைப் புரிந்து கொண்டு தனது வலையில் வீழ்த்தி வாய்ப்புக் கேட்க, 'தீனா' படத்தில் ஒரு பாடலுக்கு நடனமாட வாய்ப்பளித்தார் அஜித்.

இப்போது பெரும் எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் அஜித் பல கெட்-அப்களில் நடித்து வரும் 'சிட்டிசன்' படத்திலும் நக்மாவுக்கு நடிக்க வாய்ப்பு வாங்கிக் கொடுத்துள்ளார் அஜித்.

## புதிய பெயர்கள்

ரீல், கிஸ், தூள், பிக்னிக், மிருகம், கன்னா குன்னா, ஷார்டு லபக்தான்... இவையெல்லாம் என்ன தெரியுமா?

புதிய தமிழ்ப்படங்களுக்குச் சூட்டுவதற்காக ஃபிலிம் சேம்பரில் பதிவு செய்து வைக்கப்பட்டிருக்கும் பெயர்கள்.


பிரபுதேவா-ரோஜா
படம்: களவும் கற்று மற






## மினி சினி

- 'வாஞ்சிநாதன்' படத்தைத் தயாரித்த ரோஜா கம்பைன் நிறுவனம் அடுத்து விஜய் நடிக்கும் படம் ஒன்றைத் தயாரிக்கவுள்ளது. இப் படத்தை 'மீரா', 'குருதிப்புனல்' ஆகிய படங்களை இயக்கிய ஒளிப்பதிவாளர் பி.சி.ஸ்ரீராம் இயக்கவுள்ளார்.
- 'பெண்ணின் மனதைத் தொட்டு' படத்தில் கதாநாயகியாக அறிமுகி படவாய்ப்பில்லாதிருந்த ஜெயா சீல். இப்போது 'கலகலப்பு' படத்தில நெப்போலியனுக்கு ஜோடியாக நடித்து வருகிறார்.
- 'என்னம்மாக் கண்ணு', 'ஜூட்டி' ஆகிய படங்களைத் தயாரித்த துரை அடுத்து ஒரே நேரத்தில் இரண்டு படங்களைத் தயாரிக்கவுள்ளார். ஒரு படத்தில் கார்த்திக்கும் மற்றொரு படத்தில் சத்யராஜும் நடிக்கவுள்ளனர்.
- சுந்தர்.சியைத் திருமணம் செய்து குழந்தை பெற்றுக் கொண்ட குஷ்பு, மீண்டும் நடிப்பில் இறங்கி விட்டார். இதன்படி இவர் முதலில் கன்னடப்படமொன்றில் கதாநாயகியாக நடித்து வருகிறார்.
- 'மிஸ்டர் நாரதர்' படத்தை இயக்கி வரும் ஷக்தி சிதம்பரம் அடுத்து பிரபு நடிக்கும் 'தமாஷ்' என்ற படத்தை இயக்கவுள்ளார். இதையடுத்து இவர் நாகார்ஜுனா நடிக்கும் தெலுங்குப் படமொன்றையும் இயக்கவுள்ளார்.
- 'என்னவளே' படத்தை இயக்கிய சுரேஷ், அப்படம் சுமாராக ஓடியதைத் தொடர்ந்து, அடுத்த பட வேலைகளில் இறங்கிவிட்டார். இப்படத்திலும் மாதவன்-சிநேகா ஜோடிதான் நடிக்கிறது.
- 'நினைக்காத நாளில்லை' படத்தைத் தயாரித்து வெளியிட்ட கே.ராஜன் அடுத்து பிரசாந்தைக் கதாநாயகனாக வைத்துப் படமொன்றைத் தயாரிக்கும் திட்டத்தில் இருக்கிறார்.
- 'காலமெல்லாம் காதல் வாழ்க' படத்தை இயக்கிய ஆர்.பாலு அண்மையில் திருமணம் செய்து கொண்டார். இவர் இப்போது ரூபஸ்ரீ கதாநாயகியாக நடிக்கும் தொலைக்காட்சிப்படமொன்றை இயக்கி வருகிறார்.


பிரபு-கௌசல்யா
படம்: தாலிகாத்த அம்மன்

திரையுலக மறுபக்கம் 191

# நடிகை-மாஸ்டர் பளார் பளாரால் பயத்தில் இருக்கும் இயக்குநர்

தமிழ்நாட்டிலிருந்து மயன்

இரவு நேரம் கேரள மாநிலத்தின் பாலக்காடு நகரம் ஒட்டுமொத்தமாய் கிளுகிளுப்பூட்டும் குளிரின் பிடிக்குள் முடங்கிப்போய் விட்டது.

'டொக்... டொக்... டொக்...' கதவு தட்டப்பட்டது.

"எதுக்கு இந்த நேரத்தில தொந்தரவு பண்றீங்க? நான் அந்த மாதிரிப்பட்டவ இல்லை!"

சிறிய இடைவெளி விட்டுத் திறந்து கொண்டு எச்சரிக்கையுடன் சொன்னார் அறைக்குள் இருந்த நடிகை. வெளியே போதையில் தள்ளாடியபடி ஸ்டண்ட் மாஸ்டர் (சண்டைப் பயிற்சியாளர்).

"இதுக்கும் மேலே நின்னீங்கன்னா சத்தம் போட்டு ஊரைக் கூட்டுவேன்!" என்று கோபத்துடன் கூறி விட்டு கதவைப் படீரெனச் சாத்திவிட்டார் நடிகை.

கட்டிலில் போய் உட்கார்ந்தபோது, முதல்நாள் இதே ஆள் தொலைபேசியில் வழிந்தது ஞாபகத்திற்கு வந்தது. அதை அப்படியே மறந்து விட்டுத் தூங்கிப் போனார் நடிகை.

விடிந்தது.

இரவு ஒன்றுமே நடக்காதது போல், காலையில் படப்பிடிப்பில் ஆஜரானார் அந்த 'அம்ச'மான நடிகை. இரவு 'விஜய'ம் செய்ததை மறந்து விட்டது போல் அந்தப் பயிற்சியாளரும் வந்து விட்டார்.

தெலுங்குப்படம் என்பதால் கொஞ்சம் அதிகமான கவர்ச்சி உடையில் படுகவர்ச்சியாக இருந்தார் நடிகை.

கமெரா இயங்கியது. நடிகையைச் சுற்றியிருந்த ஸ்டண்ட் நடிகர்கள் காட்சிக்கு ஏற்ப நடிப்பதில் ஈடுபட்டிருந்தனர். அவர்களது விரல்கள் தனது அங்கங்களில் கண்டபடி விளையாடியது தற்செயல் என்று நினைத்தார் நடிகை.

அடுத்தடுத்த காட்சிகளில் அளவுக்கதிகமாக அத்துமீறல்கள் தொடர, உடலில் பிரவேசித்த கரத்தைப் பிடித்துக்கொண்டு, கன்னத்தில் விட்டார் 'பளார்' அறை.

தன்னுடைய ஸ்டண்ட் வீரர், அந்த நடிகையிடம் அறை வாங்கியதைப் பார்த்த சண்டைப்பயிற்சியாளருக்குக் கோபம் வந்துவிட்டது. உடனே அவர் வந்து நடிகைக்கு விட்டார் 'பளார்' அறை.

அந்த இடத்தை விட்டு வெளியேறிய நடிகை உடனே சென்னைக்குப் புறப்பட்டு வந்து, தென்னிந்திய நடிகர் சங்கத்தில் புகார் செய்து விட்டார். இந்தப் புகாரை முழுமூச்சுடன் எடுத்து விசாரித்து வருகிறது தென்னிந்திய நடிகர் சங்கம்.

அருண்பிரசாத் இயக்கத்தில் பாலகிருஷ்ணா-ஷில்பா ஷெட்டி நடிக்கும் தெலுங்குப்படம் ஒன்றில் ஏற்பட்ட இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட நடிகை-விசித்ரா, சண்டைப் பயிற்சியாளர் விஜய் (இவர் தெலுங்குப்படவுலகைச் சேர்ந்தவர்).

'எங்க ஊரு பொம்பளைய வம்பிழுக்க வந்தவனைச் சும்மா விடப்போவதில்லை' என்ற தோரணையில் நடிகர் சங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகளால் அதிகம் பயத்தில் இருப்பவர் இயக்குநர் அருண்பிரசாத்.

காரணம் இந்த அருண்பிரசாத் தற்போது விஜய் நடிக்கும் 'பத்ரி' படத்தைத் தமிழ்நாட்டில் இயக்கி வருகிறார்.

## காதோடு சொல்லுகிறோம்

சிம்ம நடிகையைக் கல்யாணம் செய்து கொள்ள நடன சுந்தரர் முன்வந்தும், அவரது வீட்டார் இப்போது அதற்கு முட்டுக்கட்டை போட்டு வருகின்றனராம். 'எங்கள் எதிர்காலத்திற்குப் பெரும் தொகை கொடுத்து விட்டு, அந்த நடிகையைத் திருமணம் செய்துகொள்' என்கின்றனராம் நடன சுந்தரரின் பெற்றோர். இந்த வரதட்சணைப் பிரச்சனையால் திருமணம் தள்ளிக் கொண்டே போகிறதாம்.


வானத்தில் தோன்றும் வர்ணஜாலப் படத்தில் அறிமுகமான கமல் பட நாயகியின் பாத்திரப் பெயர் கொண்ட நடிகைக்கு இப்போது பல படவாய்ப்புக்கள் வரத் தொடங்கியுள்ளதாம். தமிழில் ஒரு நிரந்தர இடத்தைப் பிடித்து விட வேண்டும் என்ற அக்கறையுடன் இருக்கும் நடிகைக்கு அவரது அம்மாவே இடையூறாக இருக்கிறாராம். நடிகையின் தாய்க்குலம் செய்யும் பந்தா மற்றும் எரிச்சலூட்டும் செயல்கள் நடிகைக்குக் கண்ணீரை வரவழைக்கிறதாம்.

மலையாளக் கரையோரத்தில் இருந்து தமிழுக்கு வந்த அந்த 'திவ்'யமான நடிகை நடித்த மூன்று படங்களும் ஓடவில்லை. தற்செயலாக அவருக்கு அறிமுகமான 'உயர' நடிகர், நடிகைக்குக் கண்டபடி சிபார்சு செய்து வருகிறாராம். 'கண்டபடி சிபார்சு' என்றால் தான் நடிக்கும் படங்களில் மட்டுமல்லாது, தனக்கு வேண்டப்பட்ட நடிகர்கள் நடிக்கும் படங்களிலும் நடிகையைப் போடுமாறு சிபார்சு செய்கிறாராம்.

தயாரிப்பாளரின் மகனான இளம் ஹீரோவுடன் அறிமுகமான படத்தில் காதலித்து இரகசியத் திருமணம் செய்து கொண்ட 'கறுப்புக் கலரை விரும்பும்' நான்கெழுத்து 'ம' நடிகை இப்போது காதல் கணவரை விட்டுப் பிரிந்துள்ளாராம். அதுமட்டுமன்றி பெங்களூரில் உள்ள இளம் தொழிலதிபர் ஒருவரைத் தனது அன்புப் பிடிக்குள் வைத்திருக்கிறாராம்.

முகப் பில்: அஜித் (படம்: சிட்டிசன்) — ஜோதிகா (படம்: பூவெல்லாம் உன் வாசம்)

# யார் இவர்கள்?



பிரபல பாடகர் கே.ஜே.ஜேசுதா ஸுடன் காணப்படும் முதியவருக்கு வயது 80. இவர் 1950ம் ஆண்டு இசையமைப் பாளராக மலையாளத்தில் அறிமுகமானார். புகழ்பெற்ற பல மலையாளப் படங்களுக்கு இசையமைத்திருக்கும் இவர் யார் தெரியுமா?

ஜேசுதாஸின் தந்தை அகஸ்டின் ஜோசப். அண்மையில் தந்தையை மலையாளப் படமொன்றில் பாட வைத்த ஜேசுதாஸ், இவருக்கு விழா எடுத்துச் சிறப்பும் செய்துள்ளார்.

★★



கால் மேல்கால் போட்டுக் கொண்டு இருக்கும் இந்தச் சிறுவன் இன்று ஒரு பிரபல இசையமைப்பாளர். தனது தேனிலும் இனிய இசையால் தென்றலாக வருடும் இவர், சொந்தக் குரலிலும் பாடல்களைப்பாடியுள்ளார்.

கண்டுபிடித்துவிட்டீர்களா இவர் யாரென்று? முடியாதவர்கள் பக்கம் 18ஐப் புரட்டி யாரென்று பார்த்துக் கொள்ளுங்கள்.

# மகளிர் தினம்!

குடும்பச் சிறையில்
குரல் வளையை
சிக்கவைத்துக்
கூவாமல்போன
ஊமைக்குயில்களின்
வாய்ப் பூட்டுக்கு
திறவு கோலாய்
விடுதலை பாடினான்
பாரதி.

•

இன்றந்த
விடுதலைப் பாடலை
பாடுதற்கும்
சுதந்திரமில்லா
தந்திரங்களால்
கண்ணீர் நதிகளில்
வாழ்க்கைப்படகை
செலுத்தும்
எத்தனை காரிகையர்?

•

உயிரோடு
இருந்திருந்தால்
மாதர் தம்மை
இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்தச்
சொன்னவனையே
கொளுத்தியிருக்கும்
கோரங்கள் நிகழ்ந்திருக்கும்!

•

அரசையே ஆண்டாலும்
அதிகாரத்தில் இருந்தாலும்
சந்தேகத் தீ கொண்டு
கண்ணகி யரை
எரிக்கின்ற
சிலிண்டர்களின்
வெடிப்புத் தொடரல்கள்
வரலாறு
படைக்கின்றன.

•

பாதுகாப்பு
வேலிகளுக்கு
பசிக்கும் போதெல்லாம்
ருசிக்கு விருந்தாகும்
ருத்ர தாண்டவங்களை
ரசிக்கும் வர்க்கங்களால்
விஷப் போத்தல்களும்
தூக்குக் கயிறுகளும்
விடும் கண்ணீரைக் கூட
விடாத
கல் மன சுகள்தான்
காசினியில் ஏராளம்.

•

இங்கே
தினம் படும்
அவஸ்தைகள்
போதாதென்று
மகளிர் தினமென்று
ஒன்றைத் தந்து
அன்றில்
'பெண்களாலேதான்
எல்லாம்' என்று
பெண்ணைக் கொண்டு
பெண்ணின்
உயிரை வாங்கும்
விஷேசத்தை
விஷேசமாய் செய்து
பெண்ணைக் கசக்கும்
பெருங்கொடுமையின்
பெயர்தானே
மகளிர் தினம்!

பூண்டுலோயா,
மெய்யன் நட்ராஜ்.

**குறிப்பு: (மகளிர் தினம் 8ம் திகதி முடிவடைந்தாலும் மங்கையர் படும்பாடு முடியவில்லையே)**

# நாலாயிரமாண்டு வாழ்க...!

ஒன்றல்ல.. இரண்டல்ல...
நானூறு படிகளை நீ
நயமாகத் தாண்டி விட்டாய் !
ஆணித்தரமான அரசியல் விமர்சனங்கள்,
அடுத்து வரப்போகும் அத்தனை அலுவலையும்
ஆருடம் கணிப்பது போல்
அச் சொட்டாய்க் காட்டிடுவாய்.
கோணல் புத்திக் காரர்களின்
குள்ள நரி வேலைகளை
குத்தாணியால் குத்தி
குடைந்து வெளிக் கொணர்வாய்
தெவிட்டாத தேன் குழைத்து
தீங்கவிகளைப் படைப்பாய்
நன்நெறிதனைக் காட்டும்
நல்ல கதை தெரிந்தெடுத்து
நயமாகப் படைத்து எமை
நல்லவராய் வாழ வைப்பாய்
வண்ணவண்ண படங்களுடன்
வகைவகையாய் அலங்கரித்து
கண்களுக்கு விருந்தளித்து
கருத்துக்கும் பகிர்ந்தளிப்பாய்
பள்ளிசெல்லும் பிள்ளைகளும்
துள்ளிக் கதை படிக்க
நல்லபல அறிவுரைகள்
நயமாகக் கற்றுணர
சொல்லரிய சுவை சேர்த்தே
நல்லுரைகள் படைத்திடுவாய்.
பலசுவை விருந்தளித்து
பக்குவமாய் எம்மையெல்லாம்
பரவசப்படுத்துகிறாய்
நானூறு வாரமென்ன...
நாலாயிரமாண்டு நின்று
நீடூழி வாழ உன்னை
நயமாக வாழ்த்துகிறோம்!
வாழ்க...வாழ்க...

துரோணாச்சாரி, மண்டூர்.

# ஒரு நாள் வேண்டும்

ஏன் எமக்கு இந்த நிலை....
ஏழ்மையினாலா?
ஏகாதிபதிகளாலா?
***
இருப்பதை வைத்து
இஷ்டப்படி வாழ்வதற்கு
இல்லை எமக்கு வழி...
***
அடக்கு முறைகளாலும்
அதிகார பலத்தினாலும்
அல்லும் பகலும் நாம்
அல்லல் படுகின்றோம்!
***
வாழ்க்கைப் புத்தகத்தை
வகுத்திட்ட ஆண்டவன் தான்
எமக் கென்ற பக்கத்தை
இரத்தத்தால் எழுதினானோ...?
***
கண்களிலே கண்ணீரும்
கைகளிலே மூட்டையுமாய்
நகர்கின்ற நரக வாழ்க்கை
நம்முடன் முடிய வேண்டும்!
***
விழுகின்ற செல்களினால்
வேரறுந்த மரமதுவாய்
கூடிழந்த குருவிகளாய்
குமுறி நாம் அழுகின்றோம்!
***
இரத்தக் கறை படிந்த
எங்கள் அத்தியாயம்
இல்லை யென்றாகி நாளை
எமது சந்ததிகள் தானும்
மகிழ ஒரு நாள் வேண்டும்!
***

மாணிக்கன் இளங்கோ,
முன்னம் போடிவெட்டை.

# விசித்திரக் கலண்டர்

எங்கள் கலண்டர்களில்
மாதங்கள் பன்னிரண்டு அல்ல
அவை
தை, மாசி, பங்குனியும் அல்ல–
பொங்கல், வருஷம்,
தீபாவளி, வெசாக், றமழான்
எனப் பண்டிகை நாட்களும் அல்ல.
•••
எங்கள் கலண்டர்கள்
விசித்திரமானவை.
ரிவிரச ஒன்றின் காலம்
இரண்டின் காலம்
சத்ஜய, எடிபல
ஜெய சிகுறுய–
தவளைப் பாய்ச்சல்–
புலிப் பாய்ச்சல்–
ஓயாத அலைகள்
எங்கள் கலண்டரின்
காலங்கள் இவை தான்.
இங்கு கிழிக்கப்படுபவை
திகதித் தாள்கள் அல்ல;
மனிதத் தலைகள்...!

இளைய மகள்–கொழும்பு–05.

# கரு நீதான்!

உன் சிரிப்பெனும்
சங்கீதத்திற்கு–வேறு
யாருக்கும் கேட்காத
பக்க வாத்தியமாய்
என் இதயத்துடிப்பு!
★
உன் அதரங்களின்
அசைவுக்கு
மௌனமாய் ஒலமிடும்
என் உயிரெனும் ஆத்மா!
★
நீ கடந்து சென்ற
காலடித்தடமாக
உன் நினைவுகளை
சுமந்து நிற்கும்
என் மனது!
★
தினம் உனை நினைத்து
கரைபுரண்டோடும்
வரி கட்டாத தண்ணீராய்
என் கண்ணீர்!
★
நீ விதைத்த நேசப்பயிரில்
முளைத்தது சோகமெனும்
எனது தாடி தான் அன்பே!
★
காதலெனும் கனவில்
காளை நான்
கனலாகிப் போனேன்!

# தேன் கிண்ணம்

★
நான கலலறையில
கருவாகினாலும்
என்றென்றும்
எனது கவிதைகளுக்கு
கருவாய் இருப்பது
நீ தான் அன்பே!
★

சிவலிங்கம்
சிவகுமாரன்,
வட்ட கொடை.





# கவனி முன்னேறு நில்

அடக்கம் நல்ல பலனைக் கொடுக்கும்.

ஒருவர் நோயாளியா இல்லையா என்பதை அவருடைய குரலை வைத்து கண்டு பிடித்துவிட முடியும் என்று மனோ தத்துவ டாக்டர் ஹார்வீ கூறுகிறார். பேச்சின் ஒலிநயம் மிகவும் முக்கியம் என்பது வெளிப்படையான உண்மை என்பதனை என்றும் நினைவில் வைக்கவேண்டும்.

பேச்சுக்கலையில் சிறந்து விளங்கி அதன் மூலம் நல்லதொரு எதிர்காலத்தை மகிழ்வுடன் எதிர்நோக்க முயற்சித்தாலும் பழக்கத்தாலும் குரலைப் பக்குவப்படுத்துவது மிகவும் நல்லது.

நம்முடைய சம வயதினருடனும் மூத்தவருடனும் இளைஞர்களுடனும் அன்றாட வாழ்வில் உரையாடுகிறோம். இவர்கள் நம்மை விட அந்தஸ்திலோ, தகுதியிலோ கல்வியறிவிலோ குறைந்தும் மிகுந்தும் இருக்கக்கூடும்.

உரையாடலை ஆரம்பிப்பதற்கு முன்னே இந்த விஷயங்கள் அத்தனையும் மனதிற்குள் நினைத்து எடை போட்டு கொள்ள வேண்டும். பிறகு தான் பேசுவது நல்ல முறையாகும்.

யார் யாரிடம் எப்படி பேச வேண்டுமோ அப்படித் தான் பேசுவது நல்லதாகும்.

நம்மை விட வயதில் இளைய

## உவகையான உரையாடல்

நம்முடைய அறிவு, பண்பு, அடக்கம் ஆகியவற்றைப் போலவே குரலும் பக்குவப் பட்டதாகவும் பண்பட்டதாகவும் இருக்க வேண்டும். குரலில் முக்கியமாக கவனிக்க வேண்டியது நளினமாக இருக்கிறதா என்பதுதான்.

நாம் பேசும்போது குரலில் இனிமையுடன் பண்பும் சேர்ந்து மென்மையாக இருக்க வேண்டுமே தவிர, நம்முடன் உரையாடுபவர்களையோ மற்றவர்களையோ எரிச்சலூட்டக் கூடாது. சிறப்பான உரையாடல் கலையின் அடிப்படையே இதில் தான் அடங்கி இருக்கிறது.

கவர்ச்சி இல்லாவிட்டாலும், கர்ண கடூரமாக இல்லாமல் எளிமையாகவும் இனிமையாகவும் குரல்



இருக்க வேண்டியது மிகவும் அவசியம். இது ஒன்றும் கடினமான காரியம் அல்ல!

இனிமையுடன் தான் பேச வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் போதும், அதை நிறைவேற்றும் முயற்சி எளிதாகி விடும். கவர்ச்சி என்பது அவரவர் தகுதியின் அடிப்படையில் ஏற்பட வேண்டும். உருவத்தைப் பார்க்காமலேயே பேசுபவரின் தகுதிகள்யாவை என்பதை உணர்த்தக் கூடியதாக ஆளுமையை காட்டும் குரலாக இருக்க வேண்டும்.

குரல் வளம் நமக்கு நன்றாக இருந்தால் அதுவே ஒரு வரப்பிரசாதமாக அமையும். நமது உரையாடல்களின் போது குரல் கவர்ச்சியும் வளமும் நிரம்பியதாக இருந்தால் அதன் மூலம் தனிப்பட்ட பலனும் கிடைக்கும். பல தொல்லைகளைத் தவிர்க்க முடியும்.

உரக்கப் பேசுவதனால் உண்மை வெளிப்படாது என்று அர்த்தம் இல்லை. உவகையுடன் பேசவேண்டும். அதற்கு

வர்களிடம் வாழ்க்கைத் தத்துவத்தைப் பற்றி சந்தேகங்களை தீர்த்துக் கொள்ளும் முறையில் உரையாடக் கூடாது. அதே போல் பெரியவர்களிடம் அதைப் போதிப்பது போல பேசக்கூடாது.

அதிகாரி, ஊழியர், பெரியவர், சிறியவர், நண்பர், உறவினர் ஆகிய பலரிடையே பேசும் பொழுது அவரவருக்கு ஏற்ப பேச வேண்டும்.

உரையாடல் என்பதே இருவழிப் பாதை. நாம் மட்டும் வளவளவென்று பேசி எதிரில் இருப்பவரைப் பேச விடாமல் செய்வதால் அது உரையாடல் அகாது.

பண்பான உரையாடல் என்பது அடுத்தவருடைய கருத்தையும் கூற சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். இது தான் பண்பான முறை. அடுத்தவர் பேச்சைக் கேட்காமல் நாம் மட்டும் பேச வேண்டும் என்றால் சுவர் முன்பு கூடநின்று பேசலாம் இல்லையா?

மற்றவர்களின் பேச்சுக்கும் மதிப்பு கொடுத்துக் கேட்க வேண்டும்.

# பேனா நண்பர்கள்



பெயர்: எம். நியாஸ்
வயது: 19
முகவரி:
33, பெரகும்பா வீதி,
குருநாகல்.
பொழுது போக்கு:
கிரிக்கெட்.



பெயர்: பி. சுமதி
வயது: 18
முகவரி:
119, சிதம்பரபுரம், வவுனியா.
பொழுது போக்கு:
பேனா நட்பு, பத்திரிகை.

# இந்தவாரம் உங்கள் பலன்

18.03.2001 முதல் 24.03.2001வரை

ஜோதிடர் 'கீர்னி'

**மேடம்:**
மனநிம்மதி ஏற்படும். எதிலும் வெளிப்படையான பேச்சுக்கள் அமைவதுடன் தடைப்பட்ட திருமணம் கைகூடி வரும். பணவரவுடன் எதிர்பார்த்த வெளிஇடத்துப் பிரயாணம் அல்லது பரீட்சை முடிவுகள் வெற்றியாக அமையும். தனுசு இராசிக் காரரால் உதவிகிட்டும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண்: 06
அதிஷ்ட திகதிகள் : 21, 24

**இடபம்:**
பிணி தீருவதுடன் முடக்கமான விடயங்கள் சீராக அமையும். பெயர் புகழ் பெறுவதுடன் கல்வித்துறை உயர்வடையும், குடும்பப் பெண்களிற்கு அலைச்சலைக் கொடுக்கும். துலா இராசிக்காரரால் இலாபங்கள் பெருகும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி
அதிஷ்ட நிறம் : சிவப்பு; எண்: 09
அதிஷ்ட திகதிகள் : 18, 19

**மிதுனம்:**
உயர்வான முயற்சிகள் அமையும். கொடுக்கல் வாங்கல் சீராக அமையும். வியாபாரத் துறையிலுள்ளோர் பயனடைவர். நோய் துன்பம் குறையும். திருவாதிரை நட்சத்திரகாரர் பல சிறப்புக்களைப் பெறுவர்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், ஞாயிறு
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 04
அதிஷ்ட திகதிகள் : 22, 24

**கடகம்:**
இடமாற்றங்கள் அமையும். செலவுகள் கூடும். உறவினரிடையே பிரச்சனைகள் தோன்றும். கொடுக்கல் வாங்கல்களில் அல்லது வெளியிடத்தார் தொடர்புகளில் கவனம் செலுத்தவும். பூச நட்சத்திரகாரர் நன்மை அடைவர்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், ஞாயிறு
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 04
அதிஷ்ட திகதிகள் : 22, 24

**சிம்மம்:**
வாழ்க்கையில் நம்பிக்கை பிறக்கும். முயற்சிகள் கடுமையாவதுடன் சிக்கல்கள் மறையும். தொழிலில் உயர் சாதனைகள் நிலை நாட்டலாம். கல்வித் துறையில் மாற்றங்கள் ஏற்படும். மக, உத்தர நட்சத்திரகாரர்கள் பண வசதிகளைப்பெறுவர்.
அதிஷ்ட நாட்கள்: வியாழன், வெள்ளி
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 05
அதிஷ்ட திகதிகள்: 19, 23

**கன்னி:**
வெளிநாட்டுப் பிரயாணம் வெற்றியடையும். முயற்சிகள் வெற்றி பெறுவதுடன் நோய் துன்பங்கள் மறையும். பரீட்சைகள் வெற்றியைக் கொடுக்கும். குடும்பஸ்தர்களுக்கு ஆலய தரிசனமும் பொருள் வரவும் கிட்டும். அத்த நட்சத்திரப் பெண்களுக்கு உயர்வான வாரமாகும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வியாழன்
அதிஷ்ட நிறம்: சிவப்பு; எண்: 06
அதிஷ்ட திகதிகள்: 21, 24

**துலாம்:**
கல்வியால் உயர்விருதுகள் கிடைக்கும். சகோதரர்களின் உதவி கிட்டும். தொழில் வாய்ப்புக்கள் பெருகும். செலவுகள் அதிகமாகும். குடும்பஸ்தருக்கு வாரஇறுதி வெற்றியைக் கொடுப்பதுடன் விசாக நட்சத்திரகாரர் திருமணத் தடைகள் விலகி மனதில் சந்தோஷம் நிலவும்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், வெள்ளி
அதிஷ்ட நிறம்: மரூண் வர்ணம்; எண்: 01
அதிஷ்ட திகதிகள்: 19, 23

**விருட்சிகம்:**
கடன்பிரச்சனை நிவர்த்தி பெறும். சிக்கல்கள் குறைவதுடன் பிரயாண ஏற்பாடுகள் இடம்பெறும். பிள்ளைகளால் ஆதரவும் கேட்டை நட்சத்திரகாரர் வெற்றி வாய்ப்புக்கள் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், ஞாயிறு
அதிஷ்ட நிறம் : கலப்பு வர்ணம்; எண்: 02
அதிஷ்ட திகதிகள் : 20, 22

**தனுசு:**
முடிவான நிலை தெளிவான கருமச் செயற்பாடுண்டு. உடலில் நோய்துன்ப நிவர்த்தியடையும், தொழில் விடயங்கள் நண்பர்களின் உதவியால் வெற்றி பெறுவதுடன் உத்திராட நட்சத்திரகாரருக்கு செலவுகள் அதிகமாகும். பிரயாண முயற்சிகளில் ஈடுபடுவர்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், சனி
அதிஷ்ட நிறம்: ஊதா; எண்: 08
அதிஷ்ட திகதிகள்: 18, 22

**மகரம்**
காரிய சித்தியுண்டு உறவினர்களின் எதிர்ப்புக்கள் குறையும். தொழில் சம்மந்தமான நியமனங்கள் கிட்டும். உடலிலுள்ள நோய் துன்பம் மருத்துவச் செலவு கட்டுப்படும். அவிட்ட நட்சத்திரகாரர் சிக்கலில் இருந்து விடுபடுவர்.
அதிஷ்ட நாட்கள்: புதன், சனி
அதிஷ்ட நிறம்: நீலம்; எண்: 03
அதிஷ்ட திகதிகள்: 21, 22

**கும்பம்:**
காரிய நிவர்த்தி பெறும். திருமணச் சுபகரும வாய்ப்புக்களுக்கு இடமுண்டு. நீண்டநாள் கனவு பலிப்பதுடன் பெரியோர்களின் ஆசீர்வாதமும் கல்வியில் பரீட்சைப் பெறுபேறுகள் நலமாக அமையும். பூரட்டாதி நட்சத்திரகாரர் காரிய சித்தியடைவர்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், புதன்
அதிஷ்ட நிறம்: றோஸ்; எண்: 07
அதிஷ்ட திகதிகள்: 19, 24

**மீனம்:**
மனதில் நம்பிக்கை பிறக்கும். கல்வியில் ஊக்க முயற்சிகள் கூடும். பெற்றோர்களின் உதவியும் பணவரவும் ஆலய தரிசனமும் உத்திரட்டாதி நட்சத்திரகாரருக்கு உயர்வசதி வாய்ப்புகளும் அமையும்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், வெள்ளி
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 09
அதிஷ்ட திகதிகள் : 19, 21

## வியர்வை துர்நாற்றமா?

## மாற்றுங்கள் உணவுப் பழக்கத்தை



சிலருக்கு உடலில் வியர்வை துர்நாற்றம் வீசும். இதற்கு சென்ரை அள்ளித் தெளித்துக் கொள்வார்கள். ஆனால் சென்டும் வியர்வையும் சேர்ந்து தூக்கியடிக்கும் விதத்தில் துர்நாற்றம் வீசும்.

வெப்பமான நிலையில் உள்ள அனைவருக்குமே வியர்வை வெளிப்பாடு அதிகமாக இருக்கும். உணவுப் பழக்கங்களை மாற்றினால் வியர்வைத் துர்நாற்றத்திலிருந்து விடுபடலாம்.

நைலோன் ஆடைகள் வியர்வையை வெளிக்கொணர்ந்து உலரவிடுவதில்லை. இதன் காரணமாக வியர்வை உடலிலேயே தங்கிவிடும். இதனால் வியர்வை துர்நாற்றம் அதிகரிக்கும்.

உள்ளி, வெங்காயம் சேர்த்த மசாலா மற்றும் இறைச்சி, மீன், கருவாடு போன்ற உணவுகளாலும் உடலில் துர்நாற்றம் வீசும்.

அமெரிக்காவில் சில மாநிலங்களில் உள்ளி சாப்பிட்டவர்கள் குளிரூட்டப்பட்ட பஸ்களில் பிரயாணம் செய்யக் கூடாது என்று ஒரு சட்டமே இருக்கிறது.

அந்த அளவிற்கு உள்ளி, வெங்காயம் போன்றவையும் மசாலாப் பொருட்களும் இறைச்சி, மீன் போன்றவையும் உடல் துர்நாற்றத்தை அதிகரிக்கச் செய்பவை.

அதிக பருமனாக இருப்பதால், உடலில் மடிப்புக்கள் அதிகம் இருக்கும். இந்த மடிப்புக்களில் வியர்வை தங்கி, பக்ரீரியாக்கள் அதிகம் அந்த இடங்களில் பெருகும். இதனால் துர்நாற்றம் அதிகமாகும்.

வெப்பமான நாட்களில் இருவேளை குளிப்பது நல்லது. குளித்து முடிந்ததும் சிறிதளவு நீரில் வினிகரையோ அல்லது சிறிது ஓடிக்கொலோனையோ சிறிய வாளியில் தண்ணீர் ஊற்றிக் கலந்து உடல் முழுவதும் படும்படி குளிக்க வேண்டும்.

வியர்வைத் துர்நாற்றம் உள்ளவர்கள் பயறு வகைகள், பச்சைக் காய் கறி வகைகள், பழச்சாறுகள், கீரைவகை போன்றவற்றை அதிகம் எடுத்துக் கொண்டால் நல்லது.

சொக்கலேட்டுக்கள், உலர்பழங்கள், சோயா மாவுப்பண்டங்கள், முட்டை போன்றவற்றை முடிந்த அளவு வெப்பகாலத்தில் குறைத்துக் கொண்டால் வியர்வை துர்நாற்றம் வீசாது.

## நீங்கள் உயரமாக வேண்டுமா?



சில பெண்கள், தாம் குள்ளமாக இருக்கிறோமே என்று கவலைப்படுவதுண்டு. கவலைப்பட்டால் உடல் நலம்தான் பாதிக்கப்படுமே தவிர, வேறு எந்த விளைவும் ஏற்படப் போவதில்லை.

இயற்கை அளிக்காத உயரத்தை, சொந்த முயற்சியால் ஏற்படுத்திக் கொள்ள வழிகள் இருக்கின்றன.

* தசைநார்களைத் தகுந்த பயிற்சி மூலம் பலம் பெறச் செய்ய வேண்டும்.
* கைகளையும் கால்களையும் மடக்கிப் படுக்கக் கூடாது. நன்றாக நீட்டி நிமிர்ந்து படுக்க வேண்டும்.
* உடலை எப்போதும் நேரான நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும்.
* இறுக்கமான ஆடைகள் அணிவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
* ஆழ்ந்த முறையில் மூச்சை இழுத்து விடும் பயிற்சியை மேற்கொள்ளவும்.
* திறந்த வெளியில் காற்றோட்டமுள்ள இடத்தில் தினமும் நடக்க வேண்டும்.
* களைப்பு ஏற்படும் போது ஓய்வு எடுக்க வேண்டும்.
* உடலுக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும் சத்தான உணவை அளவுடன், அதே வேளை நேரத்தடன் சாப்பிடவேண்டும்.
* முதுகு எப்போதும் நிமிர்ந்து, நேராக இருக்க வேண்டும். முதுகெலும்பு வளைந்திருந்தால் வளர்ச்சி தடைப்படும்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** JG

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

தொழில்:..........................

கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 24-03-2001**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது 79 புவனா

# மோனிக்கா என் மோனிக்கா

ஓ.ஜே சிம்சன் அவருடைய மனைவியை 1994ம் ஆண்டு கொலை செய்தது தொடர்பாக லொஸ் ஏஞ்சல்ஸ் நகரம் பரபரப்படைந்து காணப்பட்டது. இது தொடர்பான வழக்கு விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது லொஸ் ஏஞ்சல்ஸ் நகரம் மிகவும் கலவரமடைந்த நிலையிலிருந்தது. தொலைக்காட்சி படப்பிடிப்பாளர்களும், புகைப்படப் பிடிப்பாளர்களும் உலகனைத்துமிருந்து ஊடகவியலாளர்களும் சூழப்பட்டிருந்தது.

குறிப்பாக, பிரெண்ட் வூட் பிரதேசம் நெரிசலால் பலத்த சங்கடங்களைக்கண்டது. அந்தப் பிரதேசத்தில் குடியிருந்த பொதுமக்கள் மிகவும் சிரமத்துக்குள்ளானார்கள். மக்கள் நடமாடவே முடியாதளவு நெருக்கடிகளை ஓ.ஜே.சிம்சன் மனைவி கொலை சம்பந்தமான வழக்கு விசாரணைகளை தங்கள் தங்கள் ஊடகங்களுக்கு சுடச்சுட அனுப்பிவைக்க வேண்டும் என்ற அவாவினால் ஊடகவியலாளர்கள் தவித்துக் கொண்டிருந்தனர்.

அந்தப் பரபரப்புக்குப் பின்னர் லொஸ்ஏஞ்சல்ஸின் பிரெண்ட்வூட் பிரதேசம் இப்பொழுது மோனிக்காவின் வரவினால் பரபரப்படைந்திருந்தது.

திரும்பிய பக்கமெல்லாம் தொலைகாட்சி படப்பிடிப்பாளர்கள் வாகனங்களிலும் புகைப் படப் பிடிப்பாளர்கள் வெவ்வேறு வாகனங்களிலும் படப்பிடிப்புக் கருவிகளுடன் தனித் தனியாக அலைந்து திரிந்த படப்பிடிப்பாளர்களினாலும் எப்போதும் சூழப்பட்டிருந்தன.

பிரெண்ட்வூட் பிரதேசத்தில் பொதுவாக பணவசதி படைத்த செல்வந்தர்களின் வீடுகள் ஏராளமாகக் காணப்பட்டன. இருப்பினும் அங்கு எப்போதும் அமைதியே சூழ்ந்திருந்தது. ஆனால் அந்தப் பிரதேசத்தின் அமைதியை முதன் முதலில் ஓ.ஜே.சிம்சனின் வழக்குத்தான் குலைத்தது. அதன் பின்னர் இப்பொழுது மோனிக்காவின் வரவு, அதைவிட பலமடங்கு பரபரப்பை ஏற்படுத்தி விட்டிருந்தது.

பெப்ரவரி ஆரம்பத்தில் வாஷிங்டனில் மோனிக்காவின் வாட்டர்கேற் அப்பார்ட்மெண்ட்டை விட்டு அவள் புறப்பட்ட நேரத்திலிருந்து, விமான நிலையம் சென்று விமானத்திலேறி லொஸ் ஏஞ்சல்ஸ் நகரை வந்தடையும்வரை அவளை பல்வகை கமராக்களின் ஒளி விளக்குகள் தழுவிய வண்ணமிருந்தன. கென்னத் ஸ்டார் விசாரணைகள் என்று ஆரம்பமானதோ அன்றிலிருந்து மோனிக்கா நிம்மதியிழந்தாள். ஸ்டாரின் உதவியாளர்களுடைய விசாரணைகள் மூலமாக அவளனுபவித்த துயரத்தைப் பார்க்கிலும், ஊடகவியலாளர்கள் மோனிக்காவுக்கு கொடுத்த துயரங்களே அவளால் சகிக்க முடியாதிருந்தது.

இத்தகைய நெருக்கடிகளிலிருந்து சற்று ஒதுங்கி சில நாட்கள் மறைந்து வாழ்வதற்கு ஏற்ற இடமாக அவள் தெரிவு செய்த இடம் அவள் பிறந்து வளர்ந்த லொஸ் ஏஞ்சல்ஸ் நகரம்தான் என்று கருதியே அங்கு செல்ல புறப்பட்டாள்.

லொஸ் ஏஞ்சல்ஸில் அவருடைய தந்தையாரான பேர்ணி லிவின்ஸ்கியும் அவருடைய இரண்டாவது மனைவியும் தங்கியிருந்தனர்.

பேர்ணியும் மார்சியாவும் விவாகரத்துச் செய்த துர்ப்பாக்கிய சம்பவத்துக்குப் பின்னர் மோனிக்காவும் அவள் தம்பியும் அவர்களுடைய தகப்பனார் பேர்ணி லிவின்ஸ்கியுடனான நெருக்கமான உறவைத் தவிர்த்துக் கொண்டனர். இப்பொழுது தன்னுடைய தந்தையை நாடி மோனிக்கா சென்றபோது அவர் உண்மையில் பெருமகிழ்ச்சியடைந்தார்.

அவளுடைய நடவடிக்கையினால் ஓரளவு கசப்புணர்வு இடையில் ஏற்பட்டிருந்த போதிலும், அமெரிக்க மத்திய அரசாங்கத்தின் புலன் விசாரணை அமைப்பினால் தனது மகளுக்கு ஆபத்து சூழ்ந்திருக்கிறது என்ற தகவலை தனது முன்னாள் மனைவி மார்சியா மூலம் அறிந்ததும் துடிதுடித்தார்.

இந்த ஆபத்திலிருந்து தன் மகளை எப்படியாவது மீட்டெடுக்க வேண்டும் என்று கருதியமையினால், அதிகமான கட்டணம் அறவிடும் சட்டவல்லுநரான பில் கின்ஸ்பேர்க் என்பவரை ஏற்பாடு செய்து தன் மகளிடம் அனுப்பி வைத்தார்.

தன் மகள் தன் வீடு தேடி வந்து சேர்ந்ததும் அவருடைய பாசவுணர்வு, அவள் மீதிருந்த வெறுப்புணர்ச்சி எல்லாவற்றையும் மறக்கடித்துவிட்டது. அவருடைய மனைவியும் மோனிக்காவை அன்போடு வரவேற்று உபசரித்தாள். மோனிக்கா லொஸ் ஏஞ்சல்ஸ் நகரை வந்தடைந்ததும் 'நியூயோர்க் போஸ்ட்' என்ற பத்திரிகை 'பாலியல் சைரன் வீடு செல்கிறது' ('STIR-CRAZY SEX SIREN GOES HOME') என்ற தலைப்பிட்டு செய்தி வெளியிட்டிருந்தது.

மோனிக்காவுடன் அவளுடைய சட்டத்தரணியான கின்ஸ்பேர்க்கும் கூடவே லொஸ்ஏஞ்சல்ஸ் வந்து சேர்ந்தார். இருவரும் படப்பிடிப்பாளர்களின் தாக்குதல்களிலிருந்து உயிருடன் தப்பி வெளியேறி வருவதே பெரும் பிரச்சனையாகிவிட்டது.

வாஷிங்டனில்தான் ஊடகவியலாளர்களின் கெடுபிடிகள் அதிகம் என்று கருதி லொஸ்ஏஞ்சல்ஸ் வந்த மோனிக்கா வாஷிங்டனை விட இங்கு முரட்டுத்தனமான தாக்குதல்களை அனுபவிக்க வேண்டி நேர்ந்தது.

விமான நிலையத்திலிருந்து அவளுடைய தகப்பனார் இல்லத்துக்கு மோட்டாரில் கின்ஸ்பேர்க்குடன் பயணம் செய்தது, ஒரு நாட்டின் மகாராணி ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவதைப் போல் அமைந்தது.

அப்போது படமாக்கப்பட்ட தொலைக்காட்சிப்படங்கள் சிறு திரையில் காட்டப்பட்ட பின்னர்தான் மோனிக்கா ஒரு பரத்தையல்ல; அவளுக்கும் ஒரு குடும்பம் இருக்கிறது. அதுவும் செல்வாக்குள்ள குடும்பத்தைச் சேர்ந்தவள் மோனிக்கா என்று அவளுடைய அந்தஸ்து மக்கள் மனங்களில் உயர்வடைந்தது. அவர்களிருவரும் லிவின்ஸ்கியின் வீட்டுக்கு வந்து சேர்வதற்கு முன்னர் அவருடன் கையடக்கத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட கின்ஸ்பேர்க், "உங்கள் மகள் உங்கள் வீட்டில் வந்திறங்கும் போது உங்கள் மனைவியுடன் நீங்கள் வெளியே வந்து மோனிக்காவை அணைத்து முத்த மிட்டு வரவேற்க வேண்டும்" என்று கட்டளை மிட்டிருந்தார்.

அவர் கூறியதைப் போன்று மோனிக்காவை லிவின்ஸ்கி தம்பதியினர் வரவேற்ற காட்சி தொலைக்காட்சிகளில் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது.

லிவின்ஸ்கி வாழ்ந்து வந்த மாளிகை போன்ற இல்லம் வெளிப்புறத்தில் எத்தகைய தோற்றம் அளித்தது, இல்லத்தைச் சூழ்ந்திருந்த பூந் தோட்டம் எவ்வாறு காட்சியளித்தது என்பவற்றையெல்லாம் தெளிவாக படம் பிடித்துக் காட்டினார்கள்.

மோனிக்காவின் அந்தஸ்து திடிரென்று உயர்ச்சி பெற்றதற்கு இந்தத் தொலைக் காட்சியும் உதவி புரிந்துள்ளது.

தனது கட்சிக்காரார் அமெரிக்க ஜனாதிபதியுடன் மிக நெருங்கிய உறவு வைத்திருப்பதென்றால், அவளும் ஒரு சாதாரணமானவளல்ல. என்பதை நிரூபிக்கவே கின்ஸ் பேர்க் இத்தகைய ஏற்பாட்டைச் செய்திருந்தார் என்பதை அன்றிரவு உணவருந்தும் வேளையில் லிவின்ஸ்கி தம்பதியிடம் கின்ஸ்பேர்க் தெரிவித்தபோதுதான் மோனிக்கா அறிந்து கொண்டாள். உள்ளபடி, அவளைப் பொறுத்தவரை, இத்தகைய ஏற்பாடு அவளுக்கு பிடிக்கவில்லை. தான் தனது தந்தையின் வீட்டுக்கு வருவது ஒரு குடும்ப விவகாரம். இதனை இத்தனை தூரம் விளம்பரப்படுத்தியிருக்க வேண்டிய அவசியமில்லை என்றே அவள் கருதினாள்.

தந்தையைக் கண்டபோது மோனிக்கா உண்மையில் உணர்ச்சி வசப்பட்டாள். சித்தி அவளை அணைக்கும்போது இருவருமே கண்ணீர் வடித்தனர். இவற்றையெல்லாம் தொலைக்காட்சிகள் மிகத் துல்லியமாக வெளிக்காட்டின.

இச்சந்தர்ப்பத்தில் கின்ஸ் பேர்க் ஊடகவியலாளர்களிடம் கூறிய வார்த்தைகள் மோனிக்காவுக்கு பெரும்சங்கடத்தை ஏற்படுத்தியது. அவள் சற்றும் எதிர் பாராமல், "மோனிக்கா தன்னுடைய தகப்பனார் வீட்டுக்கு வந்திருப்பது ஜனாதிபதி கிளின்ரனின் மகள் செல்ஷியா கல்லூரிக்குச் சென்று முதலாவது தவணை முடிந்து அவளுடைய தகப்பனாரைத் தேடி வருவது போன்ற ஒரு சம்பவம் தான்" என்றே கின்ஸ் பேர்க் கூறிய வார்த்தைகள் அமைந்திருந்தன.

*(வருவாள்)*

## தந்தையைத் தேடி வந்த மகள்!



*லிவின்ஸ்கி வாழ்ந்த லொஸ் ஏஞ்சல்ஸ் நகர இல்லத்துக்கு, மகள் மோனிக்கா முதன் முதலில் வந்தபோது, இருவரும் ஒருவரையொருவர் ஆலிங்கனம் செய்யத் துடிக்கும்போது பிடிக்கப்பட்ட படம். (பெப்ரவரி 1998)*

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## கெட்டபுளா வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | எஸ்.முத்துகுமாரி<br>கொலபத்தனை தோட்டம், கெட்டபுளா. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## பாப்பா முரசு சிறுகதை

# விவசாயின் நேர்மை

ஒரு முறை வீரத்திற்கு பெயர் பெற்ற மராட்டிய வீரன், படைத்தலைவர் பேசராவ், அண்டை நாட்டின்மீது படையெடுத்துச்சென்று பல வெற்றிகளைப் பெற்றார். இவரது வீரத்திற்கு ஈடு இணையில்லை. இவர் படையெடுத்து சென்ற நாடுகளில் எல்லாம் வெற்றிமேல் வெற்றி கிடைத்தது. பெரும் புகழுடன் மகிழ்ச்சியான மனதுடன் தனது நாட்டிற்குப் பயணமானார். நீண்ட நாள் பயணத்திற்கு பின் தங்களது நாட்டின் எல்லையை படைவீரர்களுடன் வந்தடைந்தார்.

நீண்ட தூரப் பயணத்தினாலும், இதுநாள் வரையில் பல நாடுகளுடன்



போரிட்டுத் திரும்பியதால், மிகவும் களைப் படைந்திருந்தனர். தலை நகரை அடைய வேண்டுமானால் இன்னும் சில நாட்கள் பயணம் செய்ய வேண்டும். எனவே, நாட்டின் எல்லையில் இருந்த சிற்றூரில் முகாமிட்டுத் தங்க எண்ணினார் பேசராவ். எனவே அவரது கட்டளைப்படியே வீரர்களும் முகாமிட்டனர். வீரர்கள் அனைவரும் பசியுடன் இருப்பதை அறிந்த பேசராவ், வீரர் தலைவனை அழைத்து, "பக்கத்து ஊருக்குச் சென்று சமையலுக்குத் தேவையான உணவு பொருட்களைக் கொண்டு வா. எத்தனை வீரர்கள் வேண்டுமோ அவர்களை உன்னுடன் அழைத்துச் செல்," என்றார்.

ஐம்பது வீரர்களுடன் புறப்பட்டான் வீரர்களின் தலைவன். அவர்கள் எதிரில் விவசாயி ஒருவர் வந்தார். அவரிடம், "இந்த ஊரில் நல்ல தோட்டத்துடன்கூடிய விளை நிலம் இருந்தால் காட்டு," என்றான்.

விஷயமறியாத உழவனும் அவர்களை அழைத்துச் சென்று ஒரு நிலத்தை காட்டினான். அங்கே ஒரு பக்கம் வாழையும், தென்னையும், பழங்களும் கொத்துக் கொத்தாக பழுத்திருந்தன. அதைக் கண்டவீரர்கள் தலைவன்,

"வீரர்களே! தோப்புக்குள் இறங்கி உங்களுக்கு விருப்பம் போல் உணவு பொருட்களை கொண்டு வாருங்கள்," என்றான்.

மகிழ்ச்சியுடன் தோப்பிற்குள் நுழைந்தனர் வீரர்கள்.

இதைக் கண்ட விவசாயி, "ஒரு நிமிடம் பொறுங்கள்! என்னுடன் சிறிது தூரம் நீங்கள் நடந்து வந்தால், இதைவிட அருமையான வயலை காட்டுவேன். அங்கே எல்லா வகை பழங்களும், கரும்பும், நெல்லும், காய்கறிகளும் உள்ளன," என்றான்.

"அப்படியானால் அங்கே செல்வோம். வாருங்கள் வீரர்களே," என்றான் வீரர் தலைவன்.

"விவசாயி இதோ இருக்கிறது. இன்னும் சற்று தூரம் தான்" என்று சொல்லிச் சொல்லியே வெகு தொலைவிற்கு அழைத்துச் சென்று அங்கிருந்த ஒரு நிலத்தை காட்டினான். "இதில் உங்கள் விருப்பப்படி எதை வேண்டுமானாலும் பறித்துக் கொள்ளுங்கள்," என்றான்.

அந்த நிலத்தைக் கண்ட வீரர் தலைவன் எரிச்சலடைந்தான்.


"இந்த நிலத்தை காட்டவா எங்களை இவ்வளவு தூரம் அழைத்து வந்தாய். நீ முதலில் காட்டிய நிலமே இதை விட வளமாக இருந்ததே," என்றான் ஆத்திரத்துடன்.

"ஐயா! என்னை மன்னித்து விடுங்கள். நான் முதலில் காட்டியது வேறு ஒருவருடைய நிலம். நீங்கள் அந்த நிலத்தின் பொருட்களை எடுத்திருந்தால், அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர் நஷ்டப்பட்டிருப்பார். அதற்கு நான் காரணமாகி விடுவேன். ஆனால் இது என்னுடைய சொந்த நிலம். அதனால் தான் நான் உங்களை இங்கு அழைத்து வந்தேன். இங்கே உங்கள் விருப்பம் போல் பொருட்களை எடுத்துச் செல்லுங்கள்," என்றான்.


விவசாயி சொன்ன வார்த்தைகள் வீரர் தலைவனின் உள்ளத்தைத் தொட்டது. தங்களது செய்கையை எண்ணி வெட்கியவனாக, விவசாயியின் நிலத்தில் எதையுமே தொடாமல் திரும்பி வந்து படைத் தலைவனிடம் நடந்ததைச் சொன்னான்.

விவசாயியின் நேர்மையான உள்ளம் தனக்கு இல்லாததை நினைத்து வெட்கமடைந்தார் பேசராவ்.


"வீரர்களே! தேவையான பணத்தை எடுத்துச் சென்று பொருட்கள் வாங்கி வாருங்கள். இலவசமாக எந்த பொருளையும் எடுத்துவர வேண்டாம்" என்று தன் வீரர்களுக்கு கட்டளையிட்டார் பேசராவ்.



முயலுக்கு மிகவும் விருப்பமான முள்ளங்கி அருகில் தான் இருக்கிறது. ஆனால் பாதைதான் அதற்குத் தெரியவில்லை. நீங்களாவது அது முள்ளங்கியை எடுப்பதற்குச் சரியான பாதை காட்டக் கூடாதா?



## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **24.03.2001**.

வர்ணம் தீட்டும் போட்டி இல: **387**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 384

**பரிசுக்குரியவர்:**
கவிபிரதீப் திரவியநாதன்,
செந்துல்பத்தனை, லிந்துல.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ப.இன்பராஜ், கதிர்காமர் வீதி, அமிர்தகளி, மட்டக்களப்பு. | க.சுகந்தகுமார், இந்துக்கல்லூரி, பம்பலப்பிட்டி, கொழும்பு-04. |
| பா.விஷ்ணுவர்மன், சா.லூசியஸ் மகா வித்தியாலயம், கொழும்பு-13. | சிவராஜா மதுரன், றோயல் கல்லூரி, கொழும்பு |
| ஆ.டில்ஷான், புனித தோமஸ் கல்லூரி, பண்டாரவளை. | மில்ரோய் ஜே.லெப்ரோய், தமிழ் தேசிய கல்லூரி, இரஜவெல்ல. |
| பி.மோகேந்திரன், சென்.ஜோன் பொஸ்கோ, அட்டன். | தி.யுவினா, இ.கி.ச.பெண்கள் பாடசாலை, காரைதீவு-08. |
| வசந்தகுமார் ஜெகதீஸ், சரஸ்வதி மத்திய மகா வித்தியாலயம், பதுளை. | எம்.றிஸ்வான், ஸஹிரா தேசிய பாடசாலை, புத்தளம். |

# பறவைகள் பலவிதம்

## விஷப் பறவை

எல்லாப் பறவைகளுமே பழங்களை உட்கொள்ளும் இயல்பு படைத்தவை. ஆனால் விஷத் தன்மையுடைய பழங்களை எந்தப் பறவைகளும் உண்பதில்லை என்று நினைக்கிறோம். ஆனால் 'சாறு உறிஞ்சும் பறவை' எனப்படும் பறவை விஷத்தன்மையுடைய பழங்களை விழுங்கும் சக்தி கொண்டது.

இப்பறவை விஷத் தன்மை கொண்ட பழங்களை உண்டாலும், பழத்தில் உள்ள விஷம் இதனைப் பாதிப்பதில்லை. இதற்கு விஷ எதிர்ப்பு சக்தி இருப்பதால், விஷப்பழங்களைச் சாப்பிட்டால் பாதிப்பு எதுவும் ஏற்படுவதில்லை.

## நீர்ப் பறவை

நீர்ப்பறவைகளில் ஓரினமான 'மான்க்ஷயர்' என்ற பறவையினம் ஒன்றுள்ளது. பறவையினங்களில் அதிக இயல்புணர்ச்சி இந்தப் பறவைக்கே உள்ளது.

ஒருமுறை இப்பறவைக்கு இயல்புணர்ச்சிச் சோதனை நடத்தப்பட்டது. இச்சோதனையின் போது பாஸ்டன் நகரில் இருந்து வெல்ஸ் தீவு வரையுள்ள 3050 மைல் தூரத்தை வெறும் 12 1/2 நாட்களில் பறந்து சாதனை படைத்தது இந்த நீர்ப்பறவை.


## அரசர் பறவை

பறவையினங்களில் 'அரசர் பறவை' என்ற ஒருவகையான பறவை உண்டு. இந்தப்பறவையின் உணவு தேனீக்கள் மட்டும்தான்.

தேனீக்களை தன்னை நோக்கி வர வழைப்பதற்காக இந்தப் பறவை ஒரு தந்திரத்தைக் கையாளுகிறது. தனது தலையில் விசேடமாக அமைந்திருக்கும் ஒரு சிவப்பு புள்ளியை மின்ன வைத்துத் தேனீக்களைத் தன்னிடம் ஈர்க்கிறது.

தேனீக்களும் மின்னும் சிவப்புப் புள்ளியை பூ என்று நினைத்து, ஏமாந்து போய், பறவையை நெருங்கும் போது, உடனே தனது அலகினால் பிடித்து விழுங்கி விடுகிறது.

## நீண்ட நீச்சல்



விலாங்கு மீன்களை ஆங்கிலத்தில் 'ஈல்' என்று அழைப்பார்கள். ஐரோப்பிய ஆறுகளில் 'அன்கிலா அன்கிலா' என்ற விலங்கியல் பெயருடைய ஒருவகை விலாங்கு மீன்கள் உள்ளன.

இவை 12 வயதானதும் அந்த ஆறுகளில் இருந்து புறப்பட்டு, ஆற்று முகத்துவாரம் வழியே அட்லாண்டிக் கடலை அடைந்து அங்கிருந்து, 7 ஆயிரம் கிலோமீட்டர் பயணம் செய்து சார்கோசா கடல் பகுதியை அடைந்து, அங்கே முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன.

அந்தக் குஞ்சுகள் சிறிதுகாலம், அங்கேயே தங்கி விட்டு, தன் பெற்றோர்களின் இருப்பிடமான ஐரோப்பிய ஆறுகளுக்கு நீந்தி வரும். இந்த நீந்தும் பயணம் நெடுந்தூரம்.

இந்தப் பயணத்தை முடிக்க அவற்றுக்கு 3 வருடங்கள் ஆகும். அப்படி வந்த குஞ்சுகள் 12 வயதாகும்போது முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்க சார்கோசா கடலுக்குப் பயணம் புறப்படும்.



## நட்சத்திரங்கள்

நட்சத்திரங்கள் நகராமல் இருப்பது போல் தோற்றமளித்தாலும், உண்மையில் அவை படுவேகமாக நகர்கின்றன. வானத்தில் நாம் பார்க்கும் நிலவை, எவ்வளவு வேகத்தில் கழுகு ஒன்று கடக்கிறதோ அதை விட வேகமாக நட்சத்திரங்கள் நகர்கின்றன. கழுகொன்று நிலவைக்கடக்கும் வேகம் மணிக்கு 3600 கிலோமீட்டர்.

★★★

நட்சத்திரங்களில் குவாசர் எனப்படும் நட்சத்திரம் வித்தியாசமானது. இது பலமான வான் அலைகளை உருவாக்குகிறது. இதன் வேகம் மணிக்கு 100 கோடி கிலோ மீட்டர் ஆகும்.

★★★






நட்சத்திரங்கள் எல்லாம் குளிர்ச்சியான தன்மை கொண்டவை அல்ல. துருவ நட்சத்திரம் என்னும் நட்சத்திரமானது சூரியனை விடவும் அதிக வெப்பம் கொண்டவை. சூரியனின் வெப்பநிலை 1.4 கோடி பாகை செல்சியஸ் ஆகும்.

★★★

ஒயரை மாட்ட-

அறைக்குள் ஒளி பரவ-

கொஞ்சம்கூட கலையாமல் படுக்கை.

அதற்குள் நிவாஷ், அஸிஸ்டெண்ட் டைரக்டர்கள் எல்லோரும் வந்து சேர-

ஹோட்டல் முழுக்க ஆளுக்கொரு பக்கமாய் ஓடிப் பார்க்க-

சுபா, அவளின் அம்மா இரண்டு பேரின் சுவடே காணோம்.

"கிழிந்தது போ" பால்ராஜ் தலையில் கைவைத்து உட்கார்ந்தார்.

தர்மா வந்து நின்று, "சார்" என்றான்.

"என்னப்பா...?"

"போலீஸுக்கு கம்ப்ளெயிண்ட் கொடுக்கணும்... புரொடியூஸரும் இல்லே... நீங்கத்தான் தீர்மானம் பண்ணணும்... சொல்லுங்க, என்ன பண்ணலாம்?"

"மணி என்ன..?"

"அஞ்சு சார்.."

"இப்ப எவன் ஸ்டேஷன்லே இருக்கப் போறான்...? முதல்ல புரொடியூஸருக்குப் போன் போட்டுத் தகவலைச் சொல்லுங்க..."

"போன் பண்ணிட்டேன் சார்... இந்த இன்ஸ்பெக்டர் ராஜா வீடு எனக்குத் தெரியும், அடிக்கடி ஷூட்டிங் வந்து பழக்கம்.. நீங்க சொன்னா நான் போய் எழுப்பி கூட்டிட்டு வர்றேன்..."

02

# நிழல் கொலைகள்



கொஞ்ச நேரம் யோசித்த பால்ராஜ், "சரி தர்மா! போய் கூட்டிட்டு வாங்க... புரொடியூஸர் என்ன சொன்னாரு...?"

"கார்ல கிளம்பி வந்துட்டிருக்காரு சார். எதுன்னாலும் டைரக்டரைக் கேட்டு முடிவு பண்ணிக்கன்னு சொல்லிட்டாரு.."

"சரி, முதல்ல இன்ஸ்பெக்டரைக் கூட்டிட்டு வாங்க... இன்னொரு விஷயம் சுபாவும் அவங்கம்மாவும் காணாமல் போன விஷயம் எந்த காரணம் கொண்டும் இந்த ஓட்டலைத் தாண்டிப் போகக்கூடாது... அநாவசியமா லோக்கல் க்ரெளடு நம்மளைச் சிந்திக்க விடாமல் தொந்தரவு பண்ணும்.."

"சரி சார்..."- இன்ஸ்பெக்டர் ராஜா வீட்டை நோக்கி காரை ஓட்ட சொன்ன வேளையில் தர்மா யோசித்தான்.

'டைரக்டர் ஏன் நியூஸ் லீக் ஆக வேண்டாங்கறார்... அதுவும் ஒரு பப்ளிசிட்டி தானே...?'.

இன்ஸ்பெக்டர் வீட்டை தர்மா அடைந்த போது அவர் நல்ல வேளையாக இருந்தார்.

"என்ன தர்மா.. இந்த காலையிலே வந்து நிக்கறீங்க..?"

விவரம் சொன்னான்.

"என்னய்யா இது... சில்வர் இன்ஸ்டார் ஓட்டல்ங்கறே.. அங்கயா, இப்படி? ஒரு நிமிஷம் இருங்க, வந்துடறேன்..."

தர்மா இன்ஸ்பெக்டர் ராஜாவுடன் ஹோட்டலை அடைந்தபோது யுனிட்டே கூடியிருந்தது.

ராஜா அறைக்குள் நுழைய, பின்னாலேயே டைரக்டர் நுழைந்தார்.

அறை புதுப்பெண்ணாய் உருக்குலையாமல்-

ராஜா ஒன்றும் பேசாமல் அறையைச் சுற்றிச் சுற்றி வந்தார்.

ரிஸீவரை எடுத்துக் காதில் பொருத்திப் பார்த்தார்.

டயல் டோன் டைரக்ட் லைன்.

"மானேஜரைக் கூப்பிடுங்க..." பால்ராஜிடம் சொன்னது வாசலில் நின்றிருந்த மானேஜரின் காதுகளில் விழுந்தது.

உள்ளே வந்தார்.

"என்ன சார்..?"

"ஹோட்டல் பிரதான கேட்டை தினமும் பூட்டிடுவீங்களா?"

"ஆமாம் சார்... இப்ப குளிர் ஓவரா இருக்கறதுனால எல்லாருமே ஏழு, எட்டுக்குள்ள திரும்பிடறாங்க... கேட்டைப் பூட்டிடறோம்..."

"ஹோட்டல் பின்பக்கம் வழி ஏதாவது இருக்கா..?"

"இப்ப கிடையாது... முன்னால கழிவு கொட்டறத்துக்குன்னு சின்ன கேட் வெச்சிருந்தோம், அதையும் அடைச்சிட்டோம்..."

மானேஜரிடம் கேள்வி கேட்டுக் கொண்டிருந்த ராஜா 'பட்'டென்று டைரக்டர் பக்கம் திரும்பினார்.

"மிஸ்டர் பால்ராஜ்... நேற்று ராத்திரி யார் அவங்களைக் கடைசியாய் பார்த்தது..?"

பால்ராஜ், "யார் கடைசியாய் பார்த்தாங்கன்னு எனக்குத் தெரியாது.. ஆனா, ஒன்பது மணிக்கு ரூமுக்கு அந்தப் பொண்ணு அவங்கம்மாவோட வந்து பேசிட்டு போச்சு..."

"இன்ஸ்பெக்டர்" என்று குரல் வர திரும்பினார்.

நிவாஷ் "இங்க வாரீங்களா, உங்கசிட்டே கொஞ்சம் பேசணும்..."- என்றான் படபடப்புடன்.

ராஜா நிவாஷ் அருகில் போனார்.

நிவாஷ் கண்களெல்லாம் முதல் நாள் ஷிவாஸ் ரீகலின் வீரியத்தைச் சொன்னது.

"என்ன மிஸ்டர் நிவாஷ்..?"

கைலியும், மேலே ஷர்ட்டும் அணிந்திருந்தான்.

"சார்... என்னோட ரூமுக்கு வாங்க... தனியாய்ப் பேசணும்..."

இருவரும் நிவாஷின் அறைக்குள் நுழைய-

நிவாஷ் அறைக் கதவை தாளிட்டான்.

"உட்காருங்க"- என்றான்.

"சொல்லுங்க மிஸ்டர் நிவாஷ்... என்ன சொல்லணும்ங்கறதை சீக்கிரம்சொல்லுங்க..."

"சார்! ராத்திரி பன்னிரெண்டு வரைக்கும் நான் சுபாவோட ரூம்ல இருந்தேன்... நான் மறைக்க விரும்பலை.. செக்ஸ்ல்ல ஈடுபட்டேன், அந்தப் பெண்ணோட அம்மா ரூம்ஸிட் அவுட்ல உட்கார்ந்திருந்தாங்க.. அவங்க சம்மதத்தோடதான்..

சினிமாவில அது சகஜம்.. பின்னால நீங்க நாயைக் கொண்டு வந்து அது என்மேல பாய்ஞ்சு.. அதுக்கு முன்னாடியே உங்க கிட்ட சொல்லணும்ன்னு சொல்றேன்."

"எனிவே மிஸ்டர் நிவாஷ் இவ்வளவு வெளிப்படையா சொன்னீங்க... உங்ககிட்ட ஒண்ணு கேட்க விரும்பறேன்..."

"என்ன..?"

"அவங்க விருப்பத்துக்கு மாறாக நீங்க எதுவும் பண்ணியிருந்து, அவங்க பாட்டுக்கு எங்காவது போய் மலை முகட்டுல இருந்து குதிச்சு, தற்கொலை பண்ணிட்டிருக்கக் கூடாது இல்ல?"

"சார், நான்தான் முதல்லயே சொன்னேனே.. சினிமாவில இதெல்லாம் சகஜம்... சொல்லப்போனா, மணி சரியா ஒன்பது பத்து இருக்கும்... அந்தப் பெண்ணே போன்ல கூப்பிட்டாங்க... 'என்ன சார் புது முகத்து கிட்ட எல்லாம் ஃப்ரீயா பழகுவீங்கன்னு சொன்னாங்க; நீங்க ஒதுங்கியே இருக்கீங்களே'ன்னு கூப்பிட்டாங்க. அப்புறம் தான் நான் அவங்க ரூமுக்கு போனேன்.. கொஞ்ச நேரம் பேசிட்டிருந்தேன்.. அந்தப் பொண்ணு ஸீத்ரு நைட்டி போட்டிருந்துச்சு... அறைக்குள்ள போன உடனேயே கட்டிப் பிடிச்சு முத்தம் கொடுத்துச்சு.. அந்தப் பெண்ணோட அம்மா 'சிட்-அவுட்'டுக்கு போய்ட்டாங்க.. புதுசா நான் கமிட் ஆகற படத்துக்கெல்லாம் என்னையே றெகமண்ட் பண்ணுங்கன்னு கேட்டுச்சு... அந்த நேரத்துல என்ன சொல்ல? சரின்னு தலையாட்டி வெச்சேன்..."

"மிஸ்டர் நிவாஷ், நீங்க சொல்றதெல்லாம் சரிதான், பெரிய லாஜிக் ஒண்ணு உதைக்குது பாருங்க..."

"என்ன சார் சொல்றீங்க...?"

"அந்தப்பொண்ணுகிட்டே செக்ஸ் வெச்சுக்கிட்டேன்னு சொல்றீங்க.. அவங்க படுக்கை, பெட் ஸ்ப்ரெட் கொஞ்சம்கூட கலையலையே.."

"நைட் நான் வெளியேறின பிறகு ரூம் சர்வீஸைக் கூப்பிட்டு க்ளீன் பண்ணியிருக்கலாம் இல்லியா?"

"நோ சான்ஸ்... அதையும் கேட்டுப் பார்த்துட்டேன். கடத்திட்டுப் போறவனும் ரூமை க்ளீன் பண்ணிட்டா போவான்?"

இருவரும் அறையை விட்டு வெளியே வர-

ஹோட்டல் மானேஜரை கூப்பிட்டார்.

"என்ன சார்...?"

"இந்த ப்ளோர் ஹவுஸ் கீப்பிங் பையனைக் கூப்பிடுங்க... ரூம் சர்வீஸ், யாராவது மிட் நைட்ல அட்டெண்ட் பண்ணாங்களான்னு..."

மானேஜர், "ரவி.." என்று கூப்பிட, யூனிஃபார்மில் இருந்தவன் வந்தான்.

"அந்தம்மா ரூமுக்கு ராத்திரி ஏதாவது சப்ளை பண்ணீங்களா..?"

"இல்ல சார்... ராத்திரி எட்டரை மணிக்கு நான்-வெஜ் ஆர்டர் பண்ணாங்க.. எட்டே முக்காலுக்கு சப்ளை பண்ணினோம்... நாங்க சப்ளை பண்ண போனப்பா அவங்க ரூம்ல இல்லை.. டைரக்டர் ரூம்ல இருந்தாங்கன்னு தெரிஞ்சுச்சு... பீட்டர்தான் டைரக்டர் ரூமுக்குப் போய் அவங்ககிட்டே சொன்னான்... கீயை கொடுத்து 'உள்ள வெச்சுட்ட கீயை கொடுத்துடு'ன்னு சொன்னாங்க... நாங்க ரெண்டு பேரும் ரூமைத் திறந்து டீபாய் மேல ஐட்டங்களை வெச்சிட்டு உடனே திரும்பிட்டோம்.. பீட்டரே கொண்டு போய் கீயை டைரக்டர் ரூம்ல பேசிட்டிருந்தவங்ககிட்ட கொடுக்கப் போனான்... டைரக்டரோட அறை வாசல்ல அம்மாவும், பொண்ணுமா நின்னுட்டு இருந்தாங்க கொடுத்துட்டு வர்றேன்னு சொன்னான்."

ரவி சொல்லச் சொல்ல அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார் ராஜா.

அவன் பேச்சில் போலீஸிடம் பேசுகிறோம் என்ற பயரேகை தெரிந்ததே ஒழிய பொய் கலப்பில்லை என்பது தெரிந்தது.

**சுப்ரஜா**

"பீட்டர் எங்க..?"

"அவன் வீடு பக்கத்துலதான் சார்.. நைட் போயிட்டான்... திரும்ப மதியம்தான் வருவான்..."

"ரூம்ல இருந்து காலி ப்ளேட்டெல்லாம் எப்ப எடுத்தே...?"

"பத்து மணி இருக்கும். நானா போனப்ப ரூம் வாசல்ல எல்லா ப்ளேட்டையும் வச்சிருந்தாங்க... எடுத்துட்டு வந்துட்டேன்.."

ராஜா யோசித்திருந்த வேளையில் 'ஐயோ...'- என்ற அலறல் அந்த ஹோட்டலையே கிடுகிடுக்க வைத்தது.


அந்த ஹோட்டலின் மேல் ஃப்ளோரிலிருந்து அந்த சப்தம் வந்தது.

தொடர்ந்து வரும்

# வீட்டை தொட்ட திரை

**~வடிவேலு~**

"சினிமாவை கனவுத் தொழிற்சாலை என்று சொல்கிறார்கள். இல்லை அது கனவுக்கே எட்டாத தொழிற்சாலை காரணம் ஒரு கலெக்டராக வேண்டும் என்கிற கனவு கண்டால், அதற்கான ஊதியம், புகழ், பெருமை, வசதி எல்லாமே நம் கற்பனைக்குள் அடங்கிவிடும். அப்படித்தான் டாக்டராகட்டும், இன்ஜினியராகட்டும் மந்திரியாகட்டும். இவை எல்லாமே கனவின் எல்லை தெரிந்துவிடும்.



ஆனால், என்னைப் போன்ற ஒரு சாமான்யன், பாமரத்தனமான உருவ அமைப்புடன், முதலில் சினிமாவில் தலை காட்ட முடியுமா?

அது சாத்தியமா என்று பயந்து கொண்டிருந்தவன். நான் மட்டுமல்ல. யார் கனவு கண்டாலும் உணவு, உடை, கார், பங்களா என்று காஸ்ட்லியா கனவு கண்டால் கூட ஒரு லிமிட்டுக்குள் தெரிந்துவிடும். ஆனால், நிஜத்தில் எனக்கு கிடைத்திருப்பது, நான் கனவிலும் நினைக்காதது.

இந்த அதிசய மாற்றம் எப்படி நிகழ்ந்தது? மதுரை வீதியில் ஒரு கண்ணாடிக் கடையில் சாதாரண லேஸ் கட்டராக காலத்தை ஓட்டிக் கொண்டிருந்த என்னை இவ்வளவு உயரத்திற்கு கொண்டு வந்து நிறுத்தியவர் யார்? கோடம்பாக்கத்திற்கு கொண்டு வந்து நிறுத்த என்னிடம் என்ன தகுதி இருந்தது? என்று என்னுடைய பால்ய காலத்திலிருந்து நினைத்துப் பார்க்கிறேன்.

இப்பொழுதுதான் தெரிகிறது. இறைவன் இந்த நிலைக்கு வர அன்றைக்கே எனக்குத் தெரியாமலேயே சில தகுதிகளை தூவிவிட்டிருந்தான் என்று.

என் உருவ அமைப்பை வைத்தும், அறிமுகமான படத்தில் கிராமத்துக்காரனாக நடித்ததாலும், நான் ஏதோ ஒரு குக்கிராமத்தில் பிறந்து வளர்ந்தவனாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், எனக்கும் கிராமத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. பிறந்தது வளர்ந்தது எல்லாமே மதுரை நகரில்தான்.

எங்கள் குடும்பத்தில் என்னுடன் பிறந்தவர்கள் மொத்தம் ஏழுபேர். இவர்களில் நான் மட்டும்தான், கறுப்பு நிறத்தில் கோணங்கித்தனமாக, மற்றவர்கள் பரிகாசிக்கும் அளவுக்கு இருந்தேன். அதே மைனஸ்தான் இன்று எனக்கு ப்ளஸ்ஸாக அமைந்துவிட்டது.

சிறிய வயதில் இயல்பிலேயே எனக்கிருந்த சேஷ்டைகள் இன்றைக்கு இந்த நிலை அமைய காரணமாக அமைந்தது. நான் ஏழாங்கிளாஸ் வரைதான் படித்தேன். அதற்குள் அன்றைக்கு பாப்புலரான அனைத்துப் பாடல்களும் எனக்கு மனப்பாடம்.

வீட்டில் கொடுக்கிற காசுக்கு மற்ற மாணவர்களைப் போல் கம்மர்கட்டு மிட்டாயோ, கடலை உருண்டையோ வாங்கி சாப்பிட மாட்டேன். அந்த காசுக்கு பாட்டுப் புத்தகங்களை வாங்குவேன். ராகம் தெரியாமல் டி.எம்.எஸ்., சீர்காழி, பி.பி.ஸ்ரீனிவாஸ் போன்ற அனைத்துப் பாடகர்களின் குரலிலும் பாடுவேன்.

முறையான சங்கீதம் படிக்காமலேயே என்னுடைய பாடல்கள் வீட்டில் இருந்து, வீதி வரை பாப்புலரானது. பல ஆண்டுகளாக என் நண்பர்களுக்கும், என் வீட்டிற்கும் நான்தான் ரேடியோ பெட்டி அந்த அளவுக்கு என்னைப் பாடச் சொல்லி உற்சாகப் படுத்தினார்கள். அதோடு பெக்கூலியராக யார் என் கண்ணில் தென்பட்டாலும் உடனே அவர்களைப் போலவே, என் நண்பர்களிடத்தில் நடித்துக் காட்டிவிடுவேன்.

இப்படி நான், மற்றவர்களைப் போல் நடித்துக் காட்டி சிரிக்க வைப்பேன். இதையே நாடகமாக்கினால் மக்கள் ரசிப்பார்களே என்று சொல்ல, தெருவில் நாடகம் போட்டு அதில் நடித்தேன். பிறகு அதே நண்பர்கள் பேசாமல் மெட்ராசுக்கு போய் நடிகனாகி விடு என்றார்கள்.

நண்பர்களின் உசுப்பலினால், லாரி ஏறி சென்னை வந்து, சினிமா சான்ஸ் கேட்டு அலைந்தேன். இரண்டு வருடமாக முயற்சி செய்தும் வாய்ப்பு ஏதும் கிடைக்கவில்லை. திரும்பவும் மதுரைக்கே சென்று விட்டேன். என்னுடைய போராட்டத்தைப் பார்த்து, இதுவரை என்னை உற்சாகப் படுத்திக் கொண்டிருந்த என் நண்பன் முருகேசன், "முடியலைன்னா பேசாமே இங்கே இருக்கிற வேலையை பாரு. குடும்ப கஷ்டமாவது தீரும்" என்று அட்வைஸ் பண்ண ஆரம்பித்து விட்டார்.

அப்பொழுது மதுரையில் அர்ஜுன், நடித்த 'அண்ணனுக்கு ஜே' படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது. படப்பிடிப்பில் வெள்ளை சுப்பையாவும், கருப்பு சுப்பையாவும் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். டைரக்டர் கங்கை அமரன் அவர்களிடம் நடிக்க சான்ஸ் கேட்டேன். படம் முடியும் தருவாயில் இருந்ததால், இந்த படத்தில் வாய்ப்பு இல்லை என்று சொல்லிவிட்டார். பிறகு நான் பழையபடி கண்ணாடிக் கடையிலேயே வேலையை தொடர்ந்தேன். கொஞ்ச நாளைக்குப் பிறகு ராஜ்கிரன்சார் ஒரு ரசிகனின் திருமணத்திற்கு மதுரை வந்திருந்தார். அவர் வந்திருப்பதை கேள்விப்பட்டவுடன், மீண்டும் சினிமா சபலம் தலைதூக்கியது. உடனே அவர், தங்கியிருந்த இடத்தைத் தேடிப்பிடித்து ஓடினேன். அவரை சந்தித்து, ஐந்து விதமான கேரக்டரில் நான் ஒருவனே மோனோ ஆக்டிங் செய்து காண்பித்தேன். அவருக்கு பிடித்துவிட்டது. உடன் வந்திருந்த கிச்சாஸ் அவர்களும் நம்பிராஜ் அவர்களும் என்னைத் தட்டிக் கொடுத்தார்கள். கடிதம் போடுகிறேன் வா என்றார். ஒரு நல்ல நாளில் கடிதமும் வந்தது. மீண்டும் சென்னை வந்தேன்.

அவரின் ரெட்சன் ஆபீஸிலேயே திரு. தம்பி அவர்களும், திரு. வேலுச்சாமி அவர்களும் தங்க வைத்து, கூட பிறந்த சகோதரனைப் போல் பாவித்தார்கள். என்னுடைய கனவும் நிறை வேறியது ⊙

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 46

# எஸ்.டி.எஸ். கண்ட பாரதி

இந்த இடத்தில் நான் ஒரு விஷயத்தைக் தெளிவு படுத்த வேண்டும். மட்டக்களப்பில் எனக்குப் பெரிதும் ஏற்பட்டது ஓவியத் துறை ஈடுபாடுதான். நாடகத்துறை ஈடுபாடு திருகோணமலையில் அதற்கு முன்பே ஏற்பட்டு விட்டது. மதுரை நாடகக் கம்பனி திருகோணமலைக்கு வருவதற்கு முன்பு திரு.தம்பிமுத்து என்ற பெயர் உள்ள ஒருவர் அதே லக்ஷ்மி தியேட்டர் வளவில் பல அரிய நாடகங்களை நடத்தியிருக்கிறார். திரு. தம்பிமுத்து அவர்கள் தாமே நாடகம் எழுதி தாமே பழக்கி, தாமே இரண்டு கைகளாலும் 'புட்பெலோஸ்' உடைய ஹார்மோனியப்பெட்டியை வாசித்து மிக உயர்தரமான நாடகங்களை அரங்கேற்றியிருக்கிறார். அந்த நாடகங்களை பயிற்சி நிலையிலிருந்து அரங்கேற்றும் நிலைவரை அவதானித்தே நாடக டெக்னிக்குகளைக் கிரகித்துக் கொண்டேன்.

திரு.தம்முபித்து இந்தியா சென்று இசைக் கலையும், நாடகக்கலையும் பயின்று வந்த ஒருவராவார். அவரை அண்ணாவி தம்பி முத்து என்றே இரசிகர்கள் அன்புடன் அழைத்தனர்.

திரு.தம்பிமுத்து அவர்களைத் தொடர்ந்து திரு.இளையதம்பி ஆறுமுகம் என்பவர் சிறந்த நாடகாசிரியராக விளங்கினார்.

திரு.இளையதம்பி என்பவர் திருகோணமலையில் ஒரு பிரபல ஜோதிடராக இருந்தார். அவர் மகன் ஆறுமுகம் சங்கீத-ஹார்மோனிய விற்பன்னர்; நாடகாசிரியர். அதேவேளையில் நேவல் பேஸில் அவர் ஓர் உயர் உத்தியோகத்தராகவும் கடமையாற்றினார்.

(இவர் மகன்தான் இப்போது பிரதேச அபிவிருத்தி அமைச்சில் இந்து சமயப் பணியாளராகப் பணிபுரியும் திரு.ஆ.பாஸ்கரதாஸ்)

திரு. ஆறுமுகத்தைப்போலவே திரு. பொ.குணசேகரம் என்பவரும் சிறந்த நாடக நடிகராகவும், பயிற்றுனராகவும் விளங்கினார். இவர்களிடமும் நாடக நுணுக்கங்களை நான் கற்றிருந்தேன்.

'நான் கண்ட பாரதி' தொடரில் இவ்வளவும் சொல்லப்படுவது ஏன் என்று வாசகர்கள் எண்ணக்கூடும். இந்தப் பின்னணியில் தான், நாடகம் ஒன்றினைப் பாரதியார்கண்ட கண்ணோட்டமும், நான் கண்ட கண்ணோட்டமும் எங்கோ ஓர் இடத்தில் சங்கமமாகின்றன.

கோவில்பட்டி ஓவியர் சி. கொண்டையா ராஜுவிடம் நான் தெரிந்து கொள்ள வேண்டிய இரகசியம் ஒன்றிருந்தது.

ஓவியம் தீட்டுவதில் நான் ரீவ்ஸ், (Reeves) விண்ட்ஸர் அண்ட் நியூட்டன், (Windsor & Newtor) வாட்டர் கலர்களை அறிந்திருந்தேன். இந்த இரண்டும் இங்கிலாந்து கம்பனிகளாலும் தயாரிக்கப்பட்டன. எண்ணெய் வண்ணங்களையும் (Oil Paints) தெரிந்திருந்தேன்.

ஆனால் ஓவியர் கொண்டையா ராஜு உபயோகித்த வர்ணங்களும், பிரஷ்களும் வேறு விதமாக இருந்தன. அவை எந்த வகையைச் சேர்ந்தன, அவற்றிற்கு என்ன பெயர், எங்கு கிடைக்கும் என்பனவற்றை அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள ஆசைப்பட்டேன்.

ஆயினும், கேட்கவில்லை. ஏனென்றால், அப்படிக் கேட்கும் அளவிற்கு அவரிடம் பழக்கம், பரிச்சயம் போதவில்லை.



மதுரை ஒரிஜினல் ஸ்ரீ மீனலோசனி பாலர் நாடக சபா ஓர் ஊரில் முகாமிட்டால், அங்கு 'கலெக்ஷன்' குறைவுபடாதவரை, மூன்று நான்கு மாதங்கள் அதே ஊரில் முகாமிட்டிருப்பது வழக்கம். திருகோணமலை நாடகப் பிரியர்கள், சங்கீதப் பிரியர்கள் நிறைந்த ஓர் ஊராக அந்தக் காலத்தில் விளங்கியது. அதனால் அங்கு மீனலோசனி நாடகங்களுக்கு நல்ல ஆதரவு இருந்தது. இரண்டு தடவைகள் வந்த போதும், அவர்கள், ஒவ்வொரு தடவையும், மூன்று நான்கு மாதங்கள் முகாமிட்டிருந்தார்கள் என்றே நினைக்கிறேன்.

ஓவியர் கொண்டையா ராஜுவுடன் நெருங்கிப் பழகி, பேச்சுகள் பரிமாறி, இரண்டொரு வாரங்களுக்குப் பின்னர் ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

மீனலோசனி கம்பனியார் முதல் நாடகமாக 'வள்ளி திருமணம்' போட்டு விட்டு, இரண்டாவது நாடகமாக 'கோவலன்' நாடகத்தை அரங்கேற்றினார்கள்.

நான் முதல் நாளே, முதலாம் வகுப்பு டிக்கட் வாங்கி, 'கோவலன்' நாடகத்தைப் பார்த்து விட்டேன்.

மறுநாள் பிற்பகல் 3.00 மணிக்கு நேராக கல்லூரியிலிருந்து நாடகக் கொட்டகைக்குச் சென்றேன். அப்போது, அடுத்த நாடகமான 'ஸ்ரீ கிருஷ்ண லீலா' என்ற நாடகத்துக்கு திரு.சுப்பையா விளம்பரத் தட்டி தயாரித்துக் கொண்டிருந்தார்.

பூதனை என்ற அரக்கி தரையில் சுருட்டைத் தலையுடன் மலைபோல் சரிந்து கிடக்கிறாள். அவளுடைய இரண்டு பாரிய ஸ்தனங்களும் இரண்டு பாரிய குன்றுகள் போல குவிந்து நிற்கின்றன. பாலகிருஷ்ணன், அதாவது குழந்தை கிருஷ்ணன், நீல மேனியனாக, இடுப்பில் ஜட்டிகூட இல்லாமல் அந்த அரக்கியின் கடாரம் போன்ற வயிற்றில் உட்கார்ந்து கொண்டு, அவளுடைய ஒரு முலையில் வாய் வைத்துப் பால் குடித்துக் கொண்டிருக்கிறான். பூதனை மயங்கி விட்டாள். அவள் இரண்டு கண்களும் மேல் இமைகளுக்குள் சொருகி விட்டன. அவள் இறந்துதான் போய் விட்டாளோ என்று எண்ணும்படி தத்ரூபமாக அமைந்திருந்தது அந்தச் சித்திரம்.

திரு. சுப்பையா இந்த ஓவியத்தைத் தீட்டிக் கொண்டிருந்த அதேவேளையில், ஓவியர் கொண்டையா ராஜு இன்னும் ஒரு தட்டியில், ஹம்ஸன் வதத்துக்கு பென்ஸில் ஸ்கெச் போட்டுக் கொண்டிருந்தார்.

அந்த ஸ்கெச்சின்படி குழந்தையான கிருஷ்ணன், ஹம்ஸனுடைய மார்பின்மீது தாவிப் பாய்ந்து ஏறி, தன்னுடைய பிஞ்சுக் கரங்கள் இரண்டினாலும் ஹம்ஸனுடைய யானைக் கழுத்தை நெரித்துக் கொண்டிருந்தான். ஹம்ஸன் பிதுங்கிய கண்களோடு நிலை குலைந்து, பின்னால் சரிந்து, திணறித் தள்ளாடி நின்றான்.

இந்த இரண்டு உயிர் ஓவியங்களையும் நான் பார்த்து இரசித்து மெய்மறந்து நின்ற வேளையில், திரு.சுப்பையா என்னைப் பார்த்து, "இரவு 'கோவலன்' பார்த்தீர்களா?" என்று கேட்டார்.

"ஆம், பார்த்தேன்!" என்றேன்.

"எப்படியிருந்தது?" என்றார் அவர்.

அந்த வேளையில், மீனலோசனி கம்பனியின் நாடக ஆசிரியரான திரு.முத்தப்பா அந்த இடத்திதுக்கு வந்து சேர்ந்தார். முத்தப்பாவோடும் ஓரளவு முகப்பழக்கம் ஏற்பட்டிருந்த சமயம் தான் அது.

"கோவலன் ஆரம்பமே பல பிழைகளோடு தானே இருந்தது" என்று நான்



சொன்னேன்.

இப்படிச் சொல்வது, நாடகப் பழக்குநரான முத்தப்பாவுக்குக் குத்தலாக இருக்கும் என்று நான் எண்ணவேயில்லை. மாணவப் பருவமாகையால், விளைவுகளை எண்ணிப் பாராமல் சர்வ சாதாரணமாகச் சொல்லி விட்டேன்.

"என்ன பிழை?" என்று கேட்டார் முத்தப்பா. அவருடைய அந்தக் கேள்வியில் கொஞ்சம் அகம்பாவம் இருந்தது.

சுப்பையாவுக்கும், முத்தப்பாவுக்கும் உள்ளுக்குள்ளே இலேசான உராய்தல் இருந்தது என்பது எனக்கு அப்போது தெரியாது. பின்னர் தான் தெரிய வந்தது.

'கோவலன்' நாடகத்தில் பிழையிருந்தது என்று நான் சொன்னதும் என்னைக் கொஞ்சம் கிண்டி விட்டார் நண்பர் சுப்பையா.

என் பெயரைச் சொல்லி, "இவர் விஷயமில்லாமல் சொல்ல மாட்டார். நல்ல இரசிகர், நல்ல விமர்சகர் என்று என்னைக் கொப்பில் ஏற்றி வைத்தார் சுப்பையா. என்னைக் கொண்டு முத்தப்பாவுக்கு ஒரு 'டோஸ்' கொடுக்க வேண்டும் என்பது சுப்பையாவின் அந்தரங்கமாக இருந்திருக்கலாம்.

சுப்பையாவின் பக்க பலம் கிடைத்ததும், முத்தப்பாவை ஒரு மடக்கு மடக்கினால் என்ன என்று சிறு பிள்ளைத்தனமான உணர்ச்சி என்னுள் தலைதூக்கியது.

"சிலப்பதிகாரம் என்ற பழந்தமிழ் இலக்கியத்தைத் தழுவியதுதானே கோவலன் என்ற நாடகம்?"என்று நான் முத்தப்பாவிடம் கேட்டேன்.

"ஆமாம். அதில் என்ன சந்தேகம்?" என்றார் முத்தப்பா.

'அப்படி வாருங்கள். வகையாக மாட்டிக் கொண்டீர்கள், நாடக ஆசிரியரே!' என்று நான் மனதுக்குள் எண்ணிக் கொண்டேன். இந்த வார்த்தைகளை நான் வெளியே சொல்லவில்லை.

திருகோணமலை, செனட் ஜோஸப் கல்லூரியில் எங்களுக்குத் தமிழ் ஆசிரியராக இருந்தவர் திரு.முருகுப்பிள்ளை என்பவர். நிறைந்த தமிழ் அறிஞர் அவர். தமிழ் இலக்கியங்களை இரசித்துச் சுவைத்து மாணவர்களுக்கும் எடுத்துக் கூறுவதில் பேரார்வம் கொண்டவர்.

வகுப்புக்குரிய பாட விதானத்துக்கு வெளியே சென்று தமிழ் இலக்கியத்தின் சுவையான பகுதிகளை எடுத்துப் படிப்பிப்பார். அப்படியான ஒரு பெருந்தகையின் மாணாக்கர் ஆகும் பாக்கியமும் எனக்குக் கிடைத்திருந்ததால் சிலப்பதிகாரக் கதை மட்டுமன்றி, சிலப்பதிகார இலக்கியத்தின் மூலமும் ஓரளவு எனக்குத் தெரிந்திருந்தது. 'முருகுப்பிள்ளை மாஸ்டர்' சிலப்பதிகாரத்தை எங்களுக்குக் கற்றுத் தந்திருந்தார்.

'கோவலன்', 'கோவலன் சரித்திரம்', 'சங்கீத கோவலன்' என்றபெயர்களில் எல்லாம் மேடையேற்றப்பட்ட கதைக்கும், சிலப்பதிகாரம் சொல்லுகின்ற கதைக்கும் இடையே பல வேறுபாடுகள் இருந்தன.

கோவலன்-கண்ணகி திருமணம் காதல் திருமணம் அல்ல. பேசிச் செய்த திருமணம்தான். கண்ணகியின் தந்தை மாநாய்கன் செட்டியும், கோவலன் தந்தை மாசாத்துவான் செட்டியும் கலந்து பேசித் திருமணத்தை நிச்சயிருக்கிறார்கள்.

'கோவலன்' பெயரால் நடைபெற்று வந்த நாடகத்தில் கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் நடைபெறுகிறது. அந்த திருமண வைபவத்தில் கலந்து கொள்ளும் பொதுமக்களை மகிழ்விப்பதற்காக மாதவி என்ற ஒரு கணிகை மாது சதிர் ஆட அழைத்து வரப்படுகிறாள்.

சபைக்கு வந்த கணிகை மாதவி ஒரு நிபந்தனை விதிக்கிறாள். அவள் தன் கையிலே ஒரு மாலையை எடுத்துக் கொண்டு சொல்கிறாள்:

"நான் பிறக்கும் போதே இந்த மாலை என்னோடு கூடப்பிறந்தது. நான் நடனம் செய்யும் போது இம்மாலையை நான் சுழற்றி வீசுவேன். இது யார் கழுத்தில் விழுகிறதோ அவரே என் கணவராவார். நான் அவரைக் கணவராக வரித்து அழைத்துச் செல்வேன். இந்த நிபந்தனைக்குச் சபையோர் சம்மதித்தால்தான் நான் ஆடுவேன். சம்மதமா?"

சபையோர் சம்மதிக்கிறார்கள். கோவலன், மாநாய்கன், மாசாத்துவான் ஆகிய சகலரும் மாதவியின் நிபந்தனையை ஏற்றுக் கொள்ளுகிறார்கள்.

மாதவி ஆடுகிறாள். மாலையைச் சுழற்றி வீசுகிறாள். மாலை மணமகன் கோவலன் கழுத்திலேயே விழுந்து விடுகிறது. கோவலனைத் தன்னோடு வரும்படி மாதவி அழைக்கிறாள். அவன் மறுக்கிறான். வசிய மருந்திட்ட தாம் பூலத்தை மடித்துக் கொடுக்கிறான் மாதவி. அதை வாங்கி வாயில் போட்டுக் கொண்ட கோவலன், கட்டிய மனைவி கண்ணகியை மணவறையிலேயே விட்டுவிட்டு மாதவியின் பின்னே செல்கிறான்.

இப்படித்தான் கோவலன் நாடகங்கள் எல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன.

நான் ஏற்கனவே மட்டக்களப்பில் திரு.விநாயகமூர்த்தி அவர்கள் வீட்டில் கேட்ட கோவலன் நாடக 'கிரமபோன் றெக்கோட் செட்'டிலும் இதே கதைதான்!

கண்ணகியின் திருமண வீட்டிலே மாதவி மாலையைச் சுழற்றி வீசுகிறாள். அந்த மாலை கோவலன் கழுத்தில் போய் விழுந்து விடுகிறது. கோவலன் மாலையைக் கழற்றிக் கழற்றிப் பார்க்கிறான். கழற்ற முடியவில்லை.

உடனே, கோவலன் பாடுகிறான். கோவலனாக அந்த 'றெக்கோட் செட்'டில் பாடியவர் அந்தக் காலத்து நாடக மேடை புகழ் வி.எஸ்.சுப்பையா பாகவதர் என்று எண்ணுகிறேன்.

கழுத்தில் விழுந்தமாலை
கழற்ற முடியுதில்லை
காரிகையே இது
யார் சூதோ?'

இப்படி கோவலன் பாட அதற்கு உத்தரமாக-

'மாலைநான் எறிவேன்
வந்தது யார் கழுத்தில்
விழுந்ததே யானால்
நாலுபேறிய அழைத்
தேகுவேன் அவரையிந்
நாளி லென்று
சீலமா யுரைத்தேன்
சம்மதித்திருந்தீர்....'

என்று மாதவி பாடுவாள். பாடிவிட்டு-

"என்னுடனே வாரும் சாமியே" என்பாள் மாதவி.

**தொகுத்தளிப்பவர்**
**இரா.பத்மநாதன்**

"என்னை-எங்கு நீ அழைக்க வந்தாய் சொல்வாய் காமியே" என்பான் கோவலன்.

இப்படியேதான் 'றெக்கோட் செட்' நாடகமும் சென்று கொண்டிருந்தது.

ஏறக்குறைய இந்த நடைமுறையை அடியொற்றியே முதல் நாள் நான் பார்த்த மீனலோசனி நாடகக் கம்பனி நாடகமும் நடிக்கப்பட்டது.

நாடகப் பயிற்றுநர் முத்தப்பாவிடம் நான் சொன்னேன்:

"உங்கள் நாடகத்துக்கும், நாடகத்தின் மூலக் கதையான சிலப்பதிகாரக் கதைக்கும் எதுவித சம்பந்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. சிலப்பதிகாரக் கதைப்படி, கோவலன்-கண்ணகி திருமணம் எப்போதோ நடந்து விட்டது. அந்த திருமணச் சபைக்கு மாதவி வரவும் இல்லை, மாலை கழற்றவும் இல்லை. அது கோவலன் கழுத்தில் விழவும் இல்லை."

(இன்னும் வரும்)

# வாரம் ஒரு வார்த்தை!

**தென்கச்சி – கோ. சுவாமிநாதன்**

## 9. மூச்சும் குணமும்

ஒரு மனிதன் எப்படி மூச்சுவிடறான் அப்படிங்கறதவைச்சே அவனோட குணம் என்ன அப்படின்னு சொல்லிபுடலாமாம்!

நாம விடற மூச்சுக்கும் நம்ம குணத்துக்கும் சம்பந்தம் உண்டு.

நியூயார்க் யூனிவர்சிட்டியிலேயுள்ள மனோதத்துவ நிபுணர் ஒருத்தர் இப்படி சொல்றார். வெறுமனே சொல்லிபுடலே..!

160 பேரை சோதனை பண்ணி பார்த்துட்டு அதுக்கப்புறம் சொல்லியிருக்கார்.

ஒவ்வொருத்தரும் எப்படி மூச்சு விடறாங்க அப்படின்னு பார்த்துட்டு அவங்க



குணத்தையும் கவனிச்சிருக்கார். அவரு ஆராய்ச்சி பண்ணி என்ன கண்டு பிடிச்சாரு தெரியுமா?

மெதுவா-அதே சமயத்துலே ரொம்ப நீளமா மூச்சு இழுத்து விடறவங்க பலபேரு இருப்பாங்க. அவங்க குணம் எப்படி இருக்கும் தெரியுமா?

அவங்களுக்கு ரொம்ப மனோதிடம் உண்டு. உறுதியான எண்ணம் உண்டு. ரொம்பவும் தைரியசாலியா இருப்பாங்க!

அவங்களுக்கு புத்தி-உடம்பு இது ரெண்டுமே சுறுசுறுப்பா இருக்கும்!

தங்களையே கட்டுப்படுத்திக்கிறதுலேயும் இவங்க ரொம்ப கெட்டிக்காரங்க!

புதுசா எதையும் செஞ்சு பாக்கறதுலே ஆர்வம் உள்ளவங்க!

Adventurous type!

இவங்க இப்படி..

இன்னொரு ரகம் எப்படி தெரியுமா?

ரொம்பவும் மேம்போக்கா-அதே நேரத்துலே அவசரம்-அவசரமா மூச்சு இழுத்து விடறவங்க!

இவங்க குணம் எப்படி?

அது வேறே மாதிரியா இருக்கும்.

இவங்க... ரொம்பவும் பயந்தவங்க... வெட்கப்படறவங்க... கூச்ச சுபாவம் உண்டு... இவங்களுக்கு தன்னம்பிக்கை குறைச்சலா இருக்கும். எப்பவும் அடுத்தவங்களையே நம்பி இருப்பாங்க! இதையெல்லாம் சோதிச்சுப் பார்த்துட்டுதான் அந்த மனோதத்துவ நிபுணர் Personalityக்கும் Breathing Styleக்கும் சம்பந்தம் உண்டுன்னு முடிவு பண்ணினார்.

நம்ம பக்கத்துலே சில சாமியார்கள் உயிரோட பூமிக்கு அடியிலே இருந்துட்டு கொஞ்ச நாள் கழிச்சி வெளியிலே வருவாங்க.. கேள்விப்பட்டிருப்பீங்க.

பம்பாயிலே ஒரு சுவாமிஜி.

பூமியிலே ஒரு குழிவெட்டி உள்ளே போயிட்டாரு... புதைச்சுட்டாங்க.

அப்புறம் என்ன.. தண்ணி.. ஆகாரம் ரெண்டும் கிடையாது! ஆறுநாள் பூமிக்குள்ளே இருந்துட்டு அதுக்கப்புறம் வெளியே வந்துட்டாரு! பலபேரு இதை நேரிலே பார்த்தாங்க! இது மந்திரமா? தந்திரமா?

இதுக்கு விஞ்ஞான பூர்வமான விளக்கம் என்ன?

இதை சில விஞ்ஞானிகள் சோதனை பண்ணி பார்த்திருக்காங்க. பம்பாயிலே R.J.Vakilங்கற ஆராய்ச்சியாளர் இதைப் பத்தி சில பரிசோதனைகள் பண்ணிப் பார்த்தார்! டெல்லியிலேகூட இதைப்பத்தி ஓர் ஆராய்ச்சி நடந்தது! ஆராய்ச்சி பண்ணினவர் B.K.Anand Ramanand Yogi அப்படின்னு ஒரு சுவாமிஜி. சொந்த ஊரு ஆந்திரா.

அவரை வச்சி இந்த ஆராய்ச்சி நடந்தது!

டெல்லியிலே-

All India Institute of Medical Sciences அப்படின்னு ஒண்ணு இருக்கு.

அங்கேதான் இது நடந்தது.

அந்த யோகியை என்ன பண்ணினாங்க தெரியுமா?

ஒரு பெட்டியிலே வச்சி அடைச்சி பூமிக்கு அடியிலே புதைச்சி வச்சுட்டாங்க!

பத்து மணி நேரம் அவரு தொடர்ந்து உள்ளேயே இருந்தாரு!

அப்ப அவரு உடம்புலே ஏற்படற மாறுதலை எல்லாம் வெளியிலே இருந்தே கருவிகள் மூலமா கணக்கெடுத்தாங்க!

அதையெல்லாம் வச்சிப் பாத்ததுக்கு அப்புறம்தான் புரிஞ்சுது! இது மந்திரமும் இல்லே! தந்திரமும் இல்லே. மனித எந்திரம்தான் இதுக்குக் காரணம்ன்னு

அதாவது-

நம்ம உடம்பு இருக்கே! அது சூழ்நிலைக்குத் தகுந்த மாதிரி தன்னை மாத்திக்குமாம். திடீர்ன்னு இருட்டுக்குள்ளே போனா கொஞ்ச நேரத்துலே கண்ணுக்கு பாக்கற சக்தி லேசா வந்துடுல்லே., அது மாதிரி!

(வார்த்தைகள் தொடரும்)

# "நான் கொலைகாரனா?"

சித்திரை மாத வெயில் ஊரையே நித்திரையில் ஆழ்த்தியது. வெயிலின் உக்கிரத்தால், சுற்றித்திரியும் நாய்கள் மரநிழலில் சுருண்டுகிடந்தன. இரை தேடிப்பறக்கும் காகங்கள் மரக்கிளைகளில் ஒதுங்கின.

மனித நடமாட்டமே இன்றி வீதி வெறிச்சோடிக்கிடந்தது.

வீட்டின் முன் அறையில் பேத்தி கயல்விழியுடன் விளையாடிக் கொண்டிருந்தேன். மேலே மின் விசிறி வேகமாகச் சுழன்றது.

முன் வாசலில் நிழலாடியது; எட்டிப் பார்த்தேன். நெற்றியில் விபூதி, சந்தனப் பொட்டுடன் சைவப்பழமாக பெரியவர் ஒருவர் நின்றார்.

"உள்ளே வாருங்கள்!" என அழைத்தேன். என் வயதொத்தவராக இருந்தார்.

இருக்கையைக் காட்டினேன்; அமர்ந்தார். அவர் மிகவும் களைப்புற்றவராகக் காணப்பட்டார்.

"ஏதாவது சாப்பிடுகிறீர்களா?" என்றேன்.

"வேண்டாம்; ஏதாவது குடிக்கத் தாருங்கள்!" என்றார்.

கயல்விழியை என் மகளிடம் அனுப்பிவிட்டு, மோர் கொண்டு வந்து கொடுத்தேன்; அருந்தினார்.

"இன்னும் வேண்டுமா?" என்று கேட்டேன்.

"போதும்; சற்று களைப்பு குறைந்த மாதிரியாக இருக்கு!" என்றார் அவர்.

சற்று நேரம் மௌனமாகவே சென்றது. மெதுவாக அவரைப்பற்றி விசாரித்தேன்.

"இன்றுதான் சிறைச்சாலையிலிருந்து விடுதலையாகி வருகிறேன்!" என்று அவர் கூறியதும், நான் வியப்பிலாழ்ந்தேன்.

சில சந்தர்ப்பங்கள் நல்ல மனிதர்களையும் குற்றவாளிகளாகக் கணிப்பது உண்டல்லவா? அது போல், கள்ளங் கடபடம் அறியாத இவரையும் குற்றவாளியாக்கி இருக்குமோ? என்னும் எண்ணம் என்னுள் எழுந்தது.

"மிக நல்லவராகத் தெரியும் தாங்கள். எப்படி இந்நிலைக்கு ஆளானீர்கள்?" என வினவினேன்.

"ஆம், நான் உண்மையிலேயே குற்றவாளிதான். நான் கொண்டிருந்த இலட்சியத்திற்கு மாறாக, திருமண வாழ்க்கையில் ஈடுபட்டதால், குற்றவாளி என்பதை ஏற்றுக் கொள்கிறேன். சிறு வயது முதலே என் மனதில் உருவாகி இருந்த பிரமச்சரியத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்திருந்தால், இந்த சிறை வாழ்வு எனக்கு வந்திருக்குமா?" மனவேதனையுடன் வார்த்தைகளை வெளிப்படுத்தினார்.

"அப்படியானால், சந்தர்ப்பமும், சூழ்நிலையும் தங்களை இந்நிலைக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும்!" நான் சொன்னேன்.

"சந்தர்ப்பம், சூழ்நிலை, விதி என்றெல்லாம் நான் சொல்லப் போவதில்லை.



என்னுள் எழுந்த ஓர் ஆவேச உணர்ச்சி என்றே கூறவேண்டும். உங்களுக்குச் சம்மதம் என்றால், அந்தச் சம்பவத்தைக் கூறுகிறேன். நான் கொலைகாரனா? என்று நீங்கள் கூறுங்கள்." என உணர்ச்சிததும்பக் கூறினார்.

என் சம்மதத்துடன் கூற ஆரம்பித்தார்.

"வெளிமடையில் நான் வியாபாரம் செய்து கொண்டிருந்தேன். என் பெயர் கந்தவேள். எனது தம்பி சிவபாலன் படிப்பு முடிந்தபின் எனக்கு உதவியாக இருந்தான். வியாபாரம் நல்ல முறையில் நடந்தது. சொந்தமாக வீடு ஒன்றை வாங்கினேன். இந்நிலையில் எனது உறவினர்கள் எனக்கு திருமணம் பேசினர்.

எனக்கு அறிவு, அனுபவம் ஏற்பட்ட வயதிலிருந்து, இராமகிருஷ்ணர், விவேகானந்தர், மகாத்மா காந்தி போன்ற மகான்களின் போதனைகளைப் பின்பற்றி வந்ததால், இல்லற வாழ்க்கையில் எவ்வித நாட்டமும் இல்லாதிருந்தது.

உறவினர்களின் வற்புறுத்தலும், தம்பியின் விடாத வேண்டுகோளும் என்னை திருமணத்திற்குச் சம்மதிக்க வைத்தது. மனைவியின் பெயரோ மங்களம். எல்லாவகையிலும் மங்களமாகவே இருந்தாள். இல் வாழ்க்கையில் என் மனநிலையை மாற்றிய மைத்தவளும் அவள்தான். பூவுக்குள் பூநாகம் இருப்பதை அப்போது நான் அறிய வில்லை.

திருமணமாகி நான்கு ஆண்டுகளாகியும் பிள்ளைச் செல்வம் இல்லாதபடியால், தம்பி சிவபாலனையே பிள்ளையாக ஏற்றுக் கொண்டேன். இதில் என் மனைவிக்கு விருப்பமில்லாமல் இருந்தது.

அன்று வங்கிக்குப் பணம் போட வேண்டியிருந்ததால், அவசரமாகக் கடைக்குச் சென்றேன். அங்கு சென்றதும், பணத்தை வீட்டிலே வைத்து விட்டு வந்ததை உணர்ந்து, வீட்டிற்கு விரைந்தேன்.

என் வாழ்க்கையில் ஒரு புதிய அனுபவம் ஏற்படப்போவதை நான் அறிய வில்லை. நானென்ன முற்றுந்துறந்த முனிவனா? முற்றும் துறந்த முனிவர்களால் கூட பல சம்பவங்களை அறிய முடிய வில்லை என புராணங்களில் படித்திருக்கிறேன். நான் சமான்யன், என்னால் முடியுமா?

**பதுளை - அ. தங்கராசன்**

வீட்டிற்குள் நுழைந்தேன்; தம்பியின் அறையிலிருந்து, தம்பியும், என் மனைவியும் பேசுவது கேட்டது.

"அண்ணி, உங்கள் மீது நான் வைத்திருக்கும் மதிப்பும், மரியாதையும் நீங்கள் நன்றாக அறிவீர்கள். தாய்மை ஸ்தானத்தில் உள்ள தாங்கள், இத்தகைய கீழ்த்தரமான எண்ணங்களோடு பழகுவீர்களென நான் நினைக்கவே இல்லை. அவற்றையெல்லாம் புதைத்து விட்டு, தாயன்பை என் மீது செலுத்துங்கள். உத்தம கணவனுக்கு துரோகமிழைப்பது மிகப் பெரிய பாவம் என்று உணருங்கள்." இது தம்பியின் ஆவேசக் குரல்.

"உன் வயதுக்கு ஏன் வேதாந்தம் பேசுகிறாய்? உலகில் நடந்தவைகள்-நடப்பவைகள் தானே? பாஞ்சவருக்குப் பத்தினியாக பாஞ்சாலி இருக்கவில்லையா?" இது மங்களத்தின் குரல்.

"அண்ணி! அக்கதை துவாபரயுகத்தில் நடந்தது. இது கலியுகம். தாங்கள் பாஞ்சாலியாக வேண்டாம். கண்ணகியாக இருக்க வேண்டுமென்பதே எனது ஆசை. சகோதரனாகவும், பெறா மகனாகவும் என்னை வளர்க்கும் அண்ணாவுக்கு நான் என்றுமே துரோகமிழைக்கமாட்டேன்!" இது தம்பியின் உறுதியான குரல்.

என் மனதில் எரிமலை கொந்தளித்தது. என்னுள் எழுந்த ஆவேசத்தால் உள்ளே சென்று, "அடித்துரோகி!" என அவளைத் தள்ளினேன். நான் தள்ளிய வேகத்தில் அவளது தலை சுவற்றில் பலமாக அடிபட்டு இரத்தம் பீறிட்டது. ஆசுபத்திரிக்குக் கொண்டு போனோம்; அவள் உயிர் பிரிந்தது. பிறகென்ன?

வழக்கு நடந்தது; விசாரணையில் நடந்தவற்றை எல்லாம் சொன்னேன். தம்பியும் பணத்தைச் செலவளித்தான். எனது சட்டத்தரணியின் வாதத்தால், பத்தாண்டுகள் சிறைத் தண்டனை எனத்தீர்ப்பு வழங்கப்பட்டது. நன்னடத்தையால் தண்டனை குறைக்கப்பட்டு, இன்று விடுதலை கிடைத்தது. இப்போது நீங்கள் கூறுங்கள், நான் கொலைகாரனா?" எனக் கேள்வியோடு முடித்தார்.

நான் சற்று யோசித்து விட்டு, "சம்பவக் கோர்வைகளை ஆராய்ந்து பார்த்தால், நீங்கள் கொலைகாரர் அல்ல!" என்று கூறியவுடன், "மிக்க நன்றி! நான் வருகிறேன்" என விடைபெற்றுச் சென்றார்.

கம்பீரமாக அவர் நடந்து செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த என்னை, "தாத்தா!" என பேத்தி கயல்விழி அழைத்த குரல் கேட்டு வீட்டினுள் சென்றேன். ●

# யோகேஸ்வரன்

அப்துல்லா பின்தாளி வீதி அல் ஜெஸீரா லைபிரரியில் தினமுரசு வாங்கிக் கொண்டு திரும்பினேன். இலங்கையில் வியாழன் வெளியாகும் முரசு, 'ஐந்து நாட்களுக்குப் பின் கைகளுக்கு எட்டினாலும் காலம் தாழ்த்தினாலும் காத்திரமாய் வருகிறதே' என்று மனசுக்குள் பாராட்டிக் கொண்டே நடந்து கொண்டிருந்த என்னை, "அண்ணன்... அண்ணன்..." என்ற அழகிய தமிழில் ஒரு குரல் அழைக்கத் திரும்பினேன். அங்கே என் பார்வைக்குள், வாரப்படாத தலை, மழிக்கப்படாத தாடி அழுக்கான உடையோடு ஓர் இளைஞன் தென்பட்டான். சொல்லாமலே இலங்கைத் தமிழ் என்பதை புரிந்து கொண்டு 'என்ன?' என்பதுபோல் என் பார்வையால் வினாவினேன். அருகில் வந்தவன் "அண்ணன் என்பேர் சிவராஜ். இங்கே வேலைக்கு வாறதற்காக ஒரு ஏஜன்ஸிகாரனிடம் பணம்கொடுத்து ஏற்பாடு செய்திருந்தேன். நல்ல வேலை பிடிச்சுத் தாரன் என்று சொல்லி நிறைய பணத்தை வாங்கிக் கொண்டு என்னை இங்கே அனுப்பி வச்சான். அவன் பேச்சை நம்பி இங்கே வந்து இறங்கிய போதுதான் அவன் என்னை நல்லா ஏமாற்றி விட்டான் என்பது புரிந்தது.

ஒரு பில்டிங் கண்ட்ராக்டரிடம் இங்கே என்னை விட்டு விட்டார்கள். அங்கே கல்லும், மண்ணும், மணலும் சுமக்க வேண்டிய வேலை. எனக்கு பழக்கமே இல்லாத வேலை. சம்பளமும் முன்னூறு ரியால் தானாம். சாப்பாடு இல்லை. தங்குவதற்கு இடம் கொடுத்திருக்கிறார்கள். அதுவும் ஒரு அறையிலே பத்து பேருக்கு மேல் தங்க வேண்டிய நிலை. என்னால் தொடர்ந்தும் வேலை செய்ய முடியாது. அதனால் நான் நாட்டுக்கே திரும்பி போக இருக்கிறேன். இப்போ கையிலே ஒரு அறுநூற்றி அறுபது ரூபா இருக்கிறது. இன்னும் கொஞ்சம் பணம் கிடைத்தால் டிக்கற் எடுத்துக் கொண்டு போய் விடுவேன். எப்படியாவது கொஞ்சம் உதவி செய்வீங்களா?" முழுக்கதையையும் சுருக்கமாக்கி சொல்லி முடித்தவனைப் பார்க்க எனக்கு பாவமாக இருந்தது.

"இந்தப் பாழாய் போன ஏஜன்ஸிகாரர்கள் ஏன் தான் இப்படி அநியாயம் செய்கிறார்களோ தெரியாது. அவனவன் வாயை கட்டி வயிற்றைக் கட்டி சிறுகச் சிறுகச் சேமித்து வாழ்க்கையில் முன்னுக்கு வர முயற்சிக்கும் முயற்சியினாலேயே பள்ளத்தில போட்டுவிடும் பாதகம் செய்வதற்கு எப்படித்தான் மனசுவருமோ." என்று ஏஜன்ஸிகாரனைத் திட்ட வேண்டும் போல் இருந்தது, நான் இங்கிருந்து திட்டி னால் அவன் அங்கிருந்து திருந்தி விடவா போகிறான்' என எண்ணிக்கொள்கிறேன். ஏற்கனவே ஓர் ஏஜென்ஸிகாரனிடம் அடிபட்ட வலி மறுபடியும் என்னுள் மெல்ல எட்டிப்பார்க்கிறது. செய்த தொழிலையும் விட்டு விட்டு, பணத்தையும் கொடுத்து விட்டு நாயாய் அவன் பின்னால் அலைந்த அந்த நாட்கள்... ஆஹா... என் எதிரிக்கும் கூட அந்த நிலமை வரக்கூடாது.

"தம்பி இப்போ என்னிடம் கையில் பணம் இல்லை. நீ நாளைக்கு இந்த விலா

> அந்நிய தேசத்தில் வந்து இப்படிப்பட்ட சிக்கல்களில் மாட்டிக் கொள்ளும் நம்மவர்களுக்கு நாமே நம்மால் இயன்ற அளவு உதவி செய்வது மனிதாபிமானம். இதேபோல் ஒரு சந்தர்ப்பம் நாளை நமக்கும் வரலாம். இன்று நாம் கொடுத்து உதவினால் நாளை நமக்கு யாராவது உதவலாம்.

சத்தில் என்னை வந்து சந்தித்தால், என்னோடு தொழில் செய்யும் நண்பர்களிடமும் கொஞ்சம் உதவி கேட்டு என்னால் முயன்றதைச் செய்கிறேன்" என என் விலாசத்தைக் கொடுத்தேன். வாங்கிக் கொண்டவன் நன்றியோடு "சரிங்க அண்ணன்!" என்றான். அவனின் பரிதாப நிலை என் மனதிற்குள் வேதனையாக இருந்தது. அருகில் இருந்த தேனீர் கடைக்குக் கூட்டிச் சென்று சாப்பிட வாங்கிக் கொடுத்து விட்டு, "நாட்டிலே என்ன செய்து கொண்டிருந்தாய்?"

"ஊரிலே ஒரு புடவைக் கடையிலே வேலை செய்து கொண்டிருந்தன். சம்பளம் போதாது. அதுதான் வெளிநாடு போவோமென்று..."

"ஓ.. நீயும் புடவைக்கடைதானா! புடவைக் கடையிலே என்னத்தை பெரிய தாய் சம்பளத்தை கொடுத்திடப் போறாங்கள். ஒரு நல்ல ஏஜன்ஸியா பார்த்து வந்திருக்கக் கூடாதா?"

"எப்படிங்கண்ணே நல்ல ஏஜன்ஸிங்கிறது கண்டு பிடிக்கிறது. பார்த்தா ரொம்ப பெரிய ஏஜென்ஸியா இருந்தது. போதாததற்கு "அரசாங்க அனுமதி பெற்றவர்கள்" என்று போர்டு வேறு போட்டிருந்தாங்க. அப்படி இருந்தும் பலபேருகிட்ட விசாரித்து விட்டுத்தான் திருப்தியாக இருக்கவும் பணத்தைக் கட்டினேன். ஏமாத்திட்டானுங்க!". என்று மன ஆதங்கத்தை வெளிக் காட்டினான்.

"சரி நீ காப்புறுதி செய்திருக்கிறாயா?"

"அந்த ஏஜன்ஸிகாரன் வாங்கின பணத்திற்கு அது ஒன்று மட்டும் தான் ஒழுங்காய் செய்து தந்திருக்கான்."

"அப்படியா நல்லதாய் போச்சு. நீ போய் முறையிட்டால், உனக்கு டிக்கற் பணமாவது கிடைக்கும்!" என் வாார்த்தைகளில் முகம் மலர்ந்தவனுக்கு மேலதிக



**கட்டாரிலிருந்து மெய்யன் நட்ராஜ்**

தகவல்களைக் கொடுத்து விட்டு, நடையை கட்டினேன். மறுநாள் என்னைத் தேடி வந்திருந்தான். அவன் வருவதற்குள், நான் என்னோடு தொழில் செய்யும் சக நண்பர்களுடன் அவனுடைய பரிதாப நிலையை கூறி வைத்திருந்தேன். எனவே அவனைக் கூட்டிச் சென்று ஏனைய நண்பர்கள் மூலம் கொஞ்சம் பணம் சேகரித்து, நானும் என் பங்கிற்கு கொஞ்சம் பணம் போட்டு ஒரு இருநூறு ரியாலுக்கு மேல் கையில் கொடுத்தேன். அவன் நாடு திரும்புவதற்கு டிக்கற் எடுப்பதானால் இன்னும் ஒரு நூறு ரியால் கிடைத்தால் போதும் என்ற நிலமையில் இருந்ததால், அதை வேறு யாரிடமும் இப்படி எம்மிடம் கேட்பது போல் பிறரிடமும் கேட்டால் கிடைக்கும் என நம்பிக்கையூட்டி அனுப்பிவைத்தேன். அவனும் நன்றியோடு சென்றான்.

"அந்நிய தேசத்தில் வந்து இப்படிப் பட்ட சிக்கல்களில் மாட்டிக் கொள்ளும் நம்மவர்களுக்கு நாமே நம்மால் இயன்ற அளவு உதவி செய்வது மனிதாபிமானம். இதேபோல் ஒரு சந்தர்ப்பம் நாளை நமக்கும் வரலாம். இன்று நாம் கொடுத்து உதவினால் நாளை நமக்கு யாராவது உதவலாம்!" என்று அந்தனி, விஜய சூர்யா, ஜெயரட்ன, மஹிப்பால, ஜெயராஜ், சில்வெஸ்டர் என்று எல்லா நண்பர்களுமே ஒரே நேரத்தில் தங்கள் கைகளில் இருந்த பணத்தை கொடுத்து உதவியபோது, எனக்கு மிகவும் மகிழ்ச்சியாகவே இருந்தது. ஓர் அந்நிய தேசத்தில் நம்மவர் ஒருவன் என்றதும் இனம், மொழி, மதம் பாராமல் 'இலங்கையன்' என்ற ஒரே கண்ணோட்டத்தில் பழகும் ஒற்றுமை, நமது நாட்டுக்குள் நுழைந்ததும் காணாமல் போவதை எண்ணினால் மனதுக்கு வேதனையாகவும் இருக்கும். வேதனைகளுக்கு விதைபோட்டவர்கள் அதை அறுவடை செய்யாமலேயே போய்விட்டதால், நிமிர்த்த முடியாத நாய்வாலாய் போன பிரச்சனைகளை எண்ணி மனங்குமிறுவதைத்தவிர என்னதான் செய்யமுடியும்.

இன்று வெள்ளிக்கிழமை எனது விடுமுறை நாள் என்பதால் தோஹாவிலிருந்து சற்று தொலைவிலிருக்கும் ஒரு சிறிய நகரத்தில் இருக்கும் என் நண்பன் ஒருவனைக் காணச் சென்றிருந்தேன். அவனோடு அவனுடைய நண்பர்கள் சிலரும் அங்கு வந்திருந்தார்கள். அவர்களோடு சம்பாஷித்துக் கொண்டிருந்தேன். அங்கே திடீரென்று வந்த ஒருவர் ஒரு லிஸ்டைக் கொடுத்தார். எல்லோரும் வாங்கிப் படித்து விட்டு கையில் இருந்த கொஞ்சப் பணத்தை கொடுத்தார்கள். நானும் இவர்கள் எதற்காகப் பணம் கொடுக்கிறார்கள் என்பதனை அறிவதற்காய் லிஸ்டை வாங்கிப் படித்தேன்.

"என் பெயர் யோகேஸ்வரன். இலங்கையைச் சேர்ந்தவன். நான் இங்கு ஒரு கட்டிடம் கட்டும் இடத்தில் வேலை செய்தவன். வேலையில் இருக்கும் போது காலில் சீமெந்து மூடை விழுந்து கால் உடைந்து விட்டது. தற்போது என்காலில் பெண்டேஜ் இடப்பட்டுள்ளதால், என்னால் தொழிலுக்கு போக முடியாத நிலை. அதனால் நான் நாடு திரும்ப வேண்டும். எனவே தங்களால் ஆன உதவியை செய்து தருமாறு பணியுடன் கேட்டுக் கொள்கிறேன்." வாசித்து விட்டு, "எங்கே ஆள்?" என்றேன். "ஆளுக்கு மேலே நடந்து வரமுடியாது. பாவம் கீழ் தளத்தில்தான் இருக்கிறார். உங்களால் முடிந்தால் ஏதாவது..." என்று கேட்ட ஒருவரிடம் ஓர் ஐந்து ரியால் கொடுத்தேன். நேரத்தைப் பார்த்தேன். மாலை ஆறு மணியை நெருங்கிக் கொண்டிருக்கவே, "நான் புறப்படுகிறேன்!" என்று நண்பனிடம் கூறிவிட்டு மேல் மாடியிலிருந்து படிகளில் இறங்கி வந்தேன். அதற்குள் கால் உடைந்த நபருக்காக பணம் திரட்டியவர் என்னை முந்திக் கொண்டு பணத்தோடு நடந்து கொண்டிருந்தார். அவர் சேகரித்த பணத்தை எண்ணி கொண்டே நடந்த போது, அவரைப்பார்த்துக் கொண்டே நடந்த நானும் கீழ் தளத்தை அடைந்தது எனக்கே தெரியவில்லை.

அந்த நபர் அந்த நொண்டியிடம், "அதோ தம்பி இதிலே நூறுரியாலுக்குமேலே இருக்கு. மிகுதியை வேறு இடத்திலே பார்த்துக் கொள்!" என்றதும் "சரிங்கண்ணே!" என்றான். அப்போதுதான் அவன் முகத்தைப் பார்க்கிறேன். அவன்... அவன்... அன்று நான் பணம் சேகரித்துக் கொடுத்த அதே ஆள். அப்படியானால்... நான் யோசிக்க முதல் என்னை அடையாளம் கண்டு கொண்டவனாய், அங்கிருந்து ஓட்டம் பிடித்தான். நொண்டியாக வந்து ஓட்டம் பிடித்தவனைப் பார்த்து வியந்து நின்றார் அங்கு பணம் சேகரித்துக் கொடுத்தவர். அவரிடம் இந்த நாட்டில் வந்து இப்படி 'தில்லு முல்லு' செய்து பிழைக்கும் போக்கு அவனுக்கு இருப்பதால்தான் அவன் யோகேஸ்வரன் என்பதைச் சொல்லிவிட்டு நடந்தேன்! ●

# குரூரமான ஊடல்

இலக்கிய நயம்

"என்னை மன்னிச்சுக் கொள்ளடா. இன்றைக்கென்று வேலை அதிகம். உடன விட்டிட்டு வர முடியவில்லை..." மூச்சு வாங்கியபடியே பேசினாள்.

அவனருகே கைப்பையை வைத்துவிட்டு, இரு பாதங்களையும் ஒரு புறத்துக்கே மடித்து ஒரு கையைத் தரையில் ஊன்றியபடி சாய்வாக அமர்ந்தாள். அவனை ஏறிட்டாள்.

அவன் முகத்தில் உணர்ச்சி எதுவுமில்லை. கடலையே பார்த்தபடி இருந்தான். கோபத்திலிருக்கின்றான் என்று புரிந்து கொண்டாள்.

"என் ராஜாவுக்குக் கோவமாக்கும்... நான் என்னடா செய்யட்டும். உன்னை மாதிரி நினைச்சவுடன் வெளிக்கிட்டு வரக் கூடிய வேலையா எனக்கு?"

"நான் மட்டும் வேலையை விட்டிட்டு மணிக்கணக்காய் வந்து கடலைப் பார்த்துக் கொண்டு இருக்கலாமாக்கும்...."

அவன் வார்த்தைகளின் உஷ்ணம் அவளைத் தாக்கியது. வெகு ஆவலோடு வந்திருந்த அவள் முகம் திடீரெனக் குதூகலத்தை விட்டொழித்தது.

"அந்தக் கிழத்தைச் சமாளிச்சிட்டு வாறதுக்குள்ள போதும் போதும் என்றாயிடுது.... என்னைப் புரிஞ்சு கொள்ள வேண்டாமா?" அவள் தனக்குள்ளாக முணுமுணுத்தாள். அவன் பேசாதிருந்தான்.

"உனக்காகத்தானே... எத்தனை பொய்களைச் சொல்லி ஓடி வந்திருக்கிறேன்.... முகத்தைத் திருப்பிக் கொண்டு இப்படி என்னைச் சோதிக்க வேணுமா?"

"நான் மட்டும் வேறு யாருக்காகவோ வந்து இத்தனை நேரம் காத்துக் கொண்டிருந்தேனாக்கும்...."

"உன்வேஸ்ல்...." சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டாள். அது அவனை மேலும் கோபப்படுத்தும் என்று உணர்ந்தாள். மெதுவாக அவனருகே நகர்ந்தாள். அவன் கையை மெல்ல எடுத்து தன் முகத்தை நோக்கி உயர்த்தி, அந்தக் கை விரல்களில் மென்மையாக முத்தமிட்டாள்.

அவன் கையை இழுத்துக் கொண்டான். அவள் மேலும் நெருங்கி வந்து அவன் தோளில் தலைசாய்த்தாள்.

"என் ராஜகுமாரன் கோபப்பட்டால் கொள்ளை கம்பீரம்..." என்று அவன் காதுக்குள் கிசுகிசுத்தாள்.

அவனுக்கு எரிச்சலாக இருந்தது. பேயன் பித்தனைப் போல ஒருவன் காத்துக் கொண்டிருப்பானே என்பதெல்லாம் இவளுக்கு ஒரு பொருட்டில்லை. எப்ப வேண்டுமானாலும் வந்து கொஞ்சிப் பேசிவிட்டால் இவன் பல்லை இளித்துக் கொண்டு குழைவான் என்ற அலட்சியம்!



தோளில் சாய்ந்து கன்னத்தில் உரசி சிணுங்கலாய்ப் பேசிவிட்டால் நாம் வாலைக் குழைத்துக் கொண்டு, அவள் வட்டத்துக்குள் அவளிஷ்டப்படி ஆட வந்துவிடுவோம் என்கிற திமிர். அதனால்தான் எவ்வளவு நேரமும் காத்திருக்க வைத்துச் சமாளித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறாள். அவள் வந்தவுடன் அவளுடைய சந்தோஷத்திற்கு வேண்டிய எல்லா சில்மிஷங்களையும் ஆரம்பித்துவிட வேண்டுமாம்.

அவன் முகத்தையும் உடலையும் இறுக்கிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

"எனக்குக் கிஸ் வேணும்...." என்றாள் சிணுங்கலாக.

ம்... ஆணையிடுகிறாள். எல்லாம் அவளுடைய விதிகளின் படிதான். அவள் எப்போது வருகிறாள் என்று காத்திருந்து, நாம் அவளைச் சந்தோஷப் படுத்தத் தயாராயிருக்க வேண்டும். அவளுடைய நேரத்துக்குள், அவளுக்குத் தேவையானபடியெல்லாம் நாம் நடந்துகொள்ள வேண்டும். அதன்பிறகு, நமக்கு அருள் கடாட்சம் வழங்க வந்த தெய்வம் போல அவளது நேரம் முடிந்ததும் எழுந்து பறந்து விடுவாள்.

"என்னடா..." என்றாள் இரகசியக் குரலில்.

அவன் மௌனமாயிருந்தான்.

"க்கும்...." என்றபடி பலவந்தமாக அவன் முகக்கைத் திருப்பி. இதழ்களில் அழுத்தமாய் முத்தமிட்டாள்.

"துர்வாச முனிவரின் கோபம் தணிந்ததா?" என்றாள் சிரித்தபடி. விழிகளில் குறும்பு மின்னியது.

இதற்காகத்தான் நாக்கைத் தொங்கப் போட்டபடி நாம் காத்திருந்தோமாம்! இனி மற்றுமொன்றுக்காக ஹி ஹி.. என்று அவளோடு இழைய வேண்டுமாம்... எதிர்பார்க்கிறாள். எல்லாம் அவள் வட்டம். அவள் சட்டம். அவளிடமிருக்கும் படைக்கலகங்களுக்குச் சரணடைந்து விடவேண்டும் நாம்....

அக்கம்பக்கம் பார்த்துவிட்டு அவள் மீண்டும் அவன் கன்னங்களைத் தன் கைகளால் அழுத்திப் பிடித்தாள். உதடுகளைக் குவித்து, விழிகளில் குழந்தையைக் கொஞ்சும் தாயின் பரிவு தெரிய அவன் முகத்தை நெருங்கினாள்.

**தருவது**
**முழடில்யன்**

அவன் கைகளால் அவள் முகத்தை விலக்கினான். முகத்தைத் திருப்பியபடி, "உன் செல்ல நாய்க்குட்டிக்கு கட்டி வைத்துக் காத்திருக்க வைத்துச் சோறு போடுகிறாயா?" என்றான்.

அவள் சட்டென்று கைகளைத் தளர்த்தினாள். முகம் வாடித் துவண்டது. பரிதாபமாக அவனைப் பார்த்தாள்.

அவனுக்குள் குரூரத் திருப்தி மிதந்தது.

அவள் கண்கள் கலங்குவது போலிருந்தது. உதடுகள் துடித்தன. அழப்போகிறாளா என்ன? இவர்களிடம் தான் எத்தனை அஸ்திரங்கள்!

அவளை விட்டு விலகி அமர்ந்தான்.

சிறிது நேரம் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் நீர் தளும்பிவிட்ட கண்களை மறைக்கச் சிரமப்பட்டாள்.

இவனுக்குள் குரூரம் வடிந்து இரக்கம் ஏற்பட்டது.

அவள் விசும்புவதைப் பார்த்தான். மார்பங்கள் எழும்பித் தணிந்தன.

கண்ணீரை அவன் பார்த்துவிடக் கூடாது என்ற முயற்சியில் முழங்காலில் ஊன்றிய கைகளால் கன்னத்தை மறைத்துக் கொண்டிருந்தாள்.

சேலை விலகியதில் அவள் இடைப் பகுதியும் துடிப்பது தெரிந்தது.

மெல்ல அருகே சென்று அவள் இடையைக் கரங்களால் சுற்றி வளைத்தான். கன்னத்தில் மென்மையாக முத்தமிட்டான்.

அவள் முகத்தைத் திருப்பினாள். முதுகுப்புறம் முழுவதும் குலுங்கியது.

அவள் தோளிலே மோவாயை வைத்துக் கொண்டு, பின்புறமிருந்து கன்னத்தை உராய்ந்தபடி, "சொறி" என்றான் அவள் உயிருக்குள் இரகசியமாய் ஊடுருவும் குரலில்.

அவள் மூக்கை உறிஞ்சினாள். தன் உடலைச் சுருக்கிக் கொள்ள முனைந்தாள்.

அவன் கரங்கள் சற்று மேலுயர்ந்தன. பின்புறமாகவே அவளைத் தன்னோடு இறுக்கினான். ஆவேசம் கொண்டவனாக அவள் விழிநீரைத் தன் இதழ்களினால் ஒற்றியெடுத்தான்.

அவள் விலகாமலும், இழையாமலும் அவன் இழுத்த இழுப்புக்கு அசைந்து கொண்டிருந்தாள்.

"என் கண்ணெல்லே... அதெல்லாம் மறந்திடடா..." அவன் கொஞ்ச நேரம் இதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தான்.

பின்னர் தூங்கி விட்டானோ என்ற ஐயப்படும் படியாக, அவன் தோளிலே மௌனமாய்ச் சாய்ந்திருந்தாள்.

அவள் சேலைத்தலைப்பால் தன் முகத்தைத் துடைத்துக் கொண்டு திரும்பினாள். அவன் தலையை நிமிர்த்தினாள்.

அவன் பரிதாபகரமாக, "என்னை மன்னிச்சுடடா" என்றான்.

அவனை நெஞ்சோடு இழுத்தணைத்தபடி, "என் செல்ல நாய்க்குட்டி!" என்றாள்.

அவன் ஒருகணம் மலைத்துத் துவண்டு, பின் தன் முகத்தை அவள் கழுத்துக்குள் புதைத்து ஆவேசத்துடன் இயங்கினான்.

கடற்காற்றும் அலையோசையும் அவர்களுக்கு லயம் சேர்த்தன. வெயிலில் அவர்களது உடல்கள் மினுங்கின.

**இல்லை தவறவர்க் காயினும் ஊடுதல்**
**வல்ல தவரளிக்கும் ஆறு.**

(குறள்: 1321)

# ஸ்போர்ட்ஸ்

## 8000 பட்டியலில் இணைவு



அவுஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட வீரர் மார்க் வோவ் ஒருநாள் போட்டிகளில் 8 ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் எடுத்த வீரர்கள் பட்டியலில் இணைந்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிராக கடந்த பெப்ரவரி 9ம் திகதி மெல்போர்ண் நகரில் நடந்த போட்டியின் போது 173 ஓட்டங்களைக் குவித்ததன் மூலம் இந்த மைல்கல்லை எட்டினார்.

வோவிற்கு முன்பதாக 8 ஆயிரம் ஓட்டங்களை ஒருநாள் போட்டிகளில் எட்டியவர்கள் நால்வர். அவர்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:

முதலாவதாக இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர்-263 போட்டிகளில் 9899 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இரண்டாவதாக இந்திய முன்னாள் வீரர் முஹம்மட் அஸாருதீன் 334 போட்டிகளில் 9378 ஓட்டங்களை எடுத்துள்ளார். மூன்றாவதாக மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் வீரர் டெஸ்மண்ட் ஹெய்ன்ஸ் 238 போட்டிகளில் 8648 ஓட்டங்களை எடுத்துள்ளார். நான்காவதாக இலங்கை வீரர் அரவிந்த டி சில்வா 274 போட்டிகளில் 8427 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

ஐந்தாவது இப்பட்டியலில் இணைந்திருக்கும் மார்க்வோவ் 230 போட்டிகளில் 8107 ஓட்டங்களை எடுத்திருக்கின்றார். இவரது சராசரி 39.55 ஆகும்.

36 வயதான மார்க் எட்வேர்ட் வோவ், அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் பிறந்தவர். அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்டீவன் ரொட்ஜர் வோவின் சகோதரராவார்

இவர் 230 ஒருநாள் போட்டிகளில் 223 இன்னிங்ஸ்களில் 8107 ஓட்டங்கள் எடுத்திருக்கிறார். இவற்றில் 18 போட்டிகளில் ஆட்டமிழக்காமல் இருந்துள்ளார். 17 சதங்களும் 49 அரைச் சதங்களும் அடித்துள்ள மார்க் வோவ், 13 தடவைகள் டக்-அவுட் ஆகியுள்ளார்.

ஒருநாள் போட்டிகளில் இவர் அடித்த அதிகபட்ச ஓட்டங்கள் 173. மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிராக 148 பந்துகளில் இவர் எடுத்த இந்த ஓட்ட எண்ணிக்கைதான் அவுஸ்திரேலியா சார்பாக ஒரு வீரர் எடுத்த அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை ஆகும். இதற்கு முன் அடம் கில்கிறைஸ்ட் 154 ஓட்டங்களைக் குவித்திருந்தார்.

அத்துடன் மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிராக ஒருநாள் போட்டியில் பெறப்பட்ட அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையும் இதுவாகும்.

## இரண்டாவதில் இங்கிலாந்து வெற்றி

இலங்கை-இங்கிலாந்து அணிகளுக்கிடையே கண்டி, அஸ்கிரிய மைதானத்தில் நடந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து 3 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியுள்ளது.

முதல் டெஸ்ட்டைப் போன்றே இரண்டாவது டெஸ்ட்டிலும் நடுவர்களின் தீர்ப்புக்கு சர்ச்சைகள் எழுந்தன. முதல் டெஸ்ட்டில் இலங்கைக்குச் சார்பாகவும் இரண்டாவது டெஸ்ட்டில் இங்கிலாந்திற்குச் சார்பாகவும் நடுவர்களின் தீர்ப்புக்கள் அமைந்திருந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 297 ஓட்டங்களை எடுத்தது. (ஜயவர்த்தன-101, அர்னோல்ட்-65, டரன் கொஃப்-4/73)

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 387 ஓட்டங்களை எடுத்தது. (நஸார் ஹுஸைன்- 109, கிரஹாம் தோர்ப்-59, அலெக் ஸ்ருவர்ட்-54, முரளீதரன்-4/127)

இங்கிலாந்தை விட 90 ஓட்டங்கள் பின்தங்கியிருந்த இலங்கை இரண்டாவது இன்னிங்ஸில் 250 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது. (சங்கக்கார-95, தர்மசேன-54, டரன் கொஃப்-4/50)

வெற்றிபெற 161 ஓட்டங்களை எடுக்க வேண்டிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய இங்கிலாந்து 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கைத் தொட்டது.

இரு இன்னிங்ஸ்களிலும் சேர்ந்து 8 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய டரன் கொஃப் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

3 டெஸ்ட்களைக் கொண்ட தொடரில் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் இரு அணிகளுக்குமிடையிலான 3வதும் இறுதியுமான டெஸ்ட் மார்ச் 15 முதல் 19 வரை கொழும்பில் நடைபெறுகிறது.

# சிந்தியா பதில்கள்

★ 'சிந்தியா பதில்கள்' என்பது சிந்திக்காமல் பதிலளித்தல் எனவும் பொருள்படுகின்றதே. அப்படியானால் வாராவாரம் நீங்கள் சிந்தியாமலா பதிலளிக்கிறீர்கள்?

பி.ஏ.கிரேஸ்டா, எட்டியாந்தோட்டை.

ஆமாம்! சிறியன சிந்தியாமல், அதுசரி, சும்மா ஒரு பேர் வைத்ததற்கு இந்த லொள்ளுப் பண்ணுகிறீர்களே... ஆரோக்கியசாமி என்று பெயர் வைத்தால் அந்த ஆளுக்கு வருத்தமே வரக்கூடாதா? அல்லது பி.ஏ.கிரேஸ்டா பி.ஏ.படித்திருக்க வேணுமா? என்னங்கடா இது!

★ ஒவ்வொரு ஆணின் கண்ணீருக்குப் பின்னால் ஒரு பெண் இருக்கிறாளாம். அது உண்மையா?

விஜயா செல்வராஜ், பூண்டுலோயா.

எல்லோருடைய கண்ணீருக்குப் பின்னாலும் இருப்பது கண்தான்!

★'கண்ணுக்குக் கண்ணாக' படம் பார்த்தீர்களா? கதையின் கரு என்ன? சோதிடம் பொய் என்பதா? கண்டங்களிலிருந்து தப்புவதன் மூலம் விதிகூட மாறிவிடும் என்பதா? பாசப் பிணைப்பு மரணத்தையே மாற்றி விடும் என்பதா? தியாக உள்ளங்களினால் தெய்வ சங்கற்பத்தையே மீறிவிட முடியும் என்பதா?

க.கமால்தீன், ஏறாவூர்-03.

இப்படியே இன்னும் சில படங்கள் வந்தால், எமக்கு மண்டை காய்ந்துவிடும் என்பது!

★ சிந்தியா! லிவிங்ஸ்டன் நடித்த முதல் திரைப்படம் எதுவென்று கூறுவீர்களா?

இ.அஜந்தினி, திருகோணமலை.

கூறினால் போச்சு. விஜயகாந்த் படமான 'பூந்தோட்டக் காவல்கார'னில் வில்லனாக அறிமுகம்.

★ ஏன் தனியார் வானொலிகள் ஒன்றையொன்று போட்டி போட்டுக்கொண்டு குறை கூறுகின்றன?

ஆர்.எப்.நஸ்லியா, நிககொல்ல.

என் வருத்தமும் அதுதான். நேயர்களைத் தங்கள் தங்களுக்கென்று கோஷ்டியாகச் சேர்த்துக் கொள்வதில் காட்டும் அக்கறையை தரமான நிகழ்ச்சிகளைத் தயாரித்துத் தருவதில் காட்டினால், எல்லோரும் ரசித்துக் கேட்கலாமே!

ஊருக்குள் பயந்தவன் உரத்துச் சத்தம் போட்டுச் சண்டியனாவது போல, தங்களிடம் தெம்பு இல்லாதவர்கள்தான் வம்புகளின் மூலம் தமை வளர்க்கப்பார்ப்பார்கள்.

ஸ்டூடியோவுக்குள்ளிருந்து எந்நேரமும் தொலைபேசியிலேயே சத்தற்று உரையாடிக் கொண்டிருப்பதைக் கொஞ்சம் நிறுத்தி, புதிது புதிதாய் நிகழ்ச்சிகளைத் தொகுத்துத் தர மூளையைக் கசக்குங்கள் சூரிய, சுவர்ண, சக்திக் குஞ்சுகளே!



'அசோகவனம்' படத்தில் லிவிங்ஸ்டன்-மோகனராம்.

★வீதியில் போகின்ற பெண்களைப் பார்த்துக் கிண்டல் அடிப்பவர்களுக்கும், பின்னாலும் முன்னாலும் சுற்றித் திரிபவர்களுக்கும் என்ன செய்யலாம்?

ரீ.சுமதி, தேக்கவத்தை.

பருவமடைந்தவுடன் உங்களுக்குள் ஏற்படுகிற மாற்றங்கள் போல, அவர்களுக்கும் சும்மா இருக்க முடியாத சில தொந்தரவுகளை ஹோமோன்கள் ஏற்படுத்துகின்றன. நம் மூதாதையரின் தாக்கம் வெகுவாக நம்மைப் பீடித்துக் கொள்ளும் பருவம் அது. கிளைகளில் முன்னாலும் பின்னாலும் தாவி, மூக்கைச் சொறிந்து கேலிக் கூச்சலிட்டுக் கொண்டிருப்பவர்களைச் சகித்துக் கொள்வது போல, சைக்கிள்களிலும் மதில்களிலும் பஸ்களிலும் அவர்களைச் சகித்துக் கொள்ள முடியாதா என்று பாருங்கள். அந்த வயதை ரசியுங்கள். அளவுக்கு மீறி உங்கள் மேல் பாய முற்பட்டால் அடி கொடுங்கள், போதும்!

★ தமிழ் மக்களின் எதிர்காலம்?

தா.பராபரன், யாழ்ப்பாணம்.

வழக்கம் போலதான். உணர்ச்சிகரமானகோஷங்களெல்லாம் நம்மைக் கைவிட்டுவிட்டதென்றால், 'எங்களுக்குத்தான் இது அப்பவே தெரியுமே...' என்று மேலும் ஓங்கி ஒரு மிதி மிதித்துவிட்டு, அடுத்த ஒரு பூதத்திடம் நம்மை ஒப்புக் கொடுத்து உணர்ச்சிமயக் கோஷத்திலேயே நம்மை இழந்து சென்று கொண்டிருப்போம்!

★ பானுப்பிரியா இப்போது சினிமாவில் நடிப்பதில்லையா? தயவு செய்து அவரின் முகவரி தரமுடியுமா?

ஜீ.ராணி,

திரைப்படங்களில் இனி யார் சான்ஸ் தருவார். சின்னத்திரையின் முழுநேர நாயகியாகி ஏ.வி.எம்.மிடம் சரண்புகுந்து விட்டார். அங்கேயே தங்கி இருப்பதாகவும் தகவல்.

ஆனால், அவரது நிரந்தர முகவரி இதோ:

இல:5, முதல் குறுக்குத் தெரு, விஜயராகவா சாலை, சென்னை 600 017.

# மன்னாதி மன்னன் 49

## காதலியைக் கவிட்ட மந்திரிகுமாரன்

**இராஜகுமாரன்**

பேசாமடந்தையைப் பேச வைத்த தற்காக அவள் அணிந்திருந்த ரவிக்கையைக் கதை கூறுமாறு விக்கிரமாதித்தன் ரவிக்கைக்குள் வேதாளத்தை ஏவிவிட்டான். ரவிக்கையுள் புகுந்த வேதாளம், தான்மூச்சு விடவே முடியாத நிலையி லிருப்பதாகக் கூறி, இந்நிலையில் எவ்வாறு கதை சொல்ல முடியும் என்று புலம்பியது. இதனைக் கேட்ட பேசாமடந்தை ரவிக்கையைக் கழற்றி வீசியெறிந்தாள். அவளுக்கும் விக்கிரமாதித்தனுக்குமிடையில் வந்து விழுந்த ரவிக்கை கதை கூறத் தொடங்கியது. இக்கதையில் ரங்கநாதபுரம் என்ற நாட்டை ஆண்டு வந்த மன்னவனின் மகள் மோகனாங்கிக்கும், அமைச்சர் மகன் மதிவல்ல வனுக்கும் இடையில் காதல் கொண்டது.

இரவு வேளைகளில் மன்னன் மகளுடைய காதலன் மதிவல்லவன் மோகனாங்கியுடன் பழகி வந்தான். இதனால் மோகனாங்கி கருவுற்றாள்.

திருமணம் முடிக்காமல் கர்ப்பவதியாகி விட்ட தன்னை மன்னவன் கொன்று விடுவான் என்ற பயத்தில் அன்றிரவு அவளைக் காண வந்த காதலன் மதிவல்லவனிடம் தன் நிலைமையை எடுத்துக் கூறினாள். அப்போது அவள் நான்கு மாதங்கள் கர்ப்பம் தரித்த நிலையிலிருந்தாள்.

என்ன செய்வதென்று தெரியாமல் பதற்ற முற்ற இருவரும் இரவோடிரவாக ரங்கநாத புரத்தைவிட்டு வெளியேறிவிடத் தீர்மானித்த னர்.

இருவரும் அடர்ந்த கானகத்தினூடாக



நாட்டை விட்டுப் புறப்பட்டனர். கால் போன போக்கில் நான்கு மாதங்கள் அங்கும் இங்கும் அலைந்து திரிந்து கோதாபுரி என்ற நகரத்தையடைந்தனர். மோகனாங்கி அப்போது எட்டு மாதங்கள் கருவுற்றிருந் தமையினால், அவளால் மேற்கொண்டு அலைந்து திரிய முடியவில்லை. நகர எல்லை யிலிருந்த ஒரு சத்திரத்தில் இருவரும் தங்கி னார்கள்.

மேலும் சில வாரங்கள் சென்றபின், மோகனாங்கிக்கு இடுப்புவலி கண்டது. எந்த நேரத்திலும் குழந்தை பிறக்கலாம் என்று கருதியமையினால், அடுத்த ஊருக்குச் சென்று ஒரு மருத்துவச்சியை அழைத்துவர மதிவல்லவன் புறப்பட்டான். அவனும் ஊர் முழுவதும் தேடியும் ஒரு மருத்துவச்சி கிடைக்க வில்லை. மோகனாங்கி பிரசவ வேதனை யால் துடித்தாள்.

சரியான வெயிலில் அலைந்து திரிந்தமை யினால் மதிவல்லவன் களைப்புற்று ஒரு வீட்டின் முன்புறம் களைப்பாறப் படுத்திருந் தான். சற்று நேரத்திற்கெல்லாம் அந்த வீட் டின் உரிமையாளரான தாசி சுந்தரி வெளியில் வந்து பார்த்தபோது, அழகான ஓர் இளைஞன் அங்கு படுத்திருப்பதைக் கண்டாள். தாதி யரைக் கொண்டு அவனை எழுப்பி உள்ளே அழைத்தாள். அவனுடைய களைப்பு நீங்கு வதற்காக முதலில் பருகுவதற்கு அவனுக்கு மோர் கொடுத்தாள். பின்னர் அவனுக்கு உணவும் படைத்தாள். உணவு உட்கொண்ட பின் அவன் எதற்காக அங்கு வந்து சேர்ந்தான் என்று மதிவல்லவனிடம் கேட்டாள்.

ரங்கநாதபுர இளவரசி மோகனாங்கியை காதலித்து அவளுடன் நாட்டை விட்டு வெளியேறி வந்துவிட்டதாகக் கூறிய மதிவல்லவன், தன் மனைவி பிரசவ வேதனையில் அவதிப்பட்டுக் கொண்டிருப் பதாகவும் ஒரு மருத்துவச்சியை அழைத்துக் கொண்டு போவதற்காக தான் இங்கு வந்து விட்டதாகவும் கூறினான். அந்த வீட்டில் வாழ்ந்து வந்தவள் சுந்தரி என்ற மதி வல்லவனிடம் அவள்தன் மனதை பறி கொடுத்துவிட்டாள். ஆகவே மதிவல்ல வனை விட்டுப் பிரிய அவள் மனம் ஒப்ப வில்லை. அவனை தன்னுடன் எப்போதும் வைத்துக் கொண்டிருக்கவே அவள் விரும்பினாள். இதற்காக ஒரு தந்திரம் செய்தாள். ஒரு வெற்றிலைத்தட்டுடன் தன் தாதியை மதிவல்லவனிடம் அனுப்பிவைத் தாள்.

வெற்றிலையையெடுத்துத் தன் வாயில் போட்டு மென்று கொண்டிருந்த மதி வல்லவன் திடீரென எருமையாக மாறி விட்டான். மாட்டின் கழுத்தில் ஒரு கயிற்றைக் கட்டி வீட்டின் பின்புறமாகவிருந்த தொழு வத்தில் தாசி சுந்தரியின் தாதி கொண்டு போய்க் கட்டி வைத்தாள்.

இரவானதும் எருமையுருவில் இருந்த மதிவல்லவனை மனிதனாக்கி, தாசி சுந்தரி இரவு முழுவதும் அவனுடன் மகிழ்ச்சியாக இருந்தாள். மதிவல்லவனும் தன் நிலை உணராதவனாக-தன் மனைவி மோகனாங்கியையும் அவள் நிலையையும் முற்றிலும் மறந்து, தாசி சுந்தரியுடன் மிக்க மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தான்.

மோகனாங்கி தன் கணவன் எங்கு சென்றான் என்று தெரியாமல் தவித்தாள். சத்திரத்திலிருந்த சிலருடைய உதவியால் அழகான ஓர் ஆண் குழந்தையைப் பெற் றெடுத்தாள். இதன் பின்னர் அரசகுமாரி யான மோகனாங்கி அடுத்து என்ன செய்வ தென்று தெரியாமல் திண்டாடினாள். கோதாபுரி நகரெங்கும் தன் கணவனைத் தேடி அலைந்தாள். அவனை எங்குமே காண முடியவில்லை. மிகவும் சோர்வடைந்த நிலையில் அந்த நாட்டு அரசனுடைய உதவியை நாடி அரண்மனைக்குச் சென்றாள்.

அரசரைக் கண்டு தான் ரங்கநாதபுரம் மன்னன் மதிவாணனின் ஒரே மகள் என்றும் மந்திரியின் மகனான மதிவல்லவனைக் காதலித்து கருவுற்றபின்னர் காதலனால் கைவிடப்பட்டநிலையில் இருப்பதாகத் தெரிவித்தாள்.

மன்னர் அவளுடைய பரிதாப நிலையைக் கண்டு, எப்பாடுபட்டாவது அவளுடைய கணவனைக் கண்டுபிடித்துத் தருவதாக வாக்களித்தான். அதுவரை தன்னுடைய அரண்மனையிலேயே தங்கியிருக்கும்படி மோகனாங்கிக்குச் சொன்னான்.

மோகனாங்கியிடம் சொன்னது போல் அரசன் தன் நாடெங்கும் முரசறைந்து மதிவல்லவன் பற்றிய தகவல்களை பறை சாற்றி தேடி வருமாறு ஏற்பாடுகளைச் செய்தான். ஆனால் எதுவித பலனும் கிடைக்கவில்லை. பறை பறைவோரும் பகல் வேளையிலேயே நகரங்களில் வலம் வருவார்கள். அந்த வேளைகளில் மதி வல்லவன் எருமை மாட்டின் உருவில் இருப்பதனால் அவற்றைத் தெரிந்து கொள்ள முடியவில்லை.

தன் காதலன் இனிமேல் கிடைக்கப் போவதில்லை என்று கருதியமையினால், தான் இனி உயிருடன் வாழ்ந்து பயனில்லை; தன் குழந்தையை எடுத்துக் கொண்டு தீயில் விழுந்து இறந்துவிடுவதற்குத் தீர்மானித் தாள்.

மன்னனிடம் தான் தீயில் இறங்குவதற்கு ஏற்ற ஒரு தீக்குழி அமைத்துத் தரும்படி கேட்டுக் கொண்டாள். அரசனும் எவ்வளவோ தடுத்தும் அவளுடைய முடிவை மாற்ற முடியவில்லை. எனவே ஒரு தீக்குழியை அமைக்குமாறு தனது ஏவலாளர்களைப் பணித்தான்.

அன்றொருநாள் மாலை வேளையில் மோகனாங்கி என்ற இளவரசி தன் குழந்தை யுடன் தீக்குளித்து மாண்டுவிடப் போவதாக முரசறைவோரை அனுப்பி நகரெங்கும் செய்தியைப் பரப்பினான்.

தீக்குளிப்பு இடம் பெறவிருக்கும் பகுதியைச் சுற்றி வேடிக்கை பார்க்க அந்த நகரத்து மக்கள் அனைவரும் ஒன்று கூடினார் கள். இந்தச் சம்பவத்தைப் பார்ப்பதற்கு மதிவல்லவனும் தாசி சுந்தரியுடன் வந்திருந் தான். ஆனால் அப்போதும் தன்னால் கைவிடப்பட்ட தன் காதலியும் தன் குழந்தை யும் தான் தீயில் குதிக்கப் போகிறார்கள் என்பதை அவன் அறிந்திருக்கவில்லை.

மோகனாங்கி தன் குழந்தையையும் தோளில் சுமந்த வண்ணம் தீக்குழியை வலம் வந்து கொண்டிருப்பதை நேரடியாகக் கண்ட பின்னர்தான் மதிவல்லவன் தன் சுயநினை வைப் பெற்றான். ஓடிச் சென்று தன் மனைவி யைத் தடுப்பதற்கு முயற்சித்தான். ஆனால் அதற்கிடையில் மோகனாங்கி தீக்குள் இறங்கி விட்டாள். அவன் கதறியழுதான்.

தன்னால் கைவிடப்பட்ட தன் காதலியும் தன் மகனும் தீயில் மாண்டபின்னர் தான் மட்டும் உயிர் வாழ்ந்து என்ன பயன், என்று கருதிய மதிவல்லவன் அதே தீயில் புகுந்து மாண்டான். இதனைக் கண்ட தாசி சுந்தரி யும், தன்னால் தானே இந்த இளம் குடும்பம் இக்கதிக்குள்ளானது என்று அழுதுபுலம்பி, அதே தீயினுள் வீழ்ந்து இறந்தாள்.

மோகனாங்கி தன் குழந்தையுடன் நெருப்பில் விழப்போவதைப் பார்ப்பதற்கு அரசன் தர்மாங்கதன் அவனுடைய அமைச்சர் கள் புடைசூழ வந்திருந்தான். 'எனது அரண்மனையுள்ள நகரத்திலேயே வசித்து வந்த தாசி சுந்தரியின் வீட்டில் மதிவல்லவன் இருந்திருக்கிறான் என்பதைக் கண்டறிய முடியாத அரசனாக நான் இருந்திருக் கிறேனே' என்று வருந்திய மன்னன் தன்னுடைய குல தெய்வமான காளிகாம்பாள் கோவிலுக்கு ஓடிச் சென்றான்.

அம்பாளின் சந்நிதியில் தன் உடைவாளை உருவியபடி, "தாயே காளிகாம்பா இன்று வரை உன் அருளால் நீதி தவறாமல் ஆட்சி புரிந்து வந்தேன். ஆனால் ஒரு தாசியின் வீட்டில் மறைந்திருந்த ஒருவனைக் கண்டு பிடித்து அவனுடைய காதலியிடம் சேர்த்து வைக்க முடியாமல் போய் விட்டேன். ஆகவே ஏற்கனவே உயிர் துறந்த நால்வருடன் நீதி தவறிய மன்னனான நானும் உன் சந்நிதியில் என் உயிரை மாய்க்கிறேன்!" என்று தன்னு டைய கழுத்தை வெட்டுவதற்காக வாளை ஓங்கினான். அப்போது காளிகாம்பாள் தோன்றி "மகனே! சற்றுப் பொறு" என்று கூறி மன்னவனைத் தடுத்தாள்.

அரசனுடைய நேர்மையை மெச்சிய அம்பாள் "நீ எந்தக் குற்றமும் செய்யாதவன். எனவே, உன் முன்னிலையில் தீயில் புகுந்து மாண்ட நால்வரையும் உயிர்ப்பித்துத் தருகிறேன்," என்று கூறி வரமளித்தாள்.

அம்பாளின் அனுக்கிரகப்படி நால்வரும் உயிர் பெற்று எழுந்தனர். இந்த அளவில் கதையை முடித்துக் கொண்ட ரவிக்கை, ஒரு கேள்வியைக்கேட்டது.

"உயிர்துறந்த நால்வரில் உண்மையான தியாக உள்ளம் படைத்தவர் யார்?" என்பது தான் அக்கேள்வி.

*(மன்னன் வருவான்...)*

---

# காதில பூ கந்தசாமி

*கீழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி, அல்லது போட்டோ பிரதி செய்து 'காதில பூ கந்தசாமி' என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் கீழே.*

### சத்தியக் கடதாசி:

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:.............. பெயர்:..................... ஒப்பம்:..................



**நோட்டீஸ்பலகை**

**நான் சொல்வதெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை**

**-காதில பூ கந்தசாமி**

**அபிமான வாசகர் போட்டியில் இரண்டாவது: பொய்மையைப் போற்றி இரண்டு வரியில் ஒரு கவிதை எழுதுக. சிறந்த கவிதைக்குப் பரிசளிக்கப்படும். முடிவுத் திகதி மார்ச் 31. பெறுபேறுகள் மே முதல்வாரத்தில்.**

*ஹல்லோ, மை டியர் ஃபிரண்ட்ஸ்! கிளாட் டு மீட் யு எகைன்! என்ன ஒரே குஷி மூடில இருக்கிறனெண்டு பாக்கிறீங்களா? ஒண்டுமில்ல. இப்பதான் ஒருத்தரைப் பாத்திட்டு வாறன். அவர் வெளியால இருந்து வந்தவர். சொன்ன சங்கதியக் கேட்டதில புல்லரிச்சுப் போனன். அங்க தாங்கள் தமிழ வளக்கச் சரியான பாடு படுகினமாம். என்னத்த அப்பிடிப் படுகிறியள் எண்டு கேட்டன். சங்கமெல்லாம் கட்டி அடிக்கடி கூட்டம் போட்டு எல்லாரும் தமிழ்ப் பெருமைகளப் பேசிறவையாம். வெள்ளக்காரனுக்கே இப்ப கொஞ்சங் கொஞ்சங் தமிழ்விளங்குதாம். அவற்ர அப்பர் முந்தி தனிச் சிங்களச் சட்டம் வந்தநேரத்தில சிங்களம் படிக்க மாட்ட னெண்டு வேலைய றிசைன்பண்ணின மொழிப்பற்றுக்காறன். நானும் இவற்ர கதையள வாயப்பிளந்து கேட்டுக்கொண்டிருக்க ஒரு வாண்டு ஓடியாந்து "ஹூ இஸ் திஸ்" எண்டு என்னப்பாத்து விரலை நீட்டிச்சுது. "ஹீஸ் மை ஃப்ரெண்ட் ஃப்ரொம் ஜாஃப்னா..." எண்டு துடங்கினவர், தான் அவனுக்கு யாழ்ப்பாணத்தில இருக்கிற தங்கட வீடப்பற்றியெல்லாம் முந்திச் சொல்லியிருந்தத இங்கிலீஷில ஞாபகப்படுத்தி முடிச்சார். அதுதன்ர கடைக்குட்டியாம். சரியான சுட்டியாம். தான் யாழ்ப்பாணத்துக் கதையளெல்லாம் அதுகளுக்கு அடிக்கடி சொல்லுறதாம். நல்லது, தமிழ் வளக்க மண்வாசனையோட வளருந்தானே எண்டுட்டு அந்தச் சுட்டியப்பாத்து கேட்டன் "பிள்ளை எத்தனாம் வகுப்பு படிக்கிறியள்...?" வாண்டு என்னை ஒரு வினோதப் பிறவிமாதிரி ஒரு பார்வை பாத்திட்டு 'மமீ..' எண்டு கத்திக்கொண்டு உள்ளுக்கு ஓடிட்டுது. தகப்பன் பெருமையாச் சொன்னார், அதுக்கு இங்கிலீஷில பேசினாத்தான் விளங்குமாம். அடடட, சொந்தப்பிள்ளைக்கே தாய்மொழி தெரியாத கோலத்தில உவை கல்தோன்றி மண்தோன்ற முந்தித் தோன்றின தமிழப்பற்றி அங்க பெருமை பேசினமாக்குமெண்டு மனசுக்க கரிச்சுக்கொட்டாதேங்கோ சொல்லிப்போட்டன்.*

*விளையாட்டுச் செய்தியொண்டச் சொல்லவேணும் இங்க. முன்னாள் கிரிக்கற் காப்டன் ஒருவர்ர வீட்டுக்குள்ள இன்னாளில கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்த பள்ளிப் பெடியளிண்ட பந்து போய் விழுந்ததால பெடியளுக்கு நல்ல பூசை கிடைச்சுதல்லோ, விஷயமென்னண்டால், விளையாட்டில சகிப்புத்தன்மை வேணுமெண்டு இப்பத்தயப் பெடியளுக்கு விளங்கப்படுத்தத்தான் முன்னாள் காப்டன் அப்பிடியொரு பயிற்சி குடுத்தவராம். மேட்ச் விளையாடக்க எதிரணிக்காறங்கள் இப்பிடித் தாக்கினாலும் நீங்கள் தாங்கிக்கொண்டு போக வேணுமெண்டிறதத்தான் பிறக்டிக்கலா விளங்கப்படுத்தினவராம். 'ஸ்போட்ஸ்மேன்ஷிப்' பாருங்கோ இது. உந்தப் பேப்பர்கள் விஷமத்துக்கு எழுதித்தள்ளுறத நம்பாதேங்கோ.*

*கிட்டடியில ஒரு இங்கிலீஷுப் படமொண்டு நூறு ரூபா டிக்கட்டில மெஜஸ்டிசிட்டிக் தியட்டரில பாத்தன். 'பேற்றியோட்' என்டால் தேசப் பற்றாளன்தானே, ஓம், அப்படித்தான் பெயர் படத்துக்கு. பிரிட்டிஷ் காரனிண்ட படையெடுப்பில இருந்து அமெரிக்காவ மீட்கிறதுக்கு உள்ளூர் விவசாயியள அணிதிரட்டி கெரில்லாப் போர் நடத்தின வாஷிங்டனிண்ட படம். நல்ல தேசப்பற்றுத்தான், குறை நெனைக்க இடமில்லை. ஆனால் பாருங்கோ, தங்கட தேசத்தில போராடினவங்கள தேசப்பற்றாளர்களாப் பாக்கிறவை வெளிநாட்டுகளில போராடுறவங்கள பயங்கர வாதிகளாத் தடைசெய்யிற சூத்திரம்தான் எனக்கு விளங்கேல்ல.*

*சுந்தரமூர்த்தி நாயனாரை நல்லாத் தெரியும்தானே உங்களுக்கு? அவருக்கு நடந்த சோதனை தெரியும் தானே? யாரோ, யாருக்கோ எழுதிக்குடுத்த அடிமைச் சாசனத்தைக் கொண்டுவந்து, இங்கபார், நீ என்ர அடிமை, உனக்கு கலியாணம் காட்சியெல்லாம் இல்லையெண்டு சிவபெருமான் அவரைச் சட்டம்பேசி மடக்கின கதை தெரியும்தானே? அதப்போல இப்ப இங்கயும் ஒரு கதை நடக்குது. யாரோ, யாரோடயோ செய்த ஒப்பந்தத்துக்கு தோட்டத் தொழிலாளர்கள் கட்டுப்பட வேணுமாம். விளங்கேல்லையே, அரசாங்கமும் தோட்டக் கம்பனிகளும் செய்து கொண்ட ஒப்பந்தந்துக்கு எங்கட வாய் பேசத் தெரியாத தோட்டத் தொழிலாளர் கட்டுப்பட வேணுமாம். அவையள் ஸ்ரைக்பண்ணக்கூடாதாம். சம்பள உயர்வு கேக்கக்கூடாதாம். ஏனப்பா, உந்த உடன்பாட்டில எந்தத் தோட்டத் தொழிலாளி கைநாட்டு வைச்சிருக்கிறானெண்டு கேக்க ஒருத்தருக்கும் நாதியில்லை. ஒப்பந்தப்படி ஸ்ரைக்கில இறங்காமல் சத்தியாக்கிரகமிருந்து மன்றாடிப்பாக்கிறார் தொழிற்சங்கத் தலைவர். முயற்சி திருவினையாக்கினால் சந்தோஷம்தான்.*

*நான் நீட்டி முழங்கிக் கதைக்கக்கூடாதெண்டு அடிக்கடி நினைக்கிறனான். எண்டாலும் எப்பிடியோ வாயத் திறந்தால் கதை தன்ரபாட்டுக்கு கொட்டித்தள்ளுது. நானறிஞ்ச, உலகிலேயே அதி ஷோட்டன்ஃபோம் கவிதையொண்டத் தாறன். கவிஞற்ற பெயர் ஒளவையார். கவிதையப் படிச்சிட்டு மீனிங்கை பழைய பாட்டா பாட்டி வீட்டில இருந்தால் கேட்டுத் தெரிஞ்சுகொள்ளுங்கள்.*

வரப்புயர!

**யாவும் கலப்படமற்ற கற்பனை**




பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
Website: www.lgplk.com/arul
436331




## ரத்தக் கண்ணீர்

← வட அமெரிக்காவிலும் மெக்ஸிக்கோவிலும் உள்ள சூடான மணல் செறிந்த பிரதேசங்களில் வாழும் ஒரு வகைப் பல்லி, அதனை நெருங்கும் வரை உயிரற்ற கல்லுப் போலவே காட்சிதரும். ஆனால் அதனைக் கையில் எடுத்தால் அதன் உடலை உப்பிப் பெரிதாக்கிவிடும். அத்துடன் அதன் கண்களிலிருந்து இரத்தத்தைப் பீச்சியடிக்கும்.

அதனை உணவாக உட்கொள்ள வரும் பிராணிகளின் கண்களைக் குறிபார்த்தே அதன் கண்களிலிருந்து பாயும் இரத்தம் அடிக்கப்படும். இதனால் பிடிக்கவரும் பிராணியின் கண்கள் பார்வை இழந்துவிடும்.

இந்தப் பல்லிகளுக்கு தலையில் இரு கொம்புகளும் காணப்படும். பெரும்பாலும் பாலைவனப் பிரதேசத்திலேயே வாழும் இந்தப் பல்லி இனத்தில் 14 வகைகள் உள்ளன.





SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


## பெ(ா)ன்



→ உலகிலேயே மிகப் பெறுமதி வாய்ந்த பேனா என்று கணிப்பிடப்பட்டுள்ள 'மெயிட்டர் ஸ்டக் ரொலிட்டெயர் ரோயல்' என்ற இப்பேனா மொண்ட்பிளாக் நிறுவனத்துக்குச் சொந்தமானது. தூய தங்கத்தினால் வடிவமைக்கப்பட்ட இப்பேனாவில் சிறுசிறு வைரக்கற்கள் ஏராளமாகப் பதிக்கப்பட்டுள்ளன.

இதைப் பென் என்று அழைப்பதை விட பொன் என்று அழைக்கலாம் போலிருக்கிறதே?

உலகிலேயே மிகப் பெறுமதிவாய்ந்த பேனா இதுதான் என்று கூறப்படுகிறது.

அது சரி, 'இப்பேனையால் எழுதுவதற்கான கடதாசி எதனால் ஆக்கப்பட்டிருக்கும்?' என்று பக்கத்து வீட்டுப் பாட்டியம்மா நம்மைக் கேட்டுத் துளைக்கிறார்.

## கவர்ச்சிக் கலக்கல்



## பரிசு



← தங்கம், விலையுயர்ந்த கற்கள் மற்றும் மணிகளாலான அழகிய வடிவத்தில் 'பளிச்' சென மின்னும் இது என்ன தெரியுமா?

மேற்பாகத்தை மட்டும் சற்று உற்றுப்பாருங்கள். ரோமன் இலக்கங்கள் ஒன்றில் இருந்து 12 வரை எழுதப்பட்டிருக்கிறதல்லவா? ஆம் நீங்கள் ஊகித்திருப்பது சரிதான். அழகான கடிகாரமே இது.

நேரம் பார்ப்பதற்கு இவ்வளவு விலையான கடிகாரமா? என்று ஆச்சரியப்படுவதில் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. அன்றாடப் பாவனைப் பொருட்களை அழகுணர்ச்சியோடு பார்க்க விரும்புபவர்கள் அதற்கான விலையைப் பார்க்க மாட்டார்கள். அது மட்டுமன்றித் தமது அன்புக்குரியவர்களுக்கு பரிசளிக்க அழகான பொருட்களைத் தேடி கடை கடையாக ஏறி இறங்குவார்களே தவிர, விலை அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல.

மேற்கத்திய நாடுகளில் காதலர் தினக் கொண்டாட்டங்களின் போது, அதிகமானவர்கள் தமது அன்புக்குரியவர்களுக்குப் பரிசளிப்பது கடிகாரங்களைத்தானாம்.

இங்கிலாந்தில் காதலர்கள் ஒருவருக்கொருவர் தமது அன்பைப் பரிமாறிக்கொள்ள விலையுயர்ந்த கடிகாரங்களைப் பரிசளிப்பதுகாலங்காலமாக நடந்து வருகிறது.

'எந்தப் பணியையும் அந்தந்த நேரத்தில் செய்து வாழ்வில் வெற்றி பெறத்தான், கடிகாரத்தை பரிசாக வழங்கும் சம்பிரதாயமாம்.

## (1வது) பிறந்தநாள் வாழ்த்து



எஸ்.ஆகாஷ் 22.03.2001

கண்டியைச் சேர்ந்த சுரேந்திரன்-சுபாஷினி நிருபா தம்பதியின் செல்வப் புதல்வன் ஆகாஷ் தனது முதலாவது பிறந்தநாளை 22.03.2001ல் கண்டியில் இருக்கும் தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார்.

இவரை கண்டியில் இருக்கும் அப்பம்மா,அப்பப்பா, கொழும்பில் இருக்கும் அம்மம்மா, அம்மப்பா, அத்தைமார், மாமாமார், சித்திமார், சித்தப்பாமார், அக்கா கீர்த்தனா, அண்ணா டெய்ஷான், வவுனியாவில் இருக்கும் பெரியப்பாமார் பெரியம்மாமார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஆகாஷை பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்: அம்மம்மா (ராஜேஸ்வரி)

† பொப் இசை அரசி மடோனா மீது இரசிகர்கள் எந்த அளவுக்கு பைத்தியமாக இருந்தார்களோ, அந்த அளவுக்கு இப்போது பொப் இசை இளவரசி பிரிட்னி ஸ்பியர்ஸ் மீது பைத்தியமாக இருக்கிறார்கள் இரசிகர்கள் பலர்.

19 வயதான பிரிட்னி மீது இவ்வளவு அபிமானம் வரக் காரணம் இவரது இனிமையான குரல் வளம் மட்டுமன்றி கவர்ச்சியான தோற்றமும் தான்.

உலகம் முழுவதிலும் கோடிக்கணக்கான இரசிகர்களைப் பெற்றிருக்கும் பிரிட்னி கவர்ச்சியான உடையணிந்து எப்போதும் கலக்கலாகத்தான் இருப்பார்.

கடந்த வருடத்திற்கு முந்தைய வருடம் உலகில் கவர்ச்சிகரமாக உடையணியும் பெண்கள் வரிசையில் 6வது இடத்தைப் பிடித்திருந்தார் பிரிட்னி. அப்போது இவருக்கு வயது 17. கடந்த ஆண்டில் கவர்ச்சியாக உடையணியும் பெண்கள் வரிசைப் பட்டியலை அண்மையில் வெளியிட்டுள்ளார்கள்.

இந்தப் பட்டியலில் முதல் இடத்தில் இருக்கிறார் பிரிட்னி. படத்தைப் பார்த்தாலே தெரிகிறது என்கிறீர்களா? அதுவும் சரிதான்.

→ பிரித்தானியா-எடின்பரோவைச் சேர்ந்த எலைன் டேவிட்சன் என்ற இம்மாது தன்னுடைய உடம்பெங்கணும் மொத்தம் 462 குத்தல்களைப் போட்டு உலோக அணிகளைச் செருகி சாதனை புரிந்துள்ளார். தலையில் மட்டும் இவர் 192 அணிகளைச் செருகியுள்ளார்.

நம் நாட்டிலெல்லாம் ஆண்டவனுக்கு நேர்த்திக்கடனை நிறைவேற்ற உடலில் வேல்பாய்ச்சுவார்கள். மலேசியாவில் உள்ள பட்டுமலை முருகன் கோவிலில் உற்சவங்களில் பெருந்தொகையான வேல்களை உடம்பு முழுவதும் குத்தி காவடி எடுப்போரின் படங்களும் வெளியாகியுள்ளன.

## குத்தல்

